ACC.NO. 33782

ஓம் பரப்பிரம்மணேநம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத்
தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ் ஜி. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

COPY RIGHT] [REGISTERED

கமலம்-3. Vol. 3. | சென்னை: விபவ௵ தை௴ 1௳ 1929-ம் ௵ ஜனவரி௴ 15௳ | இதழ்-34. No. 34.

ஆனந்த தரிசனம்

"சங்கு சக்கரந் தங்கு செங்கைமால்
எங்கு மிக்குறை யெங்குலக் கிறை."

"வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை" சுத்தமான படிகம் போன்ற வெண்ணிறம் பொருந்திய உள்ளத்திற்குக் கபடமான எண்ணமே இராது; கபட எண்ண மில்லாமையினால் பிறர் பொருளை விரும்பல், பிறமாதரை நோக்கல் முதலிய துர்க்குணங்கள் நிகழா. இவை நிகழாமையினால் பாவமில்லாதவனாகின்றான். பாவமில்லாதவ னானபோழ்தே புண்ணியஞ் செய்தற்கு அருகனாகின்றான். புண்ணியஞ் செய்தற் கருகனானவன்றே மண்ணுலகினர் மதிக்கும் அண்ணலான பரமபதியைக் கைத்தொழுங் கடமை யுடையோனாகின்றான். அதனால் இனிப் பிறவாமையையும் நிரதிசயானந்தத்தையும் அது முறையே தரா நிற்கும். கடைசியிற்கூறின நிரதிசயானந்த இன்பத்திற்குத் தானே அநேகர் அநேக விதமான நன்மார்க்கங்களைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். ஒவ்வொரு மார்க்கங்களிலும் இருப்பவர்களும் இருந்தவர்களுமான முன்னோர்கள் எவரெவர் எந்தெந்த மார்க்கானுசாரியாக இருந்தனரோ அவரவர் அந்தந்த மார்க்கத்தையே சிறந்ததாகக் கொண்டனர்; இதர மார்க்கங்களை எளிதில் நிரதிசயானந்த இன்பத்தைத் தரும் மதமாக ஒப்புக்கொண்டாரில்லை. இவ்வண்ணமே ஒவ்வொரு மதஸ்தரும் "தான் நின்ற மதமே சிறந்தது; இதர மதத்தில் சிறந்த அனுஷ்டானமில்லை; இதர மத அநுஷ்டானங்கள் பிறவிக்கே எதுகாம்; பிறவியை இனித் தராத மதம் எமது மதமே; இது தான் ஞானிகளால் ஒப்புககொள்ளப்பட்ட மதம்; மற்றது ஞானிகள் ஒப்புக் கொண்ட மதமன்றாம்" என்று பிறமதங்களைக் கண்டனம் செய்து சுய மதத்தை ஸ்தாபனம் செய்திருக்கின்றார்கள்; செய்கின்றார்கள். ஒவ்வொருவரும்

காமம் மூளையைப் பற்றினால் காத வழியாயினும் கடுக்காது செல்வர்.

இவ்வண்ணம் உரைத்தற்குக் காரணம் அந்தந்த மார்க்கத்தில் அவரவருக்குள்ள ஆழ்ந்த பற்றுதலேயாம். முதன்முதலில் ஒவ்வொரு குருமார்களும் தாம் நின்ற மார்க்கமே சன்மார்க்கமென்பதற்கு ஒவ்வொரு நியாயங்காட்டி யிருக்கின்றார்கள். பலவித மஹிமைகளையும் புரிந்துள்ளார்கள். இந்த ஒவ்வொரு குருமார்களின் அபிப்பிராயமும் தமது அநுஷ்டானத்தைப் பிறரும் அநுஷ்டிக்கவேண்டும்; அதனால் தாம் அடைந்த இன்பத்தை உலகினரும் அடையட்டுமென்பதேயன்றி வேறின்றாம். இத்தகைய ஆசார வேறுபாடுகளைப் பொதுநோக்காகப் பார்த்தவர்கள் பிறாது மதாசாரங்களை இகழார். தமது மதநெறியிலும் பிசகாது நின்று இறைவனைப்போற்றி நிரதிசயானந்த இன்ப மெய்துவர். நிஷ்கபடமான சிந்தையில்லாதவருக்கு இந்த ஸமரஸப் பான்மையும் உத்தம திருஷ்டியும் எங்ஙனம் நிகழும்? முக்கியமாக மனிதர்களுக்கு நல்ல மனதுதான் பிரதானமாகவேண்டும். மனம் பரிசுத்தமாயிருப்பின் பகவானைக் கிட்டுவது வெகு சுலபமாய்விடும்.

* *
*

"குருவிக்கியற்கை கூடுபின்னல்" சிறிய மூக்கும் காலுமுள்ளதான தூக்கணங் குருவியைப் பலரும் கண்டிருப்பார்கள். அது பனைமடல் நுனி முதலியவற்றின் சிறிய நாருகளால் மனிதராலியற்ற வியலாவண்ணமாக கூடொன்று, இரண்டு துவாரமுடையதாகப் பின்னுகின்றதே. அதற்கு அது பின்னுதல் முதலியவைகளில் ஆலோசனைகளுண்டா? இல்லை. அதுபோலவே மனிதரிலும் ஒவ்வொரு விதமான காரியத்தைச் செய்கின்றார்கள். அதில் ஆராய்ந்து பார்த்தால் அதனை யறிந்த மற்றொருவனுக்கு ஆச்சரியமாகத் தோன்றாது. எந்த பாஷையையேனும் அல்லது வித்தையையேனும் ஒவ்வொருவனும் பழகப் புகும் ஆரம்பத்தில் அத்தொழிலை அல்லது அவ்வித்தையைப் புகழுகிறான். வரவர அதனை எளிதில் வருமென்று மதிக்கின்றான். வந்தபின்னரோ அதிலென்ன விருக்கின்றது என்கிறான். குருவி முதலியவைகட்கு அவ்விதம் அதிருப்தியுண்டென்று குறிக்கப்படவில்லை. மனிதவர்க்கத்தினர் மாத்திரம் பெற்றதைச் சிறிதாக்கிப் பெறாததைப் பெரிதாகக்கருதி முயல்வதானது, கிடைத்தற்கரிய பரம்பொருளினைத் தம்முயற்சியால் கண்டடைவதற்கே இவ்வுலகில் தோன்றியவர்களாவார்களென்பதை விளக்குகின்றது. மனிதருக்கு உண்மையான திருப்தியும் நித்தியமான சுகமும் எந்த இடத்தில் வாய்க்கின்றது? பரமாத்மாவினிடத்தில் பக்திசெலுத்தி அவரை யடைவதில்தான் உள்ளம் பூரண திருப்தியும் சாந்தமும் எய்துகின்றது. குருவி முதலியவைகட்கு இந்த உணர்ச்சி யில்லாமையை நோக்குகையில் மானிடப்பிறவி எத்துணை அருமையாகின்றதென்பதைச் சிந்திக்கக்கடவோம். சிந்தித்து இறைவன் பாதமலர் போற்றக்கடவோம்.

* *
*

"கழுதையும் சுமக்குங் கஸ்தூரி" ஒரு ரூபாய் எடை அநேக ரூபாய் விலையுள்ளதும் மதிப்புள்ளதும் உபயோகமானதுமான கஸ்தூரியைக் கூலிக்குக் கழுதையும் சுமக்கிறது. அது அதன் பலனை அறிந்தனுபவிக்கவில்லை. மனிதரிற் சிறந்தோர் அதனை யனுபவிக்கின்றார்கள். மதிப்பிட இயலாததும்

உத்தமப் பெண்டிருக்குத் தமது பர்த்தாவின் முக தரிசனமே பரம பாக்கியமாகும்.

மஹாப்பிரகாஸ ஜோதியானதுமான பரமாத்மாவென்னும் கஸ்தூரியை அறிவிலிகள் அறிந்தனுபவியாது விடுகின்றார்கள். விவேகிகளோ நாம் இம்மனிதவுருவடைந்தது, உண்டுடுத்து உலாவிச்சாவதற்கன்று; பரமாத்மாவைக் கூடிச் சுகித்தற்கேயென்று ஜகத்பதியான பரமாத்மாவைக் கலந்தனுபவிக்கின்றார்கள்.

* *
*

"தெய்வந்தை நினைந்து தீவினையகற்று" என்றபடி நம்மை அநாதியே பற்றிய பாசமும், அதனால் வினையும் பாவங்களும் நீங்கிச் சுகமடைய வேண்டுமாயின் தெய்வபக்தி செய்யவேண்டும், பகவத்பக்தியினாலன்றி வேறெவ்வித கருமங்களினாலும் தீவினையான பாவமொழியாது. ஒவ்வொரு குற்றங்களுக்கும் பரிகாரமுண்டு, ஒருவன் ஒரு சிறு குற்றத்தைச் செய்தால் அதற்கு சிறு பிரயத்தனமாகிய பரிகாரம் போதும். பெருங் குற்றத்திற்குப் பெரும் பிரயத்தனம் வேண்டும். சிறிதும் பெரிதுமாய்க் குற்றங்கள் என்று இரண்டு செய்தால் அதற்கு வேறேதேனும் பிரயத்தனம் செய்து மாற்றலாம். உதயமுதல் ஒடுக்கம் வரைக்கும் குற்றமேசெய்துகொண்டு வருவோமாயின் அதற்குச் சாமானிய பிரயத்தனபரிகாரம் சாத்தியப்படாது. பகீரதப் பிரயத்தனம் வேண்டும். பகீரதன் என்னும் அரசன் ஒருவன் தன் பிதுர்க்களைத் திருப்திசெய்யக்கருதி அறுபதினாயிரம் வருஷம் பிரம்ம தேவரையும், அறுபதினாயிரம் வருஷம் விஷ்ணு மூர்த்தியையும், அறுபதினாயிர வருஷம் சிவபெருமானையும் வேண்டித் தவஞ்செய்து ஆகாயகங்கையைப் பூமிக்குத் தருவித்து பிதுர்க்கடன் முடித்துப் பாவரகிதனானான். அவனது இடைவிடா முயற்சியைக் குறிக்கவே 'பகீரதப் பிரயத்தனம்' என்ற சொல் வழக்கத்திற்கும் வந்தது. நாம் செய்யும் எல்லாத் தொழிலிலும் பாவம் கலவாமற் செய்வதில்லை. பாவசம்பந்தம் ஒவ்வொன்றிலுமுண்டு. அறிந்தும் அறியாமலும் நாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் செய்யும் பாவத்திற்கு அளவில்லை. அளவில்லாத பாவங்களைச்செய்கிற நாம், அந்த அளவிலாப் பாவத்திற்குச் சாமானியப் பிரயத்தன பரிகாரம் செய்தல்கூடாது. எல்லாம்வல்ல தெய்வப்பிரயத்தனமே அவசியம் வேண்டும். அதாவது தெய்வபக்தியாற் பாவவினையைச் சுட்டெரிக்க வேண்டுமென்பதாம். தெய்வபக்தியும் சாமானியமாகச் செய்யப்படுவதன்று. முதிர்ந்த அன்போடும் மனமொழி மெய்களால் இடையறாது செய்யப்பட வேண்டும். ஆதலின் உத்தமோத்தமமான தெய்வபக்தியினால் நமது தீவினையை யகற்றி இன்புறுவோமாக.

*
* *

"வையந்தோறுந் தெய்வந்தொழு" வையம் தோறும் என்பதற்கு உலகெங்குமுள்ள என்பது பொருள். எங்கும் நிறைந்தவனாய் எல்லாம் வல்லவனாய் விமலனாய் விளங்கும் கடவுள் மன அன்பொன்றினையே பெரிதாக விரும்பினவர். மற்றயவை அவருக்கு இரண்டாம் பக்ஷம். நம்மை யாளுஞ் சர்வ சாக்ஷியான கடவுளை நாம் எந்த வழியில் அன்பு செலுத்தலாமென எண்ணி எண்ணித் தவித்தலொன்றே பெரிய அன்பிற்கு வழிகாட்டியாகும். ஆலயத்துள் அசுசிபடுத்தத்துணியும் அகதிகள் தேவ வழிபாட்டினைச் செய்வதை விட்டுப் பாவவழிபாட்டினை இயற்றிப் பாவிகளாகின்றார்கள். நூற்றிற்கு

படித்தவர்கள் பெற்றவரைப் பேரன்போடு மரியாதை செய்வார்கள் என்று எண்ணுவது கூடாது, அங்கேயும் ஒரு சின்னஞ்சிறு ஓட்டை யுண்டு.

இரண்டு பேர் கடவுள் நிலையை யாராயவும் வணங்கவும் விரும்புவார்கள். மற்றையோர் உண்டுடுத்து உறங்கி வாழவே கருதுகின்றார்கள். இன்னும் சிலர் எங்கே நான்கு மனிதர் சேருகின்றார்களோ அங்கே ஐந்தாவனாக வந்து கூடுவார்கள். நித்திய கன்மாதிகளைப் பிறர் மெச்சச் செய்து கடவுள் வழிபாட்டில் உயர்ந்தோன்போலக் காண நிற்பார் பலர். எனவே, கடவுளைக்குறித்து ஜனங்கள் ஆலோசனையுடன் ஒரு காரியமும் செய்கிறதில்லை. ஆலோசனையுடன் செய்யும் காலம் எப்போது வாய்க்குமோ அப்போதுதான் தேவவழிபாடு சுகப்படும்.

* * *

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" ஒருவர் மனத்துள் கிடக்கும் அன்பு அவர் முகத்து இன்சொல்லாலும், முகத்தெளிவாலும் விளங்கும். சில சமயம் கொடுஞ்சொற் சொன்னாரேனும், உள்ளே, அன்பு இருக்குமாயின் அக்கொடுஞ் சொல்லும் அந்தரங்கமாய்ப் பார்ப்போருக்கு உள்நின்ற அன்பின் சாரம் உடனே புலப்படும். சாக்கிய நாயனார் என்னும் மகான் ஒருவர் சமண சமயத்திலிருந்தவண்ணமே சைவசமய உட்பற்றுடையவராய் சிவபெருமானை அந்தரங்கத்தில் வழிபட்டுக்கொண்டு வந்தார். வெளிப்படையாக மற்றச் சமணர்கள் காணும்படி நிந்தனை பொதிந்த சொற்களால் இகழப்புகுபவர்போல் நடித்து அவை யனைத்தையும் அந்தரங்க ஸ்தோத்திரமாகவும், வெளிமுகத்தில் மற்றைச் சமணர்கள் காணும்படி கல்லை யெறிந்து சிவலிங்கத்தை யடிப்பது போல நடித்து ஹிருதயத்துக்குள்ளே அதனைச் சிவார்ச்சனையாகவும் அன்பு செலுத்தி முக்தி எய்தினார். இவர்போன்ற மகான்கள் எத்தனையோ பேர் இருப்பினும், உலகம் வெளிப்படையாய் இன்சொல்லையே விரும்புகின்றது. உள்ளன்போடுகூடிய கொடுஞ்சொல் அத்தகைய மகான்களுக்கு ஒருக்காற் கூடுமேயொழிய சாமான்யரான நமக்கு அத்தனை பக்குவம் சாத்தியமில்லை. ஆதலின் உள்ளன்பு கலந்த இன்சொற்கள் பொதிந்த ஸ்தோத்திரங்களால் பகவானை நாம் போற்றக்கடவோம்.

* * *

"சொன்னதைச் சொல்லும் கிளி" எவனேனும், உரைத்த எதையேனும் கிளியைப்போல் வாயால் வெறுமனே கூறுவதினால் இஷ்ட போகங்களை ஒருவன் அடையவே மாட்டான். அப்படி அடையலாமென்று கருதுபவன் மந்திர சாஸ்திர ஆராய்ச்சி இல்லாதவனென்று உரைத்தல் வேண்டும். மந்திரங்களை அறிவதுடன் தான் எந்த மந்திரத்தைச் செபிக்கின்றானோ அந்த மந்திரத்தின் அதிதேவதையின் குண சொரூபத்தை வெகு நன்றாக அறிந்திருத்தல் வேண்டும். அத்துடன் அதற்குரிய தியான சுலோகங்களை ஆதி ஆசிரியன் மொழிப்படியே பழகி இருத்தல்வேண்டும். இக்குறித்த முறைகளுடன் ஆசாராதி நியமமில்லாதவனுக்கு மனம் வசப்படாது. மனம் வசப்படாதவனுக்குத் தெய்வமும் வசப்படாது. தெய்வம் வசப்படாதவனுக்கு தெய்வத்தாலாகவேண்டிய காரியங்களும் ஆகா. உச்சினி யரசனாகிய விக்கிரமாதித்தன் மலையளவு சாம்பல் குவியும் வண்ணம் ஓர் மலையிலுள்ள தூர்க்கை

ஆண் பெண் இருபாலாருடைய நகை முகமும் நய வார்த்தையும் கண்டு அதனை நம்பி மயங்கி மதிமோசம் போனவர் எத்தனையோ பேர்.

யின் ஆலயத்தின் எதிரில் ஓமம் வளர்த்து எழுபத்திரண்டு வருஷ காலமாகத் தவம் செய்யும் பிராமணனைக் கண்டான். அவனுக்கு இன்னும் பராதேவதை பிரஸன்னமாகாததைக் கண்டு வருந்தியவனுய் அவனுக்காக அப்பராதேவதையை மகத்தான வைராக்கியத்துடன் ஹிருதய கமலத்தில் தியானித்தனன். ஒரு முகூர்த்தநேரம் தியானித்தவுடனே இவனுடைய தியானத்திற்கு மனமகிழ்ச்சி யடைந்த பகவதியும் அவன் எதிரே தனது நிஜவுருவத்துடன் தோன்றி "விக்கிரமனே நின் தவத்திற்கு மெச்சினேன். "சொன்னதைச் சொல்லும் கிளி" போல் வெறுமனே என்னை நீ சிந்திக்கவில்லை. நீ கண்களைத் திறந்து என்னைப் பார்" என்று கூறினள். உடனே மன்னவன் கண்களைத் திறந்து அந்தப் பராதேவதையைப் பார்த்து நமஸ்காரம் உரைத்து அஞ்சலியஸ்தனுக நின்றனன். உடனே துர்க்கை உனக்கு வேண்டிய வரம் கேள் தருகிறேன் என்றனள். அதற்கு அரசன், லோகமாதாவே, எனக்குத் தங்கள் கிருபையுடன், எழுபத்திரண்டு வருடங்களாகத் தங்களைக் குறித்து ஓமம் செய்கிற பிராமணனின் எதிரே பிரத்தியக்ஷமாகவேண்டுமென்பதே நான் கேட்கும் வரன் என்றனன். அதற்கு அம்மகாதேவி,

"செட்டியார் சேரி சுற்றுகின்றரோ, செகுப்பசெய்கின்றரோ" என்றபடி நீ அவனுக்காக ஏன் பரிந்து வருகின்றனை? அவன் என்னை எங்கே உபாஸிக்கின்ருன்? விறகுகளை நெருப்பிலிட்டுச் சுடுகின்ருன். என்னை உண்மையில் நினைத்தானுனல் நான் உடனே அவன் எதிரே சென்றிருப்பேனே என்றனள். அதற்கு அரசன் என் பொருட்டாகவேனும், அவருக்குப் பிரத்தியக்ஷமாகவேண்டும் என்று கூற, அதற்கு இசைந்து அவனுக்குக் காக்ஷியளித்து வேண்டிய வரங்களும் அநுக்கிரகித்தனள். இதனுல் தியானம் முதலிய ஸத்ஸம்பிரதாயங்களில்லாமல் மனத்தைக் கண்ட இடங்களில் அலையவிட்டு சும்மா உச்சரிக்கும் மந்திரமும், சும்மா செய்யும் ஜபதப ஓமாதிகளும் நிஷ்பிரயோஜனமானவைகளேயாம். ஆதலின் பகவந்நாம மந்திரத்தினைக் கிளியைப்போல உச்சரிப்பதினுலேயே அது பலனைக் கொடுத்துவிடாதென்றும், தியானம் முதலிய முறைகளோடே ஜெபித்தால் பலனைக் கொடாமலும் இராதென்றும் அறியக்கடவோம். இங்ஙனம் அறிந்து முறைப்படி மனஸ்பூர்வமாகத் தியானித்து பரமனின் கருணைக்கு உரியவராகக்கடவோம்.

மற்றவர் சொல் கேட்க நேரும் வேளை!

பிணி, மண அணி தாங்கிய காலையில் எத்துணைக்கற்றேனும் தன் சுதந்திரம் குன்றி, பிறர் சொல்லுக்கு அடங்குவோனுகின்ருன். அதுசமயம் மற்றவர் தன்னை ஆட்டி வைத்தபடியெல்லாம் தான் ஆட வேண்டியவனே. இவற்றினின்றும் விடுதலை கண்ட பின்னரே மீண்டும் அவன் சுயேச்சையுள்ள ஆண்மகனுகின்ருன்!

தன்னை மணக்க இருக்கும் மங்கையின் குணம் தங்கமென்றே எவருக்கும் தம் ஆசையின் வழியே நினைப்பு. அவளை மணந்துகொண்டு உலகில் உழலும்போதுதான் அவளது உண்மைக் குணம் தெரிகிறது.

அமிர்தகுணபோதினி

விபவ௵ தை௴ 1௳

நமது ஸமூக வாழ்வில் க்ஷத்திரிய குணங்கள்.

ஆதி காலத்தில் வைதீக குணங்களே மேலோங்கி நின்றன. வைதீகம் செம்மையாய் நடைபெறுதற் பொருட்டு லௌகீகமும் சிறப்பிக்கப்பட்டு வந்தது. வைதீகத்தைக் காத்தற்கென்றே அரசன் தோன்றினான். வைதீகத்தின் முழுப்பொறுப்பினையும் ஏற்றுத் தலைமையாயிருந்து நடத்தினோர் மகரிஷிகளும் முனிவர்களுமாவர். அன்னோர் தெய்வம் தொழுதலும், ஜெபதப நியமங்கள் புரிதலும்மட்டுமே தமது கடமையாய்க் கொண்டிருக்கவில்லை. பின் வருவனவற்றை முன்னறிந்து சொல்வது ரிஷிகளுடைய சக்திகளிலே ஒன்றாயிருந்தது. 'எக்ஸ்கிரே' கிரணம் என்று ஐரோப்பியர்கள் சொல்லும் கிரணத்தின் மூலமாக ஒருவனுடைய உடலுக்குள் மறைந்திருக்கும் கருவி முதலியவற்றை வெளிப்புறத்திலிருந்தே பார்த்தல் எளிதாவதுபோல் ரிஷிகளினுடைய அறிவிலே ஒரு 'எக்ஸ்கிரே' கிரணம் கலந்திருந்தது. காலத்தால் மூடப்பட்டு மற்றவரின் அறிவுக்குத் தெரியாமல் மறைந்திருக்கும் எதிர்காலச் செய்திகள் ரிஷிகளின் அறிவுக்கு சுலபமாகத் தென்பட்டுவிடும். அதனால் ஏனையோருக்குத் தெரியாத எதிர்கால ஸம்பவங்கள் பலவற்றைச் சுலபமாகத் தெரிந்துகொண்டு, ராஜீய விஷயங்களிலும், ஸம்பந்தப்பட்டு அவ்வக்காலங்களில் அரசர்களுக்கு வேண்டிய ஹிதோபதேசங்களைச் செய்துவந்தார்கள். ஜனஸமூக க்ஷேமார்த்தமாக பற்பல சாஸ்திரங்களையும் இயற்றி வந்தனர். எக்காரியம் செய்யப்புகினும் அதனுள் வைதிகத்தின்தொனி சப்தித்துக் கொண்டிருந்தது. வைதிகக்கிரியைகளுக்குள்ளாகவே தேச பரிபாலனம், பொருள்விருத்தி, ஸமூகஸேவையின் பிரதானத்துவம் இம்மூன்றும் நிரப்பப்பட்டிருந்தன. பதிதர்மம், பத்தினி தர்மம், குடும்ப தர்மம், குலதர்மம், ஸமூகதர்மம் யாவும் வைதிகக்கடமைகளுக்குள் அடக்கப்பட்டிருந்தன. மதஸ்தாபகர்கள் அனைவரும் அந்த வைதீக

காலத்திலேயே வந்து அவதரித்து உலகை வாழ்வித்தனர். இது வைதீகத்தின் பூர்வ உன்னதமாகும்.

தற்போதோ வைதீகம் என்பது சிறப்புப் பொருளிலே கொள்ளப்படவில்லை. தெய்வத்தைத் தொழுதல்—என்ற ஓர் அளவிற்குள் நின்றுவிட்டது. தானம், தருமம் புரிதலே வைதீகத்தின் அர்த்தம் என்றும் கொண்டுவிட்டனர். யாசகம்செய்து ஜீவித்தலே வைதீகர்களின் வாழ்வு என்றும் முடிந்துவிட்டது. நமது சக்தி ஒடுங்கிவிட்டதினால் உண்டான ஒரு தாழ்வை வைதீகத்தினுள்ளும் புகுத்திவிட்டோம். அதன் பூர்வ கௌரவத்தைச் சிதறச் செய்துவிட்டோம். வைதீகத்தின் பரமோத்கிருஷ்டமான லக்ஷ்யத்தை நாம் சரிவர உணரப் பெறுமையே நமது ஈனதிசைக்கெல்லாம் காரணமாய் முடிந்தது. சென்றன சொல்லிப் பயனில்லை. இனி நாம் இவ்வழி நிலையினின்றும் மேனோக்கிச் செல்வதற்கு வேறொரு புதிய குணத்தை நமது ஸமூகவாழ்வில் புகுத்துவிப்பது அவசியமாகின்றது. ஒரு அம்பு பிசகிப்போயின் தக்ஷணமே மற்றொரு அம்பைப் பிரயோகிக்கத் தயாராய்விடவேண்டும். வைதீகம் முதல் அம்பு. அதன் உன்னத லக்ஷியம் தற்போது கெட்டுவிட்டதனால், அதற்கு அடுத்தபடியாயுள்ள க்ஷத்திரிய அம்பை நாம் கைக்கொண்டு அவ்வழியில் நமது முற்போக்கைத் தேடிக்கொள்ளவேண்டும். பழய ரத்தம் கெட்டுவிட்டபோது புதிய ரத்தத்தை உட்செலுத்த வேண்டியது அவசியம். வைதீகம் தலைமை பெற்றிருந்து க்ஷத்திரிய குணங்களைப் பரிபாலித்தது ஒரு காலமாக, இப்பொழுது க்ஷத்திரிய குணங்கள் மேலோங்கப் பெற்று, அதன் ஆதரவில் வைதீக தத்துவங்கள் தமது பூர்வ ஒளியினைப் பெறுமாறு செய்விக்கவேண்டியுள்ளது.

நாம் இக்காட்போதினில் கொள்ளற்பாலதான க்ஷத்திரிய குணங்கள் யாவை என்பதனை இங்கு ஆராய்வோம். சென்ற ஆயிரம் வருடங்களாகப் பாரதநாட்டில் ஸகல ஜனங்களும் வைதீகதர்மத்தையே மஹா லக்ஷ்யமாகப் பாராட்டி வந்தனர். இப்பொழுது தொடங்கியுள்ள நூற்றாண்டிலே நமது ஜனங்கள் க்ஷத்திரிய தர்மத்தையே மஹா லக்ஷ்யமாகக்கொள்ளவேண்டுமென்பது ஸ்ரீ அரவிந்தர் போன்ற பெரியோர்களின் கருத்து. அன்னோர் வருங்காலத்தை முன்னதாகத் தெரிந்துவைத்திருக்கும் ஞானிகளாவர். இந்த க்ஷத்திரிய தர்ம லக்ஷ்யத்திலே தூய்மை என்பது பெருங்கடமையாகக் கொள்ளப்படும். தீரத்தன்மை இன்றியமையாத குணமாகப் பாராட்டப்படும். ஜனங்களெல்லோருக்குமே 'துறவி' யாகவேண்டுமென்ற நாட்டம்போய் வீர க்ஷத்திரியனாகவேண்டுமென்ற ஆவற்பெருக்கு மேலோங்கிவிடும். ஜனஸமூகத்தின் சிந்தனையெல்லாம் ஆண்மையி

நம்மை அகங்காரத்துடன் ஒருவன் வலியத் தூற்றும்போது அவன் புத்தி தெளிவற்றிருந்திருக்கக் கூடுமோவென்றும் சற்று ஆலோசிக்கக் கடவோம்.

லும் வன்மையிலுமே சிறப்புற்று நிற்கும். தர்க்க நுட்பங்களும், பிரிவினைத்தாழ்ச்சிகளும், குறுகியகொள்கைகளுமே ஜனங்களின் முதல்நோக்கமாக இருக்கமாட்டா. விசாரணைகளெல்லாம் ஒரு பரம லக்ஷ்யத்தின் அனுசரணைக்குப் பொருந்தியவையாக நடைபெறும். அற்ப விஷயங்களைப்பற்றிய விசாரணைகளும், சிறுமைகொண்ட அதிருப்திகளும் பாட்டிகளின் வம்பளப்புக்கே தகுமென்று தள்ளிவிடப் படும். எது பிரதானமோ அதுமட்டுமே கவனத்திற்கு வரும்.

இதனல் ஹிந்துமார்க்கத்தின் லக்ஷ்யமே மாறிப்போய்விடுகிற தென்று கொள்ளக்கூடாது. ஜனங்கள் நடந்துசெல்லும் வழியிலே சிறிதளவு பேதம்மட்டும் நேர்கிறது. அவ்வளவுதான். ஒரே மத்திய ஸ்தலத்திற்கு வருவதற்கு அநந்தங் கோடி வழிகளுண்டு. அந்த நாளிலும் நமது லக்ஷியம் முக்தியே; அதாவது ஸ்வதந்திரந்தான். இனியும் இந்த நாளிலும் நமது லக்ஷ்யம் அதுவே. அதில் நூதனமாக மாறுதல் எதுவும் இல்லை. ஆனல், வீரியம், பயமின்மை, சுடர்விடும் சக்தி இவையே முக்திக்கு அதாவது ஸ்வதந்திரத்துக்கு வழிகளாக இப்பொழுது கொள்ளப்படும். ஆண்மையாவது யாதெனில், விவேகாநந்தர் ஒரு சந்தர்ப்பத்தில் சொல்லியதுபோல், "மனிதனுக்குள்ள மாண்பை இயற்கையிலே அறிந்து நடப்பதுதான் ஆண்மை." எந்த சமயத்தில் அடிக்கவேண்டுமென்பது ஆண்மையுள்ள மனிதனுக்குத் தெரியும். எந்த சமயத்தில் பணியவேண்டுமென்பதும் அவனுக்குத் தெரியும். பணிவில்லாமை சில சமயங்களில் இகழ்தற்குரிய துர்க்குணமாகும்; ஒத்துவேலை செய்வதற்குத் தகுதியில்லாமையை அது குறிப்பிடும். வேறு சில சமயங்களில் பணிவு இகழ்தற்குரிய துர்க்குணமாகிவிடும்; நீசத்தன்மைகொண்டதான கெஞ்சிப் பிழைக்கும் நாயின் இயற்கையை அது குறிப்பதாகிவிடும். "தான் தீமைசெய்வதற்கு என்னை எவனும் துணைக்குக் கூப்பிடாதிருக்கக்கடவன்; அப்பொழுது என் பணிவை எவனும் எதிர்பார்க்கவேண்டாம்" என்று க்ஷத்திரியகுணங்கள் பொருந்தியவன் உடனே தனது விடையை ஆண்மையுடன் தெரிவித்துவிடுவான்.

தான் பயமில்லாதிருப்பதும், தனக்குப் பிறர் அஞ்சும்படியாக இருப்பதும் க்ஷத்திரிய தர்மத்தின் அஸ்திவாரமே யல்லாமல், அந்த தர்மத்தின் மகுடமன்று. க்ஷத்திரிய தர்மத்தின் கிரீடம் எது? அநீதியைப் பகைத்தல், கருணாவேசம், ஆபத்திலிருப்போரைக் காத்தல், நியாயத்தைக் காக்கும்பொருட்டு எந்த நிமிஷத்திலும் உயிர்கொடுக்கச் சன்னதமாயிருத்தல், இதுவே க்ஷத்திரியனுடைய முக்தி. இங்ஙனம் உள்ளோன் உயிரச்சத்தினின்றும் விடுபட்டவனாக (முக்தி பெற்றவனாக) இருக்கிறான். தான் எந்தக் கொடியின்கீழ் நின்று போர்

வீட்டின் பெரியோர்களும் மற்றவர்களும் சிலாகிக்கத் தக்க குணபூஷணியே சொற்ப கல்வி கொண்டவளாயினும் உத்தமியாவாள்,

செய்கிறனே, அந்தக் கொடியின் பொருட்டாக அவன் தனது உயிரை மகிழ்ச்சியோடு கொடுத்துவிடுவான். இறக்கும்போது ஜெயகோஷத்துடன் இறப்பான். அவனுடைய குணம் எப்போதும் உத்ஸாகமும் அமைதியும் கலந்ததாகிறது. என்ன நேரிட்டாலும் அவை களங்கமடையமாட்டா.

க்ஷத்திரியன் எவ்வளவு தீரமுடையவனே, அவ்வளவு தயையுமுடையோனுவான். அவன் புத்தியிலே அதைரியம் எப்படிப் பிறப்பதில்லையோ அதுபோலவே சமுசயமும் பிறப்பதில்லை. அழுக்காறு, அற்ப ஸந்தோஷம் இவற்றை அவன் அறியவேமாட்டான். தனது துணைவர்கள் பெருமை யடைவதிலேயே அவனுக்குப் பரமாநந்தம். அவயவஹீனமடைந்தோர்க்கு அன்னோர் தங்கட்குள்ள பழுதுகளை யுணர்ந்துவருந்தாவாறும், திக்கற்றுப்போகாவாறும் தன்னுல் இயன்ற உதவிகள் யாவும் புரிந்தும் காப்பான். பிறரைப் பழித்தும், பரிகசித்தும் அவமதிக்கும் மூடர்களின் கூட்டம் அவனுக்கு சத்துருத்துவமாகப்படும். தனது லக்ஷியமே பிரதானம், தான்கொண்டதே உறுதி. தனது லக்ஷியம் சித்திப்பதில் உயிரிழக்கப் பின்னடையான். மறுஜன்மம் எடுத்துவந்தாகிலும் தன் லக்ஷியத்தை நிறைவேற்றிவிடுவான். இழிந்த ஆசைகளினின்றும் அவனை நாணம் காப்பாற்றும். கவுரவமே அவனுடைய தர்மம். மெலிந்தோரைக் காத்தலே அவனது முக்தி. அதில்தான் அவனது சக்தியும் ஸ்வதந்திரகுணமும் பிரகாசப்படும்.

க்ஷத்திரியன் அருமையான விரதவொழுக்க முடையவன். பெரிய சேனுபதிகள் நேரே உறங்குவதில்லை. சில நிமிஷ காலங்களே தூக்கங்கொண்டு உடனே விழித்துக்கொள்வது அவர்களின் இயல்பு. லக்ஷியம் பிரதானமேயன்றி நித்திராசுகம் அவர்களுக்கு ஒருபொருட்டில்லை. உண்பதும் சிறிதுதான்; சேனைகளிலுள்ள போர்வீரருக்குக்கெல்லாம் இட்டதுபோகக் கடைசியாக மிஞ்சியதுதான் சேனுபதிக்கு. க்ஷத்திரியனின் விளையாட்டாகிய பந்தாட்டம் வேட்டை முதலியவற்றுக்குக்கூட உடல் சரியாகப் பயிற்சி செய்யப்பட்டிருத்தல்வேண்டும். சுகமும் இன்பானுபவங்களும் நரம்புகளை மெதுவுப்படுத்தி உள்ளத்திறனை அரித்துவிடுகின்றன. க்ஷத்திரியன் தனது நரம்புகளை இரும்புபோல் வைத்திருப்பான். தனது படையணிகளைத் துடைத்துப் பளபளவென்று வைத்திருப்பான். அவனது ஆவி எப்போதும் காம்யார்த்த சித்தியின்பொருட்டு அதாவது தன்னுல் இச்சிக்கப்பட்ட பொருள்களைக் கருதி அதைப் பெறும்வழியில் அல்லும் பகலும் துடித்துக்கொண்டிருக்கும்.

செல்வம் சென்று வறுமை சம்பவித்த காலத்துங்கூடக் கற்பரசியான வீட்டின் செல்வி தன் நாயகனையே தனது மங்களத் திரவியமாகக்கொண்டு மகிழ்பூத்து மரியாதை செய்து அணைப்பாள்.

உறக்கத்திலேகூட க்ஷத்திரியனுடையகை வாளின்மீதிருக்கும். "கண்விழி, எழு, போர்செய், வெற்றிவருமளவும் விடாதே" என்ற தொனிகள் எப்போது வருமென்று நித்திரையிலுங்கூட அவன் செவி அதற்குக் காத்துக்கொண்டேயிருக்கும். தலைவர்களுக்கும் துணைவர்களுக்கும் உண்மையுடன் இருத்தல், மற்றவர்களிடமிருந்து பெருமையும், உண்மையுமே விரும்பி எதிர்பார்த்தல், சிறுமையைப் பொருட்செய்யாமை, மனக்களிப்புடன் விளங்கல் இவையெல்லாம் க்ஷத்திரியனுடைய உடற்பிறப்பான குணங்களாகும்.

ஸ்திரீயினிடம் க்ஷத்திரியன் துர்ப்பலத்தை எதிர்பார்ப்பதில்லை. பலத்தையே எதிர்பார்க்கிறான். அவளுடைய ஆத்மாவிடம் மதிப்பும், அவளுடைய உன்னத பக்திகளிலே ஆதரவுமும் செலுத்துகின்றான். அவள் ஆணில்லாததுபற்றி அவளைத் துர்ப்பலத்துடன் பயனில்லா திருக்கும்படி விதித்துவிடுவதில்லை. பெரிய தர்மங்களின்பொருட்டாக, ஆத்மத்தியாகம் செய்யும் அதிகாரம் ஆண்மகனைப்போலவே அவளுக்கு முண்டென்பதை க்ஷத்திரியன் அறிவான். ஆத்மலக்ஷ்யத்தை அவள் தெளிவுறக்கண்டு, அதன்பொருட்டுத் துன்பங்களடையவும், பலமெய்தவும் வேண்டுமென்று விரும்புகிறான். அவளுடைய மனோபீஷ்டத்திற்கு க்ஷத்திரிய ஆண்மகன் தனது அறிவாலும் ஆலோசனையாலும் துணை புரிகின்றான். அவளிடம் வீண்முகஸ்துதி பேசிச் செல்லம் பாராட்டுவதில்லை. இருவருக்கும் பொதுவான உழைப்பு, இருவருக்கும் பொதுவான நம்பிக்கை—என்ற பாதையிலே—அவன் அவளுடைய விழியிலே அரிய சிரத்தையைத் தோன்றச்செய்ய,—அவளோ அவன் விழியிலே விசுவாசமும், சலனமற்ற உறுதியும் திகழுமாறுபுரிய,—இவ்வண்ணம் க்ஷத்திரியன் தன் பாதையிலே கம்பீரமாகக் கைவீசி நடந்துசெல்லுகிறான்.

நமது பூர்வகாலத்து ஸ்திரீகளிலே பிராணநாதர்களைப் பிரிந்திருக்க மனமில்லாமல் உடன்கட்டையேறிய ஸ்திரீகள் உத்தமிகளாவார்கள். இனி, எதிர்காலத்திலே தர்மத்தின் பொருட்டாகவே வாழ்ந்து, அதற்காகவே மடிந்து, அதன்மூலமாகத் தமது நாயகர்களுடைய ஆத்மாவுடன் லயப்பட்டுநிற்கும் ஸ்திரீகளே மஹா பதிவிரதாங்கனைகளாகக் கொள்ளப்படுவார்கள்.

ஒரு குறித்த லக்ஷ்யத்தின்பொருட்டாக வாழும் வாழ்க்கையிலே ஆண், பெண் என்ற வித்தியாசம் கிடையாது. லக்ஷ்யங்களின் ஆரம்பமும் தொடக்கமும் அகஸ்மாத்தாக ஏற்படுவனவல்ல அவை அரிய தவத்தின் விளைவுகளினின்றும் தோன்றுபவை. பல ஜன்ம முயற்சிகளின்—பாடுகளின்—புதிய நுண்ணறிவுகளின் ஸித்தி.

"பிரபஞ்ச விலாஸம்" வரைதற்கு மிக்கப் புண்பட்டு நொந்தவர்க்கே இயலும். நொந்து நொந்து படுவதிலிருந்தே புது அனுபவம் உதிக்கிறது.

லக்ஷ்யங்களின் மூலத்திலே அதாவது அதன் தொடக்கத்திலே அதனிடத்துப் பக்தி எம்மட்டு உறுதியாக இருக்கிறதோ, அம்மட்டு மனிதவாழ்க்கையும் மஹிமை யெய்துகின்றது. ஒரே மஹா சிந்தை கொண்டு அதன்பொருட்டாகவே உயிர்வாழும் ஜீவர்கள்மிகச் சிலரே. அச்சிலராலேயே இனி வரபோகின்ற, இப்போது கைவிடப்பட்டுள்ள புராதன லக்ஷ்யங்களெல்லாம் உண்மையான பரிபூர்த்திபெற்று விளங்கும். பரிபூர்ண சித்திபெற்ற மனிதனே உண்மையான க்ஷத்திரியன். அவனிடம் பிராமணத்துவமும் அதாவது வைதீகமும் விளங்கும்.

நம்முன்னே இருக்கும் காரியத்தைப்பற்றி பக்தி சிரத்தையுடன் சிந்திக்கவேண்டும். நமது பூர்வ வைதீக குணங்களை இப்பொழுது க்ஷத்திரிய குணத்தைப் பின்பற்றும்படித் திருத்திக்கொள்ள வேண்டும். க்ஷத்திரிய குணங்களில் வைதீககுணம் புதுஒளியில் பிரகாசிக்கும். உலக சரித்திரத்திலே இப்போது வரப்போகிற காலத்திலும், உயர்ந்த காலம் எப்போதுமில்லை. சென்றகாலத்ததாகிய எந்த விஷயத்தையும் தற்காலத்துக்குப் பொருந்திக்கொள்ளும்படி ஒழுங்குபடுத்திவிடவேண்டும். ஸமூகஸேவையைக் காட்டிலும் ஸந்யாஸம் மேம்பட்டதாகாது. ஸர்வேச்வரனுடைய எந்த ரூபமும் பூமிதேவியின் ரூபத்தையே சார்ந்திருக்கும். இந்த பாரத தேவியை நாம் அறிய வேண்டும். இவளுடைய ஆராதனையை ஸ்தாபிக்கவேண்டும். இந்த தேவிக்காகவே நாம் இங்கு ஜீவிப்பதாகக் கருதவேண்டும். அதன் நிமித்தமாகவே நாம் வாழவேண்டும். அதற்கே நமது ஆயுளை அர்ப்பணம் செய்யவேண்டும். அதுவே நாம் இங்கு பெறும் முக்தி. 43-வது காங்கிரஸும் க்ஷத்திரிய குணங்களையே வற்புறுத்துகிறது. எங்கு க்ஷத்திரிய தர்மம் உண்டோ அங்கு வெற்றி நிச்சயம். க்ஷத்திரியகுணங்களை மேற்கொள்பவனெவனோ, அவனே க்ஷத்திரிய குலஸ்தனைவிட மேல்.

விகல்ப சிந்தை.

கலக நோக்குள்ளவன் சமாதானம் பேச வருவனோ? வந்தாலும் அதிலும் விஷமம் நிறைந்திருக்கும். கோள் குண்டுணிகள் ஒத்துவாழ்வரா? பொறாமைப்படுவோர் திருப்தியுடன் மகிழ்வதுண்டா? உள்ளே ஓர் நினைவுடன் வெளியில் இனிக்கப் பேசுபவன் உண்மையானவனா? வியாபார நட்பு எத்தனை நாழிகை வரையில்? பிரிக்கவைத்து நடுவே லாபங்கள் காண முயன்றிடும் நினைவினர் ஒன்றுபட்ட குடும்பத்தை நோக்கி இன்புறுவரா? எதிர்க்கும் சிந்தையினன் நேசத்துக்கு நெருங்குவனோ? சிந்தையைப் பொருத்துக் குணம்; குணத்தைப் பொருத்து நிகழ்ச்சி—செயல்!



பொங்கற் புதுநாள்

பொங்கற் புதுநாள் போந்தது போந்தது
எங்கணும் நலன்கள் எல்லாம் பொங்குக

பாலும் சோறும் பாகும் நெய்யுமிந்
நாலும் கலந்த நற்பொங்கலைப் போல்

நம்மோரு பண்டும் நம்மோரு நண்பும்
பொன்னெழில் போலப் பொங்குக பொங்குக

இன்னதோர் பொங்கல் இன்னுமோ ராயிரம்
மன்னக் கண்டு மகிழ்ந்து வாழுமின்

என்னரு நண்பீர் இன்புற வாழ்க
பன்னுபா லாற்றின் மணலிற்பல் லாண்டே.

கா. நமச்சிவாய முதலியார்.

II

பொங்கலோ பொங்கல் !

பொங்கலோ பொங்கல்! எனப் புந்தியுவப்புடனே
புகலுகின்ற திருவிழவிற் புத்துயிர்பெற் றெழுமின் !
சங்கராந்திப் பெயர்கோள் தனிப்பெருநாட் சிறப்பு
தகவுடையீர்! பிற எதற்குண்டு ? அத்திருநாள் தனிலே
எங்குமே இன்பம்! பெரு இன்பம்!! மிக இன்பம்!!!
இன்றமிழ்நாட் டன்பினரே! உறக்கமினு மேதற்கோ ?
பொங்குவீர் ! புதுக்களிப்பில் புத்துரங்கோண் டெழுவீர் !
புகழ் தமிழ ரமைத்த—வதன் பொருளுணர்ந் துய்வீரே !(1)

மனைவியின் அழகும் அங்கங்களும் கணவன் பார்த்துக் களிக்காத வரைக்கும் என்ன பயனுடைத்து ? அவள் அனுபவிக்கப்படாது வாடும் மலரே.

செந்தமிழ்நாட் டினர்க்குத்தனிச் சிறப்பாமித் திருநாள்
தெளிவீர் நற் பொங்கலெனும் செம்மொழிகொண் டுண்மை
பைந்தமிழர் பயிர்தழைக்கப் பகலவனைப் பணிவார்;
"பால் பொங்கிற்று" வெனவே பரிவோடுகேட் டிடுவர்;
சிந்தையொரு வர்க்கொருவர் செருக்கின்றிக் குலவிச்
செப்பரிய களிப்படைய மறுநாளிற் றிரள்வர்;
நந்தமிழ்நா டன்றுபுதுப் பேரழகோ டொளிர்தல்
நவிலரிய காட்சியதாம் நானுரைப்ப தென்னே! (2)

தலைவணங்கிச் சாய்கதிராம் தானியங்க டமையே
தகுதிபெற அறுத்தபினர் தைமுதனா டனிலே
நிலைபெறுஞ்சீர் கதிரவனை நேயமொடும் வழுத்தி
நின்மலனா மவன்கருணை நினைந்துமுதற் படைட்பீர்!
கலைமலிந்த தமிழ்நாட்டிற் காணிலுழு தொழிலே
கௌரவமாய் முதன்மையதாய் கைத்தொழிலிற் பெரியதாய்
நிலைபெறுத லிவ்விழவால் நேரிதிலே புலனும்;
நேசமதத் தேசமொடு நெருங்கிநிற்றல் தெளிவாம். (3)

மணிவண்ணன் கண்ணபிரான் மலைதனிலன் றுயர்
மகிழ்வொடணைந் திடுபொங்கல் மனமகிழ்ந்தேற் றனனால்
பிணியொழியும், திருவருளும் பெருகும், துயர் விலகும்
பெருமான்நங் கண்ணனுக்கே அருப்பணமாய் படைப்பீர்!
அணிதற்குங் கதரன்றி அயல்நாட்டுக் கலையை
அணியாதீர் சோதரரே! அன்னைமொழி வளரப்
பணிபுரியத் துணிவுடனே பகர்விரதங் கொள்வீர்!
பைந்தமிழ்நாட் டன்பர்களே! பழம்புகழைக் கொணர்வீர்!

பாற்பொங்கிச் சோறுபொங்கிப் பகர்களிப்பிற் பொங்கிப்
பகலவனைப் பணிந்துபொங்கிப் பலர்குலவிப் பொங்கி
மேற்பொங்கி வழியுமன்பில் மிக்கவருள் பொங்கி
வேண்டுநரில் வேண்டாரில் வேற்றுமை நோக்காத
தாற்பொங்கிப் புதுவலியிற் சார்பணியிற் பொங்கி
சமரசத்திற் பொங்கிதமி ழகம்பொங்க மிகவே
மாற்பொங்கி நமக்கெல்லாம் வழங்குகசீ ரருளே!
மங்களமே! பொங்கறரும் மங்களமே விளைக! (5)

ஆரியூர் - வ. பதுமநாப பிள்ளை.

எவ்வளவு மூடி மறைத்து உயர்குணம் காண்பித்து நடிப்பினும், பழய அற்பகுணம் மறைந்திடாமல் அடுத்தடுத்துத் தோன்றிவிடத்தான் செய்கிறது.

வீட்டுத்தலைவன் எந்த மங்கையிடத்தாவது வசமாயின் அத்துடன் சிதறிவது வாழ்வு.

குழந்தைகள் பக்கம்

நீதிக் கதைகள்.

நீதி :—பெரியோர்களை வணங்குவது எப்பொழுதும் நன்மையைத் தரும்.

1. வால்மீகி முனிவர்.



ஓர் காட்டில் கொடுந் தொழிலைச் செய்யும் வேடனொருவன் வாழ்ந்துவந்தான். அவனையண்டிப் பல உறவினர்கள் வாழ்ந்து வந்தனர்கள். அவர்களைக் காப்பது இவனுடைய தலையிற் சுமர்ந்தது. ஆதலால் அவன் வில்லும் கையுமாகக் காலையில் வீட்டை விட்டுப் புறப்பட்டுப் பல பறவைகளையும் மிருகங்களையும் யமனுலகிற் கனுப்பி விட்டு சாயங்காலமே திரும்பிவருவான். தினந்தோறும் இங்ஙனமே செய்துவந்தபடியால் அக்கானகத்தில் உள்ள பறவைகளும் மிருகங்களும் அவனைக் கண்டால் மிருத்யுவைக் கண்டதாகவே நினைக்கும்.

இங்ஙனம் காட்டில் உள்ள மிருகங்களுடையவும் பறவைகளுடையவும் நிம்மதியை முற்றிலும் ஒழித்த அந்த வேடன் ஓர் சமயம் பல பறவைகளையும் மிருகங்களையும் சுமந்து கொண்டு திரும்பி வந்துகொண்டிருக்கையில் எழு முனிவர்கள் எதிரில்வர நேரிட்டது. அவர்கள் இந்த சிறியப் பிரளயத்தைக் கண்டதும் நடுங்கி "அந்தோ, இது என்ன அக்கிரமம், எதற்காக இவ்வளவு பிராணிகள் இறந்தன" என்று வருத்தத்துடன் அவ்வேடனை அழைத்து விசாரிப்போம் என்று அவனை அழைத்தனர். அவர்களுடைய காந்தியினால் இழுக்கப்பட்டோ, தன் நற்காலம் பிறந்தமையினாலோ, அவர்களின் அழைப்பிற்கிணங்கி அவர்களுடன் பேச வேண்டும் என்று கருதி அவர்களை அணுகினான். முனிவரும் "அப்பா, உன்போன்றதும், உனக்கு ஓர் தீங்கையும் செய்யாததுமான இப்பிராணிகளை என் வதைத்தாய்?" என்று கேட்டனர். 'இதுவே எனக்கு ஜீவனம், தினமும் இங்ஙனமே வாழ்கிறேன், இதில் என்ன தவறு, என்று விடையளித்தான் வேடன். ஏழுரிஷிகள், "அப்பா, வேறுவிதமான ஆகாரங்கள் உனக்குக் கிடைக்காதா? அதிலும் இவ்வளவு ஆகாரம் எதற்காக? என்று கேட்டனர். என் குடும்பம் பெரியது, இதுவே போதாது என்று வருந்துகிறேன் என்று வேடன் கூறினான். 'இது பாபமாகும். இதைவிட்டு விடு. வேறுவழியில் பிழைத்துக்

முன்வலிக்கு சக்குக் கெபாழும் என்ன செய்யவல்லது?

கொள்' என்று ரிஷிகள் உபதேசித்தனர். வேடனின் மனதில் இருந்த திரை சிறிது விலகிற்று. பெரியோர்களே, உங்களுக்காக இதை விட்டு விடுவேன். ஆனால் என் குடும்பமோ வேறு ஆகாரத்தையே புசித்தறியாததலால் நிச்சயமாய் அழிந்துவிடும்; நானாவது உயிரைவிட்டாவது உங்கள் வார்த்தையைக் காப்பேன். ஆனால் என்னையே அண்டி நிற்கும் குடும்பம் அழிய நான் பார்த்திருப்பது தகுமா? என்று வினவினான்.

தன்வழிக்கு வேடன் மெதுவாக நகருவதை ரிஷிகள் உணர்ந்தனர். அவர்கள் 'ஏ மூடா, நீயோ உன் குடும்பத்திற்காக இதைச் செய்வதாகவும், உனக்காகவில்லை என்றும் கூறுகிறாய். ஆனால் இதுவோ பெரிய பாப காரியமாகும். நீ கொண்டு செல்லும் மூட்டைகளை விடப் பன்மடங்கு அதிகமாகப் பாபங்கள் சேருகின்றன. நாங்கள் சொல்வதைக்கேள். உன் வீட்டிற்கு மூட்டையை இங்கு வைத்து விட்டுச் செல். அவர்கள் ஆகாரம் எங்கேயென்று கேட்டால், "அது பாபம் என்றும், அது முழுவதும் உன்னையே சேரும் என்றும்" என்று நாங்கள் கூறியதாகக் கூறி, அவ்வாகாரத்தில் உங்கட்குப் பங்கு இருப்பதுபோல் பாபத்திலும் பங்குண்டா எனக் கேள். பிறகு அவர்கள் கூறும் பதிலை எங்களிடம் கூறு; அதுவரை நாங்கள் இங்கு காத்திருப்போம்' என்று சொல்ல, வேடனும் வெறுங் கையுடன் வீடு சென்றான்.

பசியால் வருந்தும் உறவினர்கள் நாழியாகியும் ஒன்றும் இல்லாமல் வந்த வேடனைச் சீறி விழுந்து என்ன காரணம் என்று கேட்டனர். ரிஷிகள் சொல்லித்தந்ததை அவ்வேடன் கிளிப்பிள்ளைபோல் சொன்னான். அதைக் கேட்டதும் மனைவியே முதலில் எழுந்தாள். பசியையும் மறந்தாள். நாதா, இது பாபம் என நீ இன்றுதான் அறிந்தாய்போலும். எங்கட்கு இது தெரியும். ஆனால் இதில் எங்கட்குப் பங்கு கிடையாது. நீ இக் குடும்பத்திற்குத் தலைவன். எவ்வழியிலும் காப்பாற்ற வேண்டியது உன் கடமை. இந்த ஆகாரம்தான் வேண்டும் என்று நாங்கள் கேட்டோமா? நல்ல வழியில் ஆகாரத்தை அளித்தாலும் நாங்கள் சாப்பிடத் தயாராயிருக்கிறோம். அதை யறியாது நீ இத்தொழிலைச் செய்தால் அப்பாபம் உன்னையே சேரும் என்று அலக்ஷியமாய்க் கூறினாள். மற்றவரும் அவள் சொன்னதுதான் நியாயம் என்று கூறினர்.

வேடன் கேட்டான். நடுங்கினான்; என்னே நம் பேதமையும் இவர்களின் வஞ்சனையும்! கொள்ளென்றால் வாயைத்திறந்தும், கடிவாளம் என்றால் வாயை மூடிக்கொள்ளும் குதிரைகள்போல் அல்லவா இவர்கள் இருக்கின்றனர். நான் பாபத்தையும் சேர்த்துக்கொண்டு, இவர்களையும்போஷிக்கவேண்டுமாம். இதுமட்டும் என்ன அவசியம்? அடுத்த பிறவியில் நம்மைக் கஷ்டப்படவிட்டு அவர்கள் சுகமாக வாழவல்லவோ விரும்புகின்றனர். நானும் இவர்களை விட்டு என் காரியத்தை என் கவனிக்கக்கூடாது? என்று மனதில் தீர்மானித்தான். ஓடிவந்து ரிஷிகளின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். மகரிஷிகளே, நான் எல்லாவற்றையும் ஒழித்தேன். எங்ஙனமாவது இப்பாப மூட்டையை அழிக்க ஏற்பாடுசெய்வது உங்களுடையகடமை. நீங்கள் உறுதி கூறினாலன்றிக் கால்களை விடேன் என்று

உண்மை அன்பினர்களுக்கு மயானம் ஒரு சோதனை யிடமாம்.

கதறுகிற அவ்வேடனை ரிஷிகள் அன்புடன் எழுப்பி, 'அப்பா, நாங்கள் கூறுகின்ற இரு எழுத்துக்களைச் சொல்லிக்கொண்டு நாங்கள் திரும்பிவருகிறவரை இங்கேயே இரு, நீ நன்மையை அடைவாய்' என்று சொல்லி ராம மகாமந்திரத்தை உபதேசித்துத் தம் இருப்பிடம் சென்றனர்.

வேடன் அழியாத உறுதியைக் கொண்டான். மழையிலும், வெயிலிலும், பகலிலும், இரவிலும், ஆகாரத்திற்காகவும், நீர் வேட்கைக்காகவும் இருந்த விடத்தைவிட்டு அசையாமலும் கண்களைத் திறக்காமலும் ஜபம் செய்துவந்தான். நாட்களும் மாதங்களும் ஆண்டுகளும் கழிந்தன. ரிஷிகள் இந்த நினைவையே மறந்தனர். வேடனைச் சுற்றிப் பெரிய புற்று சூழ்ந்து மறைத்தது. தன் பிரஞ்ஞையையே மறந்து ராம நாமாமிருதத்தைமட்டும் பானம் செய்துவந்தான். பல ஆண்டுகள் கழிந்து அவ்வேழு ரிஷிகளும் அதே காட்டின் வழியே தற்செயலாய்ச் சென்றனர். இடம் தெரியாமல் வருகின்ற ராம நாமத்தைக் கேட்டுத் திகைத்தனர். ஆராய்ந்து புற்றிலிருந்துவருவதை அறிந்து அதைக் கலைத்தனர். கண்களைப்பறிக்கும் ஒளியுடனும் வாயில் ராம நாமத்துடனும் எதிரில் நிற்கும் பெரியோரைப் பழைய வேடன்என்று அறிந்து அவனுடைய உறுதியைக் கண்டு வியப்படைந்தனர்.

புற்று ரிஷியும் அவர்களின் கால்களில் வீழ்ந்து "பெரியோர்களே உங்களை வணங்கியதால்தான் என் மனம் நல்வழியில் பிரவேசித்தது. இன்னமும் நீங்கள்தான் என்னை நேர்வழியில் செலுத்தவேண்டும்" என்று கெஞ்சினான். ரிஷிகள் அவரை நோக்கி, ரிஷியே, உம்முடைய தவம் மிகவும் மேன்மையானது. இவ்வளவு உறுதியுடன் எவரும் செய்ததில்லை. நாங்களும் உம்மிடமிருந்து விஷயங்களை யறியவேண்டிய நிலை உமக்கேற்பட்டுவிட்டது. நீர் வேடனாய் வாழ்ந்தது வேறொரு பிறவியென்று நினைக்கவேண்டும். புற்றிலிருந்து வெளிப்பட்டதால் உம்மை எல்லோரும் * வால்மீகி என்று அழைப்பர். உம் புகழ் சூரிய சந்திரர்கள் உள்ளமட்டும் விளங்கும் என்று ஆசீர்வாதங்கள் செய்து விட்டுச்சென்றனர். அவரும் பிறகு பெரிய மகரிஷியாக வஸித்து வந்தார். பிரம்மதேவரின் உபதேசத்தை ஆதாரமாகக்கொண்டு, உலகெலாம் நிகரற்று விளங்கும் உத்தமகதையாகிய முதற்காவ்யமான ராமாயணத்தைச் செய்தார். தன் தெய்வமாகிய ராமரே தன்னைப் பூஜிக்கும் பாக்கியத்தையும், அவர் மைந்தர்களையே சீடர்களாகப் பெறும் அதிர்ஷ்டத்தையும், அடைந்து எல்லா ரிஷிகட்கும் முதல்வராக விளங்கினார்.

ஓர் வேடன் கனவிலாவது இந்நிலையை அடைய முடியுமா? என்ன காரணத்தால் அவன் அந்த நிலையை அடைந்தான் என்று யோசியுங்கள்.

"பெரியோர்களை வணங்குவது எப்பொழுதும் நன்மையைத் தரும்" என்பதை நினையுங்கள். ரிஷிகள் நடுவழியிலே தடுத்து உபதேசம் செய்யாவிடினும், இவர் அவர்களை வணங்கி சொன்னபடி நடக்காவிடினும், இவரது கதி என்னவாகும்?

டி. ஆர். ராமநாத சாஸ்திரி.

சிரோமணி.

---

* குறிப்பு வல்மீகம் என்றால் வடமொழியில் புத்து 'என்று அர்த்தம், அதிலிருந்து உண்டானமையால் வால்மீகி என்று பெயர் வந்தது.

சிறுமணித்திரள்

ஸாதியின் அமுத வாக்கு.

482. ஆண்டவனிடம் நம்பிக்கையுள்ளவனுக்கு—ஆண்டவனே எல்லாமாகிறான்.

483. மிகக் கற்றோனாயினும் கற்றபடி நடக்கமாட்டாதவன் ஒன்றுமறியமாட்டாதவனே. அவன் வேதாந்தியுமல்லன்; துறவியுமல்லன்; புத்தக மூட்டை சுமக்கும் மிருகமேயாவன்.

484. அறிவைப் பெற்று அதற்கொப்ப ஒழுகாதவன் பூமியைப் பண்படுத்தியும் விதை விதைக்காதவனை ஒப்பான்.

485. பொறுமையால் பீடிக்கப்பட்டோரே! நீங்கள் தோன்றாதிருப்பது உலகுக்கு நன்மையை யளிக்கும். ஏனெனின், பொறமை என்பது மரணத்தோடுதான் மறையும்.

486. ஒரு சிறிய பாயில் பல துறவிகள் அமைதியாய்த் துயில் கொள்வார். ஆனால், ஒரு பெரிய நாட்டில்—இருமன்னர் சமாதானத்துடன் வாழ முடியாது.

487. ஆயிரம் பாரம் கனமுடைய கல்லைச் சுமப்பவன் ஒரு சாதாரண வசையைச் சகித்துக் கொள்ளாவிடின் என்ன பலன்?

488. ஒரு பிரயாணியின் கையிலுள்ளதங்கம் திருடர்களால் அபகரிக்கப்பட்டோ, அல்லது செலவழிந்தோ போகக்கூடும். மனத்திலுள்ள அறிவோ விருத்தியாகி என்றும் நிலைத்திருக்கக் கூடியது.

489. உன்னுடைய பகைவரோடு பழகிவரும் சிநேகருடன் நட்புக் கொண்டிருப்பதை விட்டுவிடு.

490. ஆண்டவன் சர்வ வல்லவன்; அறவாழி; மாபெரும் நீதிபதி. நன்மை புரிபவர்க்கு நன்மையையும், தீமை புரிபவர்களுக்குத் தீமையையுமளிக்கின்றான்.

491. காமம் நகரந்தீ போன்றது. அதில் மூழ்கிவிடாமல் ஜாக்கிரதையாயிரு.

492. மனித வாழ்வு இன்பமும் துன்பமும் நிறைவும் குறைவுமுள்ள தாய்ப் பாலைவனக்காற்று போலச் செல்லுகின்றது.

493. கொடிய பாலைவன மத்தியில் பசியால் வருந்தும் ஒருவனுக்கு மண்ணும் தங்கமும் ஒன்றேயாகும்.

494. ஒரு மிருகத்துக்குப் பேசக் கற்பிப்பதென்பது முடியாத காரியம். ஆனால், மௌனத்தை அதனிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்ளலாம்.

495. சுறுசுறுப்பற்ற பண்டிதன் ஏழைக் காதலனை யொப்பான். அறி

ஹிந்து மதந்தான் பூலோகமனித வர்க்கத்துக்கு நலம் செய்வதென்றால் அதனை அதன் ஜீவதர்மம் கெடாவண்ணம் நல்ல முறையில் பயன்படுத்துங்கள்.

வற்ற பிராயாணி இறகற்ற பக்ஷியை யொப்பான். கல்வியறிவற்ற பக்தன் கதவற்ற வீட்டை யொப்பான். அநுஷ்டானமற்ற வேதாந்தியோ பழமுண்டாகாத மரத்தை யொப்பான்.

"துள்ளப்பா துள்ளு! இன்னும் துள்ளு. துள்ளுகிறவரை துள்ளு! மேலும் மேலும் பேசு. நன்ருகத் துள்ளு! நீ துள்ளுகிற ஆணவத்திற்குப் பின்னுலே அடக்குகிற வழியில் அடக்குகிறேன். நான் கையாலாகாதவனல்ல. அவசரப்படக் கூடாதென்றல்லவோ காத்திருக்கிறேன். உன் ஆட்டம் ஓய்ந்ததும் அதன் பலனையே நீயே காணப்போகிருய்!" என்று இவ்விதமாக ஒருவர் கூறினுர். அதன் படியே பிறகு ஒரு காலம் நடந்தும்விட்டது.

496. என்னுடைய குற்றங்களைப் போற்றிக் குறைகளைப் புகழும் நேசரை நான் வெறுக்கிறேன். என்னுடைய குறைகளைப் பறை யறைவிக்கும் எதிரியே என் அன்பனுவான்.

497. துறவென்பது வெளி உடையிலில்லை. அஃது உள்ளத் தூய்மையிலும் எளிய வாழ்க்கையிலுமே அமைந்திருக்கிறது.

498. திரவியத்தை ஆசிப்பவன் துறவியல்லன். துறவி பணத்தாசை யுடையவனல்லன்.

499. நீ தீயகுணமுள்ளவனுக இருந்து பிறரால் புகழப்படுவதினும் நற்குணமுள்ளவனுயிருந்து தூஷிக்கப்படுதலே நலம்.

500. பணம் சேமித்து வைப்பதற்காக உண்டானதன்று. அஃது அனுபவித்தற்கே உரியது.

501. ஓ! திருப்தியே. நீயின்றி ஒருவரும் செல்வவானுதல் முடியாது. பொறுமை யற்ருர் ஞானிகளாவ தெங்ஙனம்?

கா. அல்லாபிச்சை.

கல் மண்டபங்கள்!

ஆங்காங்கு கல்மண்டபங்களை வெகு பிரயாசையுடன் கட்டுவித்தோரின் கருத்து என்னவோ? அவற்றைக் காபி ஹோட்டல்கள், சோற்றுக்கடைகள் ஆக்கவா? அங்கு ஒரு ஆபீஸை நுழைக்கவா? பெரிய உத்தியோகஸ்தர்கள் சுகமே தங்கியிருந்து செல்லவா? சுயநலப்புலிகள் அவற்றைத் தம் சொந்த இல்லமாக்கிக்கொள்ளவா? வாடகைக்கு விட்டு ஜீவிக்கவா? புதிதாகத் தர்மம் செய்ய நாடுவோர் தமது தர்மமும் இவ்வாறு வீணுகாதிருக்க எச்சரிக்கை பெறுக.

பத்திரிகைகளிலும் பேச்சுகளிலும் எழுத்துகளிலும் வெகு பிரமாதம் தான். ஆனுல் உள்ளுக்குள் இருக்கிற உங்களின் உயர்வினது உண்மை நிலை என்ன? மற்றவர்கள் உங்களை எவ்வாறு மதிப்பிடுகிருர்கள் தெரியுமா?

பழமொழிக் குறிப்புகள்

2. அற்ப குணம்.

(472-ம் பக்கத் தொடர்ச்சி.)

115. ஆயிரம் நட்சத்திரம் கூடினாலும் ஒரு சந்திரனாகுமா?

எப்படி ஆகும்? சந்திரன் சந்திரனே; நட்சத்திரம் நட்சத்திரமே. சந்திரனின் ஒளி நட்சத்திரத்துக்கு ஏது? ஆயிரம் நட்சத்திரங்களே கூடட்டும்; அப்போதுங்கூட ஒரு சந்திரனின் ஒளியில் ஒரு இம்மியேனும் இந்த நட்சத்திரங்களுக்கு வருமா? பெரியது பெரியதுதான். அற்பம் அற்பம்தான். சந்திரனைப்போல் குளிர்ந்த முகமாய் விளங்கி நம்மெல்லோரிடத்தும் அன்பும் ஆதரவுமாய், துணையும் உதவியுமாய், நம்மை எக்காலத்திலுமே விட்டுப் பிரியாத பக்கத்து நிழலாய் விளங்கி, நமது பக்கமே பேசி, நமது பக்கமே இருந்து, நம்முடனேயே சுற்றித்திரிந்து, நமது உயிருக்குயிராக நின்ற அந்தக் காலஞ் சென்றுபோன பெரியோர்களின் முன்னே, அந்தப் பழைய உறவினரின் முன்னே, இப்போது நம்முடன் கூடி நிற்கும் புது மனைவி, புது உறவுகள், புது நேசர்கள், புதிய பந்துக்கள் ஆகிய இவர்களை வைத்துப் பார்த்தால் மலைக்கும் மடுவுக்குமுள்ள பேதமாய், இவர்கள் ஆயிரம் நக்ஷத்திரங்களாக விளங்க, நம் கண்முன்னே மாண்டுவிட்டவர்கள் ஒரு சந்திரனுக்கு சமானமாய் விளங்க இதை நோக்கி நாம் அங்கலாய்க்கும்படியாகிறது. முன்னிருந்து குலாவி மறைந்தவர்கள் காட்டிய அன்பு பாசம் உண்மை இவற்றில் ஒரு துளிகூட இப்போது நம்மைச் சூழ்ந்திருக்கும் புதியவர்களிடம் காண்பது அருமையாய் விடுகிறது. முன்னிருந்தவர்கள் தங்களின் சொந்த லாபத்தை யுத்தேசிக்காமல் நமது நலத்தையே விரும்பி அதற்காக உழைத்தவர்களாய் நின்றார்கள். இப்போது இருப்பவர்களோ நம்மால் தங்களுக்கு ஒரு ஆதரவு, சுகம், லாபம், சௌகரியம், காண விரும்பி அதற்காக நம்மைச் சூழ்ந்துகொண்டு நிற்பவர்களாகிறார்கள். முன்னவர்கள் நமக்கு உழைத்தார்கள். இப்பொழுதுள்ளவர்களோ நமது உழைப்பைக்கொண்டு அதில் சுகிப்பவர்களாய் இருக்கிறார்களே தவிர, நமது சுக லாபங்களையும் சௌகரியங்களையும் கருதுபவர்களா யில்லை. முன்னிருந்தவர்கள் நமது காலிற் பட்டதைத் தங்களின் கண்ணிற்பட்டது போல் நினைத்து உள்ளம் பதறி ஓடிவந்து நம்மைச் சுற்றிக்கொண்டு இரவு பகல் விழித்து நமது பக்கத்தே காத்து நிற்போரா யிருந்தார்கள். இப்போது இருப்பவர்களோ நம் கண்ணில் பட்டதை தங்களின் காலிற்பட்டதாக எண்ணி ஒப்புக்கு விசாரம் காட்டி. நமது பக்கத்தில் ஒப்புக்குக் கொஞ்சம் நின்றுவிட்டு அத்துடன் தங்கள் கடமை தீர்ந்ததென்று நினைத்துவிடுகிறார்கள். நாம் நோயுற்றுப் பாயில் படுத்தாலும் அவர்கள் தூரப்போய்ப் படுக்கிறார்கள்.

"சென்ற சில வருஷங்களைவிட இவ்வருஷக் காங்கிரஸ் விசேஷமாக இருக்குமெனத் தெரிகிறது" என்றே ஒவ்வொரு வருஷத்திலும் சிறப்பாய்ச் சொல்லப்பட்டு காங்கிரஸ் மகா சபையும் நன்கு நிறைவேறிப் பூர்த்தி பெறுகின்றது.

நாம் நோயுற்றதாக வந்து பார்த்தவர்களின் கணக்கில் தங்கி நன்ருக நாலு தினுசு காய்கறி பதார்த்தங்கள் ஆக்கிக்கொண்டு தின்று வெற்றிலைப்பாக்கு போடுபவர்களாக இருக்கிருர்களே தவிர, நமது பக்கத்தில் வந்து உதவிக்கு நிற்போராகக் காணேம். நமது பிணி உபாதையில் இரவெல்லாம் விழித்திருந்து கண்கலங்கிருலும் அவர்கள் ஹாயியாகத் தூங்கியபடி கிடக்கிருர்களே யன்றி, நமது அருகிலிருந்து விசிறியும், மூக்கினுல் சுவாசம்விட முடியாமல் அதற்கு சக்தி குன்றி வாயினுல் விட்டு, அப்படி விடுவதனுல் நாவு உலர்ந்து தாகம் எடுக்கிற வேளைக்கு நமது தாகம் அறிந்து ஜலம் தருவோராகவும் இல்லாமல் எங்கோ ஒரு மூலையில் நித்திராதேவியுடன் ஆநந்தமாய் இருக்கிருர்கள். நாமே கஷ்டத்துடன் எழுந்து குடம் லோடா இருக்குமிடம் தேடிச் சென்று தாகத்திற்கு ஜலம் எடுத்து அருந்த வேண்டிய நிலையிலாகி விடும் போது அந்த சமயம் நாம் முன்னிருந்தோரை நினைத்துக்கொண்டு அழுது புலம்பி, அவர்களைப்போல ஆவார்களா இவர்கள், அவர்கள் நமது பக்கத்திலேயே இருந்து சதா விசிறியபடியே கிடந்து, அந்த விசிறியையும் நம்மீது போட்டுத் தாங்களும் தூக்கமயக்கத்தில் நம்மீது விழுந்து, உடனே விழித்துக் கொண்டு திடுக்கிட்டு எங்கு நமக்கு அதனுல் நோவு உண்டாயிற்ருே வென்று வருந்தி நம்மை அன்பாகத் தடவிப் பார்த்துவிட்டு மறுபடியும் விசிறுபவர்களாயிற்றே; நாம் தூங்கியபடியே இருந்தாலும் நமது நாக்கைத் தடவிப் பார்த்து, ஐயோ வாயெல்லாம் உலர்ந்துவிட்டதே, உதட்டில் ஒரு துளி ஈரமும் காணேமே யென்று நமது வாயில் ஆறவைத்த வென்னீரைச் சொட்டுச் சொட்டாக ஊற்றி நனைத்தபடி இருக்கப் பண்ணுபவர்களாயிற்றே; இரவெல்லாம் விழித்தபடி நமக்குக் கஞ்சியைச் சுடச்சுட ஊற்றிக் கொடுத்து உண்பிப்போராயும் இருந்தார்களே, கடைசியில் பொழுது விடிகிற நேரத்தில் தங்கள் சக்திகுன்றி தங்களையே மறந்து நமது பக்கத்தில் தங்களையறியாமலே தூங்கிவிடுகிற அன்பின் களஞ்சியமாயிற்றே, அத்தகையோர்முன் இப்போது இருப்பவர்கள் எம்மாத்திரத்திற்கு; இந்த ஆயிரம் நக்ஷத்திரங்கள் கூடினுலும், முன் நம்மை அரவணைத்து நின்று மறைந்தோராகிய சந்திரனுக்கு ஈடாவரா என்று நெஞ்சுருகித் தவிக்கவேண்டியவர்களாகிருேம்.

இப்போது இருப்பவர்கள் நமது கஷ்டத்தின் பிரயாசையை அநுபவித்துச் சுகிக்கத் தோன்றியவர்களாக ஆயிரம் நக்ஷத்திரங்களாகத் தொகையில் பெருகிப்போயிருக்கிருர்களே யன்றி, தமது கஷ்டங்களின் பிரயாசையால் நம்மைச் சுகப்படுத்துவோராகவும் இன்பமூட்டுவோராகவும் நின்ற அந்த முன்னவர்களாகிய சந்திரனுக்கு ஈடாவோராக இருக்கக் காணேம். பாட்டி, தாயார், தமக்கை, அத்தை, தங்கை, தம்பி இவர்கள் நமக்குக் காண்பித்த ஒரு தனி அன்பை இப்போதுள்ள புதியவர்களிடம் காண்பது அரிதாயிருக்கின்றது. முன்னிருந்த உறவினர்கள் ஒருவருக்கொருவர் உண்மையானவர்களா யிருந்து கொண்டு யதார்த்த அன்பும் விசுவாசமும் கொண்டு சூழ்ந்து நிற்பவர்களாய் பெரிய மனிதத் தன்மையில் கம்பீரமாய் நின்றதுபோக, இப்போதுள்ள உறவினரோ பிசினுறிகளாய் எங்கே ஒட்டிக்கொள்வார்களோ எங்கு செலவாய் விடுமோவென்று கைவிடுவோராகவும், ஒப்புக்கு உபசாரம் கூறுவோராகவும், செத்துப்போன பின்பு வந்து பார்ப்போராகவுமே மாறியுள்ளார். இந்த நக்ஷத்திர உறவுகள் எத்தனை ஆயிரம் கூடினுலும் முன்னிருந்த பெருந்தன்மை வாய்ந்தோரான சந்திரவதனர்களின் ஒளிக்கு ஈடாவரா?

தாய்க்குப் பதிலாக மாற்ருந்தாயைத் தாயாக எவ்வளவுதான் கருதினு லும் அது பொருந்தி வருகிறதா? போய்விட்ட தமக்கை தங்கைக்குப் பதிலாக இன்னொருவரைத் தமக்கை தங்கையாகக் கொண்டாலும், அந்தப் பழையவர்க ளின் உண்மையன்பை இப்புதியவர்களிடம் காண முடிகிறதா? கண்மூடி விட்ட தமயன் தம்பியின் அன்பை ஒப்பாரித் தமயன் தம்பியிடம் உணர முடி கிறதா? பிராணபதமாயிருந்த முதல் மனைவியிடம் சுவைத்த ஒரு பிரேமை யின் ருசிகரத்தை இப்போது சிங்காரித்துக்கொண்டு நம்முன் குலாவிநிற்கும் மறுதாரமாகிய பட்டிச் சிறிக்கியிடம் காண நேர்கிறதா? நமது ஆசைத் தந்தை யிடம் கண்ட அன்பை இப்போதுள்ள வஞ்சகனை சிறிய பெரிய தந்தையிடம் அனுபவிக்க முடியுமா? நமது தந்தையின் பொருள் நம்முடையது என்று நினைத்த ஒரு சொந்த எண்ணத்தை இந்தச் சிறிய பெரிய தந்தையின் பொரு ளில் எள்ளளவாவது கொள்ள முடியுமா? நமது பழய நேசர்களின் பாந்தவ் யத்தை இப்போதுள்ள புது நேசர்களிடம் அறிய முடிகிறதா? அது அதுதான். இது இதுதான். ஆயிரம் நக்ஷத்திரங்கள் கூடினாலும் ஒரு சந்திரனுகுமா என்று தான் காலமுற்றிலுமே முன்னதை நினைத்து அங்கலாய்க்க நேருகிறது.

இப்போதுங்கூட அகதியான நம்மிடம் அன்பு பாராட்டி நமக்காகவே நம்மை நேசித்தும் பிரீதித்தும் அரவணைக்கிறவர்கள் இருக்கிறார்கள். நமக்குத் தேகசுகமில்லையென்று ஒரு கடிதம் எழுதினால் உடனே புறப்பட்டு வரும்படி தந்தி அனுப்புகிறார்கள். அந்தத் தந்தியைக் கண்டு அவர்களின் அன்புக்குக் கண்ணீர் விட்டு, பிறகு வருகிறேமென்று எழுதினால், அதற்கு நீ வராவிடில் நான் உடனே அங்கு வந்து உன்னைக் கட்டாயமாய் அழைத்துவரும்படி யிருக் கும்; எனக்கு அவ்வளவு பிரயாசையைத் தராமல் உடனே புறப்பட்டு வரவும் என்று மிக்க கண்டிப்பாய்க் கடிதம் உடனே எழுதி அடுத்தநாள் ரயில்வண்டிக்கு நம்மை எதிர்பார்ப்போராகிறார்கள். இத்தகையோரின் அன்புக்கும் பகவான் நம்மிடத்து வைக்கும் அன்புக்கும் என்ன பேதமிருக்கிறது? இவ்வாறுய அன் பின் களஞ்சியங்கள் நம்மை என்ன கண்டித்தாலும் கோபித்தாலும் அது நமக் குத் தித்திப்பாய் மதுரமாய் அவர்களுக்கு உட்பட்டு வணங்கிச் செல்ல நம்மை உட்படுத்துகிறதாய் இருக்கிறதே தவிர, அவர்கள் எவ்வளவு தூரத்திலிருந்தா லும் அவர்கள் இட்ட கட்டளைக்கு ஒரு அணுமாத்திரம் கூட மீறி நடக்கும்படி நம்மைச் செய்ய விடுகிறதாயில்லை. அவர்கள் சொற்படி நாம் அடங்கி வணங்கி நடந்துகொள்ள வேண்டியவர்களா யுள்ளோம். அவர்களுக்கு நம்மீது இருக் கும் அன்பை நோக்கிப் பூரித்துப்போகிறவர்களா யுள்ளோம். **ஆகா! அன்பின் அரசாக்ஷியே அரசாக்ஷி!** இத்தகைய அன்பினர்களின் கண்ணுக்கு முன்னே நாம் கண்மூடிக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறவர்களாகவும் உள்ளோம். இவ்வாறுன அன்புச் சந்திரனது ஒளியின் முன்னே, இவர்களுக்குப் பின் வரப் போகும் நக்ஷத்திரங்களின் ஒளியை என்னென்பதோ? அந்த நக்ஷத்திரங்கள் ஆயிரம் கூடினாலும் இந்த ஒரு சந்திரனுக்கு ஈடாகுமோ? ஒருபோதும் ஈடா காது. அற்பம் எத்தனைதான் தொகையில் பெருத்தாலும் கடைசியில் அது அற்பமேதான் என்பது இப்பழமொழியின் கருத்து.

(தொடரும்.)

தூங்குகிறவனின் தொடையில் கயிறு திரிப்பதே பேராசைக்காரர்களு டைய வழக்கம்.



நமது கதாப் பிரஸங்கி.

சிபார்சு உத்தியோகம்.

முதல் காட்சி.

இடம் :—கும்பகோணம் ஆண்டார் தெருவில் ஒரு வீடு.

காலம் :—முற்பகல்.

சேஷியம்மாள் தாழ்வாரத்தில் காய் கறி நறுக்கிக்கொண் டிருக்கிறாள். அவள் குமாரர் சங்கரய்யர் காபியருந்தி தாம்பூலம் தரித்து கூடத்தில் ஊஞ்ச லாடிப் பொழுது போக்கியபடி யிருக் கிறார். அங்கு குத்தகைக்காரனான "பிழைக்கும் முத்து" வருகிறான்.

பிழைக்கும் முத்து :—ஐயா! ஒண் ணும் சொல்லாமே சும்மா இருக்கிறீங் களே? இது ஒங்களுக்கழகா? உண்டு, இல்லே என்று தீர்த்து சொல்லிபீங் கன்னா நானும் பக்கத்துலே பார்க்க லாம். எல்லாம் உங்களுக்குத் தெரி யாத புத்திக்கா நான் சொல்லணும்?

சேஷி :—முத்து! நீ என்னவோ படுபாழாய்க் கேட்கிறாயே. இதே நிலத்தில் ஐயரு இருந்தபொழுது 500 கலம் கண்டுமுதல் செய்தது உனக் கும் தெரியும். அவர் இறந்த பிறகு நாங்களே மேல்பார்ப்பதை விட்டு பண்ணையாளா யிருந்து பழகின உன் னிடமே 300-கலத்துக்குக் குத்த கைக்கு விடச் செய்தேன். பிறகு போன வருஷம் நான் இல்லாத பொழுது சின்ன ஐயரிடம் 270 கலத் துக்குத்தான் ஒப்புக்கொள்வே னென்று சொல்லி சீட்டும் எழுதிக் கொடுத்தாய். இந்த வருஷம் இன் னும் 20-கலம் தள்ளிக் கேட்கிறாயே. இது உனக்கு நியாயமாய்த் தோன்று கிறதா? நீயே யோசித்துப் பார்.

சங்கரய்யர் :—நீ இல்லாவிட்டால் வேறு குடியானவன் அகப்படமாட் டானென்று எண்ணிக்கொண்டாய் போலிருக்கிறது? எவனும் கிடைக்கா விட்டால் என் புத்தியைக் கொண்டு நானே ஒரு கை பார்க்கிறேன்.

பி-மு—ஐயோ! ஐயா, அப்படி யெல்லாம் சொல்ல வேண்டாம். உங்க பொருள் உங்க கிட்ட இருக்கு; என் கைவன்மை எங்கிட்ட இருக்கு. அடி பிடி கட்டாயம் யாரு சாமி பண்ணுறா? காவிரியில் தண்ணீர் திருச்சினாப் பள்ளி கிட்டவந்து முட்டுதுங்களாம். அதுதான் கேக்கலாமென்று வந்தே னுங்க. இஷ்டக்குறைவாயிருந்தால் விட்டுடுங்க. வேண்டாம்.

[கீழே உட்கார்ந்து வெற்றிலைப் பாக்கு போடுகிறான்.]

சங் :—நீ பழகியவன். மேலும் ஐயரிடம் பண்ணையாளா யிருந்தவன். அதனால் சிறிது யோசித்தால் நீ படு பாழாய் 2-வேலி நிலத்தை இப்படி 250-கலத்துக்குக் கேட்கிறாயே?

தன்னை விட்டால் வேறு கதியில்லையென்று தன் சிப்பந்திகளைப்பற்றி நினைத்துக்கொண்டுள்ள முதலாளி ஒருநாளும் அவர்களுக்கு சம்பளம் உயர்த் தான். அன்னோரின் நலத்தையும் கருதான். அவன் ஒரு சுயநலப் புலி.

பி-முத்து :—ஐயோ! ஆண்டவனே! நீங்க இங்கிலீஷ் படிச்சுட்டுங்க. நிலத்து நோட்டம் உங்களுக்கென்னதெரியும்? நம்ப ஐயரு நாளில் விளைந்த மாதிரி இப்பொழுது எங்கே விளைகிறது? எங்க அப்பாரு நாளில் நன்ருங் உழுது சாண நாற்றை நட்டு 14, 15 வீதம் மாசி 30-தேதிக்கு அறுப்பாங்க. இப்ப போன புரட்டாசி மாதத்திலே உங்க வயல் கண்டது உங்களுக்குத்தான் தெரியுமே? வீதத்தில் 10-க்கு மேல் எங்கே கண்டிருக்குங்க?

சங் :—[புரட்டாசி மாதம் 10 கலம் கண்ட வயலில் இன்னொரு போகம் மாசி மாதத்தில் அறுவடையாகும் என்பதுகூட சங்கரய்யர் மூளை அறிந்துகொள்ளவில்லை.] சரி! என்ன முடிவு சொல்லுகிருய்? 260-கலம் ஆக வைத்துக்கொள் போ. உனக்காக இருக்கட்டும்.

பி-முத்து :—ஐயையோ சாமி! அப்படிச் சொல்லாதிங்க. உங்களைக் கும்பிடுறேனுங்க! 250-க்கு மேல் தாளுமானல் நான் ஒப்பமாட்டேனு? நான் சொன்னதற்குமேல் வேண்டாம் சாமீ! என்னல் இது முடியாதுங்க.

[என்று வெற்றிலைப் பாக்குப் பெட்டியுடன் கிளம்புகிருன்.]

சங் :—(தனக்குள்) இவனை விட்டால் வேறு கதியுமில்லை. இனி வேறு யாரைப்போய்த் தேட......?பண்ணை வைக்கலாமென்ருல் அதன் பாகுபாடுகள் எனக்கென்ன தெரியும்! நாம் படித்ததில் இதற்கு வேண்டியது என்ன விருக்கிறது? அடடா! நம்முடையபடிப்பில் அதனுடைய அவசியம் இப்பொழுதுதானே உணருகிரேம்? உம். இனி என்ன செய்கிறது? அடே முத்து! சரி! நீ போய் வயல் வெளிகளில் வேலையைப் பார். உன்னிஷ்டம்போலிருக்கட்டும். கோடி வீட்டு கணக்கப்பிள்ளை ஐயரு ஊரி வில்லையாம். அவர் வந்ததும் குத்தகைச்சீட்டு எழுதிவிடலாம் போ.

பி-மு :—அவ்வளவுதான் சாமி கும்பிடுகிறேன்.

(பிழைக்கும் முத்து போகிருன்.)

சேஷி :—சங்கரா! இனி இந்த 250-கலம் எதற்குப் போதும்? நீயாவது எங்கேயாவது 10-காசு கொண்டு வந்தாலொழிய குடித்தனச் செலவுக்கு கஷ்டப்படவேண்டி வரும். என்ன செய்கிறது? எப்படி சமாளிக்கிறது?

சங் :—எங்கேயாவது ஒரு உத்யோகத்துக்குப் போகலாமென்ருல் அதற்கும் இந்த நாளில் சிபார்சுதானே பிரதானமா யிருக்கிறது. பெண்ணைக் கொடுத்தவருல் ஒரு உதவியுமில்லை. உதவி செய்யக்கூடிய நிலைமையிலிருந்தும் அதற்குப் பிகுவு பண்ணிக்கொண்டால்அது ஒரு கௌரவம் என்று எண்ணுகின்றனர் சிலர். நான் எவ்வளவோ வணக்கமும், நல்ல நடத்தையு முள்ளவன். என் அருமை பெண் கொடுத்தவர்களுக்குத் தெரிவில்லை.

சேஷி :—அதுவும் நம்முடைய அதிர்ஷ்டம் தான். எதிர் வீட்டு வெங்கடசுப்பய்யர் பிள்ளைக்குப் பெண் கொடுத்தவன் லால்குடியாம். விவாஹமானதும் வேலையிலிருந்த மாப்பிள்ளையை ராஜீநாமா செய்யச்சொல்லி இப்பொழுது உயர்ந்த சம்பளத்தில் ஒரு வேலை பண்ணிவைத்திருக்கிருனும்.—இருந்தாலும் உன் மாமனரின் கர்வம் யாருக்கு வரும்? (சிறிது யோசித்து திடீரென்று ஒரு யோசனை

உங்களுடைய மதத்தைப் பிறர் மதிக்கவேண்டுமென நீங்கள் விரும்பினல், நீங்கள் பிறமதத்தினரின் உணர்ச்சியை மதிக்கப் பழகவேண்டும்.

தோன்றியவளாய்) சங்கரா! ஒன்று செய்தாலென்ன? மயிலே மயிலே என்றால் அது சிறகுதருமா? நேற்றைய தினம் அவர்களிடமிருந்து சாந்தி முகூர்த்தத்தைப்பற்றி வந்த கடிதத்துக்குப் பதிலாக இன்றையதினம் ஒன்று எழுதித் தபாலில் போட்டுவிடு. எங்கேயாவது ஒரு வேலையைச் செய்துகொண்ட பிறகுதான் சாந்தி முகூர்த்தம் செய்யமுடியுமென்றும், அதுவரையில் பெண் அங்கேயேயிருக்கட்டும் என்றும் எழுதிவிடு! எல்லாம் சரியாய்ப் போகிறது.

ஸங்:—(சிறிது யோசித்து) அதுவும் ஒரு யுக்திதான். எனினும் நீச யுக்தி. ஆனால் அவர் அதற்கு அஞ்சுவாரா என்பதுதான் கேள்வி. என்னவோ வீண்கௌரவப் பட்டப் பெருமையில் துள்ளுகிறார். இப்பட்டங்களை இக்காந்தி நாளில் யார் மதிக்கிறார்கள்?

சேவி:—நீ எழுந்து நான் சொன்னபடியே செய். மேல் நான் நடக்கச் செய்கிறேன். (கலைகிறது.)

இரண்டாம் காட்சி.

இடம்:—திரிசிரபுரம் வஸந்த விலாஸத்தின் முன் ஹால்.

காலம்:—காலை ஒன்பது மணி.

இடது கையில் அன்றைய தினசரிப் பத்திரிகையும், வலக்கையில் மூக்குக்கண்ணாடியும் பரிமளிக்க ராமஸாமி அய்யர் ஸோபாவில் வீற்றிருக்கிறார்.

அவருடைய மனைவி சாஸ்வதி அவரால் அப்பொழுது காலி செய்யப்பட்ட காபி பாத்திரங்களை எடுத்தபடியிருக்கிறாள்.

ஸா:—நேற்று வந்த கடிதத்துக்கு என்ன பதில் எழுதினீர்கள்?

ராமஸாமி அய்யர் மூர்க்க முகத்துடன் பதில் பேசாது பத்திரிகையில் மும்முரமாயிருக்கிறார்.

ஸா:—உங்களைத்தானே! நான் கேட்பது காதில் விழவில்லையா?

ராம:—இப்பொழுது என்னை என்னடி செய்யவேண்டுமென்கிறாய்? நாட்டிலில்லாமல், நகரத்திலில்லாமல் உனக்கு வாய்த்திருக்கும் மாப்பிள்ளையை நீதான் புகழவேணும்! சுத்த முட்டாள்பயல். எந்தநேரமும் தமிழ்ப் பத்திரிகைகளே கதி. அதுவே அவனுக்குத் தியானம். ஒரு "மெயில் பத்திரிகை"யைப் படிக்கிறதுதானே.

ஸா:—ஆமாம்! எல்லாரும் நம்முடைய மாதிரியே இருக்கவேண்டுமென்றால் முடியுமா? இது எல்லாம் அதிசயமாய்த்தானிருக்கு! ஒவ்வொருவர் 8, 10 பெண்களைப் பெற்று ஸமாளித்து விடுகிறார்கள். நமக்கு ஒரே பெண்ணாய் ஏகவசனத்திலாயிருக்கும் போதே இந்தப் பாடு படுகிறது!

ராம:—அடடா! நான் அதற்கென்னடி சொன்னேன்! ஆதியில் எல்லோரும் பரமார்த்திகமாய் பரம ஸாதுக்களாய் இருந்த நாளாயிருந்தது. பிறகு விவாகச் சடங்குகளில் வரதக்ஷிணைக் கொடுமை ஏற்பட்டது. அதன்பிறகு சாந்திகழிக்க சீர் செய்வதாயிருந்தது. பிறகு அதையும் பணமாய்ப் பறிக்கும் காலமாயிற்று. இப்பொழுதோ வேலை பண்ணிவைத்தால்தான் சாந்தி செய்வதென்று நூதனமாய் உன் மாப்பிள்ளை கண்டுபிடித்திருக்கிறார்.——உம். இன்னும் "பிரஸிடென்ஸி பஸ்டா"யிருந்தால் அந்த முறுக்கும் பிலுக்கும் வேறேயிருக்கும்போலிருக்கிறது! அதற்குப் பவுசி இல்லே.

ஒரு மனுஷ்யனுக்குள்ள களைப்பையும் பரதபிப்பையும் அப்படியே அந்த அவஸ்தையுடனேயே அவனைச் சூழ்ந்துள்ளவர்கள் அறிந்துகொள்வதற்கு அவர்கள் அவனை வளர்த்தவர்களாக இருந்தால்தான் முடியும்.

ஸா :—ஏதோ ஸம்பந்தம் செய்து விட்டோம். இனி அவர்கள் பெண்ணை அவர்கள் வீட்டில் சேர்த்துவிட வேண்டியது நமது கடமை. நாம் வரதக்ஷிணை யென்று ஒரு காசுகூடக் கொடுக்கவில்லையே. அவர்கள் பெண் வீட்டை நாசம் செய்யும் இந்த "தக்ஷிணை" வேண்டாமென்று மறுத்துவிட்ட உத்தமர்களாயிற்றே. மறந்துவிட்டீர்களா? வீட்டுப் பெரியவர் அவ்வளவு உத்தமரா யிருந்து கண் மூடிவிட்டார். அவருடைய செல்வக் குழந்தைக்குப் பிழைக்க வழி தெரியவில்லை. ஏதோ சிபார்சுக்கு எழுதினால் அது தப்பிதமா! அந்த உத்தம குடும்பத்திற்கு வேலை செய்து வைப்பது நமது கடமையல்லவா?

ராம :—ஆமாம். கடமையிருக்கட்டும். இந்தக் காலம் இருப்பது இடறி விழுந்தால் எம். ஏ யின்மேல் விழ வேண்டியதா யிருக்கிறது. இவன் எப். ஏ யில் மூன்று வருஷம் "ப்ளக்." இந்த லக்ஷணத்தில் இவன் படிப்புக்கு வேலை எங்கே கிடைக்கும்?

ஸா :—நாம் பெரிய உத்யோகத்தி லிருப்பதால்தான் எல்லோரும் நம்மைக் கேட்கிறார்கள்?

ராம :—எனக்கு உத்யோகமிருந்தால் அது என் கைத்திறமையைக் காட்டுமே தவிர இவனுக்கென்ன? வாயுள்ள பிள்ளையாயிருந்தால் சிபார்சு என்ன? சிபார்சு உத்தியோகம் இவன் கால்நாழிகைகூடப் பெற்றிருக்கமாட்டான். அதில் சிறிதும் சந்தேகமில்லை. என்னைப்போல் இவன் உழைக்க * * *

ஸா :—அதைப்பற்றி நமக்கென்ன? பிராப்தம் போலாகிறது.

ரா :—ஸரஸ்வதி! நீ உன் வேலையைப் பார்! பெயர்மட்டும் காதுக் கினிமையா யிருப்பதைத் தவிர உனக்கு அறிவேது? எனக்குக் கீழ் வேலை செய்த ஆங்கிலேய உத்யோகஸ்தர் என்னைமீறி என் மேலதிகாரியைப்போய் பார்த்ததற்காக சண்டையிட்டு ஒன்றுக்குப் பாதியாய் பென்ஷனுடன் வீடுபோக வந்துவிட்டது உனக்குத் தெரியாதா? மேலும் இம்மாதிரி சிபார்சுகளுக்கு நானா போகிறவன்? என் கௌரவத்துக்குத்தகுமா?

ஸா :—பின்னென்னதான் செய்யப்போகிறீர்கள்? உத்தியோகம் தொலைந்து வீட்டில் குந்தியும்கூட உங்களின் "ராங்கி" போகவில்லையே.

ராம :—ஆயிரம் இரண்டாயிரம் பணம் வேணுமானாலும் கொடுப்போம். வாங்கிக்கொண்டு சாந்தி செய்துகொள்ளட்டும். இவனுக்கு வேலை பார்க்க என்னால் முடியாது. பெண் கமலாவின் அதிர்ஷ்டம் போல் நடக்கிறது நடக்கட்டும்.

ஸா :—உங்கள் பணத்துக்கு அவர்கள் ஆசைப்பட்டு அலையவில்லை. மாப்பிள்ளை என்னவோ வெகு உத்தமர். காபிகூடக் கெடுதல் என்பவர். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் இத் தகையமாமனார் வந்து சேருகிறார்கள்.

(சிடுசிடுத்து உட்செல்லுகிறாள்.)

மூன்றும் காட்சி.

இடம் :—ஈச்சம்பாளையம் கிராமத்தில் ஒரு பெரிய மைதானத்தில் "ஹார்ட்டு" துரையின் கூடாரம்.

காலம் :—பிற்பகல்.

பலமுள்ளவன் செய்த அக்கிரமத்தை ஜாடையாக விட்டுவிடுவது. பல ஹீனன் செய்த தவறுதலைமட்டும் மஹா பிரமாதமாகக்கொண்டு ஆத்திரத்துடன் கண்டிக்க எழுவது—இது சில சூரத்துவப் புலிகளின் வழக்கம்,

ராமஸாமி அய்யர் "உபகாரச் சம்பளம் பெறும் ரிவினியூ ஆபீஸர்" வருகிறார்.

ராம :—(தனக்குள்) ஸரஸ்வதியிடம் அவ்வளவு வீம்பு பேசினேம்! கடைசியில் இந்த ஆறுமாத காலத்திற்குள் நமது மனதே கரைந்துவிட்டது. ———உம். **பெண்ணைக் கொடுப்பதும் சரி, இயந்திரத்தில் கழுத்தைக் கொடுப்பதும் சரி.** பெண்வீட்டுக்காரன் பெண்ணின் பரிதாபநிலையைக் கண்டு எதையும் செய்யத் துணிகிறான். இந்த ஆபாஸக் கொள்கைகளுக்கு விமோசனம் எப்போதோ? என்றெண்ணிக்கொண்டே அக்கூடாரத்தின் வாயில்காப்போனிடம் ஒரு கார்டை நீட்ட அவன் வாங்கிக்கொண்டு உள்ளே ஓடுகிறான்.

(சிறிதுநேரத்தில் உள்ளே விடப்பட்டதும்)

ஹா-துரை :—[நெடுநாட் பழக்கத்தால் துரை நன்றாய்த் தமிழ் பேசுவாரெனினும் இடையிடையே தாய்ப் பாஷையும் கலந்த மணிப்ரவாளநடை தான் அவருக்குப் பிரியம்.] கமான்! கமான்! ராம்ஸாமி என்று கைகுலுக்கி ஆஸனத்தமரச் செய்து அன்பொழுக விசாரிக்கிறார். "நீங்கள் பென்ஷன் வாங்கிக்கொண்டு இரண்டு வருஷங்களாகியும் தங்களை இப்பொழுதுதான் காண நேர்ந்தது." இப்பொழுது என்ன செய்கிறீர்கள்?

ராமஸாமி அய்யர் அதற்குத் தக்க விடைதந்து தான் தற்போது இருக்கும் நிலைமையையும் வந்த காரணத்தையுமறிவிக்கக் கேட்ட துரை (ஆச்சர்யத்துடன்) ஓ! நீங்களே இவ்வாறு கேட்க வந்ததில் I wonder. (நான் ஆச்சரியப்படுகிறேன்.) உங்களுடைய தன்னடக்கமும் கௌரவமும் நீங்கள் இம்மாதிரி வந்தது கனவிலும் நம்பத் தக்கதா? உங்கள் Son-in-law (மாப்பிள்ளை) என்ன படிக்கிறார்?

ராம :—எப். ஏ ஒரு பாகம் தான்.

துரை :—உஸ். அதிலும் ஒன்றுமில்லையே! பி. ஏ கூட இல்லாதது பற்றி மெத்த விசனிக்கிறேன். அதிலும் இது பிராமணர்கள் "Discount-ல்" (தள்ளுபடியில்) இருக்கும் காலம். வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தைக் கவனிக்கும்படி உத்தரவுமேல் உத்தரவாய் வருகிறது. எனினும் நமது பழய நட்பை உத்தேசித்தும் உங்களுடைய உயர்குணங்களுக்கும் மதித்து அவருக்கு ஒரு "கிளார்க்ஷிப்" காலியானதும் கொடுக்கச் செய்கிறேன். பிறகு பார்க்கலாம்.

ராம :—(அநேக வந்தனங்களுடன் எழுந்திருக்க,) துரை இடைமறுத்து, "ஓ! டியர் ராம்ஸாமி! உட்கார். உம்மைக் காண என் மனைவி வெகு ஸந்தோஷப்படுவாள். டீ யருந்திய பிறகு போகலாம்" என்று மேஜையின்மீதிருந்த மணியை அடிக்கிறார்.

நான்காம் காட்சி.

இடம் :—திரிச்சியில் ராமசாமி ஐயர் வீடு.

காலம் :—பகல் ஒன்பது மணி.

ராமசாமி ஐயர் :—இந்தப் பதினொருமாதங்களாக அலைந்து முயற்சி செய்ததற்கு இப்பொழுதுதான் 'காலி' ஏற்பட்டதாம். துரையும் 20-ரூபாய்

வீட்டின் அருகில் வண்டிவந்து நின்று அதிலிருந்தும் இறங்கக்கூடிய மனிதரை முதலில் பார்த்துவிட்டும், பாராததுபோல் வீட்டிற்குள் சென்றுவிட்டு, வீட்டிற்குள் அந்த மனிதர் வந்ததும்—வாருங்கள் வாருங்கள்—என்று உபசரிப்பார் சிலர்.

குமஸ்தா வேலைக்கு உத்திரவு அனுப்பியிருக்கிறார். உத்திரவு வந்தபின் கடிதம் எழுதலாமென்று இந்தப் பதிலுருமாதமாய் நானும் மாப்பிள்ளைக்குக் கடிதம் எழுதவில்லை. அவர்களும் எவ்வித கடிதமும் போட்டவர்களல்ல. உத்தியோகம் கைக்கு வந்தபிறகுதான் மாப்பிள்ளை கடிதம் எழுதுவார்போலிருக்கிறது. அதற்குமேல் தான் "சாந்தி"க்கு ஏற்பாடாக்கும்! எவ்வளவு 'ராங்கி' யாகப் 'பிகு'வுடன் அவர்கள் இருக்கிறார்கள் பார்த்தாயா? இத்தகைய மடையனுக்கு நமது அருமைக் கமலத்தைத் தரும்படி நேர்ந்ததே! அது என் தலைவிதி!

(இந்த சமயம் தபாற்காரன் ஒரு கடிதத்தைக் கொடுக்க, அதைப் பிரித்துத் திடுக்கிட்டு வாசித்துவிட்டு முகமலர்ச்சியுடன் மனைவியை யழைத்து,)

ராமசாமி ஐயர்:—கேட்டாயா சங்கதி. மாப்பிள்ளை கடிதம் எழுதியிருக்கிறார். வெகு புத்திசாலிபோலிருக்கிறதே. உத்தியோகத்திற்காகக் கடிதம் எழுதிய மறுநாள் குத்தகைக்காரன் குத்தகைக்குப்பத்திரம் எழுதச் சொன்னானும். அவ்வளவு குறைந்த நெல்லை அவனிடமிருந்து பெற மனமில்லாமல் கோயமுத்தூருக்குச் சென்று விவசாய நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து, அவர்களை யழைத்துவந்து நிலங்களைக் காட்ட, அதைப் பார்த்து அவர்கள் 'இதைச் சரியாய்ச் சீர்திருத்தி பண்ணை வைத்தால் எந்த உத்தியோகமும் தேவையில்லாமல் **தனிக் காட்டு ராஜாவாய்** ஆண்டு அனுபவிக்கலாம்" என்று சொன்னார்களாம். அவ்விதமே ஆயிரம் ரூபாய் பாங்கியில் வாங்கி தக்க நிபுணர்களை வைத்துக்கொண்டு இந்தப் பத்து மாதங்களாய் வேலை செய்ததில் ஏராளமான லாபம் கண்டிருக்கிறதாம். நல்ல புஷ்டியான எருவைப் போட்டதில் இவ்வளவு அதிக பலன் கண்டதாம். குத்தகைக்குக் கேட்டவன் தன் மோசம் தெரிந்து கொண்டார்களென்று மறைந்து விட்டானும். கொடிமுந்திரி, எலுமிச்சை முதலிய பல பழ தினுசுகளையும் பயிரிட்டிருக்கிறார்களாம். கமலாவுக்குப் பிரியமான 'கமலா'வும் இருக்கிறதென்கிறார். நிலங்களின் வளப்பத்தையும் செழுமையையும்வந்து பார்த்து ஸந்தோஷத்துடன் தன்னை ஆசீர்வதிக்க வேண்டுமென்றும், சேவகாவிர்த்தியான உத்தியோகம் தனக்கு வேண்டாமென்றும், தக்க பலன் கண்டபிறகு ஆநந்தமாய்க் கடிதம் எழுதலாமென்று மௌனமாயிருந்ததாயும், எல்லோரும் கமலத்தோடு புறப்பட்டு வரும்படியும் மாப்பிள்ளை எழுதியிருக்கிறார். இவ்வளவு புத்திசாலி என்று நான் எண்ணவேயில்லை. இனி இந்த 20-ரூ. குமாஸ்தா வேலையை என்ன செய்ய? குப்பைத் தொட்டியில் எறியவேண்டியதே.


ஸரஸ்வதி:—எப்பொழுது புறப்படுகிறீர்கள்? நாளை நல்ல நாள். அப்படியே போய் 'சாந்தி'க்கும் ஏற்பாடு செய்துகொண்டு வந்துவிடுவோம். கமலம் நல்ல அதிர்ஷ்டசாலிதான். மாப்பிள்ளை தங்கவிக்கிரகமே.

***

ராமசாமி ஐயர் குடும்பசகிதமாய் மாப்பிள்ளையின் ஊர் சேர்ந்து நிலங்களை யெல்லாம் பார்த்து மாப்பிள்ளையின் உழைப்பைச் சிலாகித்தார். சாந்திக்கும் மல்லிகைக் காலமாகிய சித்திரைமாதம் என்று ஏற்பாடாயிற்று. இனி கமலம் சரஸ்வதி இவர்களின் ஆநந்தத்திற்குக் கேட்பானேன்?

ஜி. ஜெகநாதாச்சாரி.

[இந்தத் தை மாதத்தில் 'மாப்பிள்ளை மார்க்கட்'டில் இவ்வாறான தங்க குணமுள்ள மாப்பிள்ளை யகப்பட்டால் பெண்ணைப் பெற்ற வயிறு எவ்வளவோ குளிரும். ப-ர்.]



எனது அநுபவ வாசகம்.

நிமிஷத்திற்கு ஒரு பத்திரிகையாகக் கிளம்பும் தற்காலத்தில் இவ்வளவு குறைந்த சந்தாவான ஒரு ரூபாயில் சொல்லற்கரிய பல அரும் பெரும் விஷயங்களடங்கி அநுபவமாகவே நீதிகளைப் போதிக்கும் பத்திரிகை நம் அருமை 'அமிர்த குணபோதினி'யேயாம். அதன் பெயருக்கேற்ப அமிர்தம் எவ்விதம் மூப்பிணிகளை நீக்கி அந்திய மில்லாமல் செய்கிறதோ அதுபோல இது ஆறு விதமான துர்க்குணங்களையும் போக்கி அஞ்ஞான அந்தகாரத்தை நீக்குகிறது.

சாதாரணமாக உலகில் கல்வி, செல்வம் இவை யிரண்டும் ஓரிடத்தில் அமையாதது நன்கு தெரிந்த விஷயமே. நம் அமிர்த குணபோதினியை உடையவர்க்கு கலைமகள் திருமகள் இருவர் கடாக்ஷமும் பொங்கித் தங்கு மென்பதற்கு அதன் முதல் பக்கத்திலுள்ள "லக்ஷ்மீ ஸரஸ்வதி ஸம்யோகமே" போதிய சான்றாகும்.

தற்காலம் உலவிவரும் சில பத்திரிகைகள் போல அநாவஸ்யமான பிறமத தூஷணைகளோ, அல்லது குறிப்பிட்ட மனிதர் அல்லது இனத்தினரது தூஷணையோ பூஷணையோ சற்றுமில்லாமல், அதைப் படிப்பதற்கு முன் கொஞ்சம் மனதிலிருந்த மாசுகள்கூடத் தங்காமல் அதை வெருட்டி சமபாவமுண்டாக்குகிறது.

அதில் வரும் விஷயங்கள் ஒவ்வொன்றும் ஆழ்ந்து முதிர்ந்த அனுபவங்களானதால், அதைப் படிக்கும் ஒவ்வொருவரும் எற்கனவே அதை அடைந்தோ அல்லது இனி அநுபவிக்காமலோ இருக்க முடியாது.

ஒருமுறை அல்லது இருமுறை அருந்தினால் அலுத்துவிடும் பலகாரம் பக்ஷணம் பழங்கள் முதலியவை போல சாதம் அலுத்துவிடுகிறதா? இல்லை. அதுபோல நம் "போதினி" ஒவ்வொரு இதழும் எவ்வளவுதரம் படித்தாலும் அலுக்கிறதில்லை. ஒவ்வொரு தடவையிலும் முன்னைவிட அதிகமாக விஷயங்கள் தெளிவாய் மனதிற்குப் படுகின்றன. மேலும், ஆநந்த தரிசனத்தில் ஆசானாகவும், கல்வி யறிவு விருத்தி செய்வதில் தந்தையாகவும், பிரபஞ்ச நவீனம்,

---

தேசத்தின் இயற்கை மூலாதாரங்களை ஆராய்ந்து உபயோகிக்கக்கூடிய சக்தியை தற்காலக்கல்வி இந்நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்குப் போதிப்பதாக இல்லை. இதனால் இந்தியா செல்வம் நிறைந்த தேசமாக இருந்தபோதிலும் தன் பிரஜைகளுக்கு வயிறார உணவளிக்கக் கூடியதாக இல்லை.

—ஸ்ரீமதி. கமலாதேவி சட்டோபாத்யாயா.

கவிதா விலாஸம் முதலியவைகளினால் விதம் விதமாக அறுசுவை யுணவளிக்கும் அருமைத் தாயாகவும், நமது கடை, பிரபஞ்ச விலாஸம் முதலியன நாம் தினமும் அடிபடும் அநுபவங்களைப் பகிர்ந்து எடுத்துரைக்கும் உண்மைச் சகோதரன் உயிர் நண்பனாகவும், ஹாஸ்ய ஸஞ்சீவிநி, விகட ப்ரதாபன் இரண்டும் நாம் எவ்வளவு சஞ்சலத்துடனிருந்தாலும் அதை மறக்கச்செய்து களிக்கச் செய்வதனால் 'கோடி துக்கம் குழந்தை முகத்தில் ஓடிப்போம்' என்றபடி குழந்தையாகவும், ஸ்வதந்திர உணர்ச்சி, ஆத்ம சக்தி இவைகளை யளிப்பதில் தெய்வீக சக்தியாகவும், நம் அமிர்த குணபோதினி விளங்குகிறது. சகோதரிகளே! எவ்வளவு சொன்னாலும் போதாது—நம் "போதினி" யின் மகிமை. நமது சகோதரிகளின் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு "அமிர்த குணபோதினி" இருக்கும்படி பாடுபட வேண்டியது நம் கடமை. சக்தியின் அம்சமாயுள்ள பெண் மணிகளாகிய நாம் பாடுபட்டால் நடக்காதது ஒன்றுமிராது. இப்பத்திரிகை ஏழையும் வாங்கக்கூடியது; எந்த சிறிய படிப்பாளிக்கும் அர்த்தமாகக்கூடியது. சந்தாவைக் கவனியுங்கள். மாதம் 1 அணா 4 பைசா தான். ஒரு படி உப்பின் விலைகூட ஆகவில்லை. 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்பது போல இந்த "போதினி படிக்காத ஜென்மம் மேதினியில் வீண்." ஒருவர் வரவழைப்பதை மற்றவர் இலவசமாகப் படித்துக் கொடுக்காதீர்கள். ஒருமுறை படிப்பதால் இதில் மறைந்துள்ள மாணிக்கங்கள் உங்கள் மனதில் பதியாது. உங்கள் மக்களுக்கு நீங்கள் அளிக்கும் பல செல்வங்களுள் இந்த அழியாத அருட் செல்வமும் ஒன்றாயிருக்கட்டும். உமது வீட்டிற்கு வரும் விருந்தினர் நட்பினர்க்கு இதில் ஒரு 'காபி' யும் நீங்கள் அவர்களுக்கு அளிக்கும் ஒரு டம்ளர் காபி பலகாரத்துட னளியுங்கள். அதன் சுவை யறிந்தவர்களானால் உடனே சந்தாதா ராகட்டும். இலவசப் புலிகளானால் அடுத்த காப்பி (பிரதி) தரவேண்டாம். இந்த தேவாம்ருதத்திற்கு 1 அணா 4 பைசாகூட செலவழிக்காத கருமிகளுக்கு அதை இலவசமாக்கவேண்டாம். இனி அதிகம் எழுதினால் விரியுமென்றஞ்சி இத்துடன் நிறுத்துகிறேன். தேவர்கள், ஏன் (பகைவர்களான அசுரர்கள்கூட) ஒத்துக் கடைந்ததினால்தான் அம்ருதம் வந்தது. அது போல நாமனைவரும் ஏகோபித்துக் கடைந்தால்தான் நம் 'அமிர்தபோதினி' பல அநுபவாம்ருதங்களைக் கொண்டுவந்து தரும்.

எக்காரியத்திற்கும் முதல்வனாகி விக்னமில்லாமல் காக்கும் ஸ்ரீ கணநாயகனும், அம்ருத மதனத்தின்போது மந்தரகிரி அமிழ்ந்து போகாமலும் அதற்கு இடையூறுகள் ஒன்றும் வராமல் ஆமை யுருவுடன் காத்த நம் ஸ்ரீ ஆதிநாராயண மூர்த்தியும், குறைந்த சந்தாவில் நிறைந்த சங்கதிகளுடன் வரும் சிறந்த பத்திரிகையாகிய நம் "போதினி" என்றும் விளங்கும்படி அருள் பாலிப்பார்களாக.

அமிர்த குணபோதினியின் மகிமையை ஆயிரத்தில் ஒருபங்கு கூட யாராலும் சொல்ல முடியாது. என்றாலும் என் சிற்றறிவிற் கெட்டியபடி சிறிது எழுதி யிருக்கிறேன்.

பார்வதி,
தெற்கு மாடவீதி, மைலாப்பூர், சென்னை.

கையில் இல்லாத காலத்தில் இருக்கிற அற்ப சொற்பத்தையும் கடன் பெற்றுப் போய்விடுகிறார்கள். அது வரும் வரும் என்று எதிர்பார்த்துப் பிறகு ஏமாந்து போகிறான். (கடன் கேட்பவரிடம் இதைக் காட்டுக.)



லாலா தேவி.

[*All Rights Reserved by the Author.*]

ஆமத்ஷா என்பவன் சிந்து தேசத்தரசன். ஆண்மையும் அழகுமுடையவன்; பரந்த நெற்றியும், அகன்ற கண்களுமுள்ளவன். அரும்பு மீசையும், அந்தமுள்ள நிருதாவும், புஷ்டித்த தேகமும், நன்கமைந்த அங்கங்களுமுடையவன்.

ஓர் நாள் இரவு தன் அரண்மனையைவிட்டு ஊருக்கப்பால் ஏரியின் நடுவிலுள்ள சிங்கார மாளிகைக்குச் சென்று வேடிக்கையாகப் பொழுது போக்குபவனானான். அப்போது பால் போலும் நிலாக் காய, சில்லெனத் தென்றல்வீச, அங்கங்கே பொற்குழாய்களினின்று மாரிபோலும் தண்ணீர்சொரிய, கொடிகளினின்று மணங்கமழ, அவன் மனத்திற்கு இன்பத்தையும், தேகத்திற்குத் தண்மையும் தந்தது. பாவையர் நடனஞ்செய்யவும், பாவாணர் பாட்டுப் பாடவும், பண்டிதர் வீணை வாசிக்கவுமாயினர். ஆமத்ஷா உள்ள மகிழ்ந்து, உடல் பூரித்து தன்னைப்போலும் பாக்கியவான் இல்லையெனத் தருக்கினான். பாடகரிற் பலர் அவன் சண்டையிலடைந்த வெற்றியையும் சொர்க்கத்திற்கிடைக்கும் சுகத்தையும் பற்றிப் பேசி, குயிலின் குரலையும், பூவின் பொலிவையும், பெண்களின் வனப்பையும் வர்ணிக்கலாயினர். அவர்களுளொருவன், ஓர் அரசிளங் குமரியைக் கொண்டாட, ஆமத்ஷா அவள்மீது ஆசை கொண்டு ஆத்திரத்துடன் "அப்பெண்கள் நாயகம் யாவள்? அவளை மணந்தவன் எவன்?" என வினவினான்? பாவலன் "துரையே! இம்மங்கைக்கு இன்னும் மணமில்லை. பர்வத சிங்கின் ஒரே மகள்; லாலா என்னும் பெயரினள். "அன்னம்போலும் நடையாள்; மயிலைப்போன்ற சாயலாள்! சந்திரனையொத்த முகத்தாள்! மேகத்தை யனைய கூந்தலாள்; அவளுக் கிணையாவார் யாருமில்லை" என, ஆமத்ஷா, "நல்லது நீ கூறுவதுபோல அம்மாது அவ்வளவு அழகுடையாளாயின் அவளை என் மனைவியாக்குவேன்; இல்லையாயின் உன்னை என் வாளுக்கு இரை செய்வேன்" என்று கூறிப்போனான். அக்கடுஞ் சொல்லைக்கேட்டு அங்குள்ளோர் அவ்விதம் தூண்டிவிட்ட பண்டிதன் கதி யாதாகுமோ என்றஞ்சினார்கள்.

---

* இக்கதை இனி இரண்டு ஸஞ்சிகைகளில் முடிவு பெறும். இதன் ஸகல உரிமைகளும் அதன் ஆசிரியருக்கே சொந்தமானது.

மறுநாள் ஆமத்ஷா தன் மந்திரியை யழைத்து, பர்வத சிங்கின் மகளைப்பற்றிக் கேட்க, மந்திரி, பண்டிதன் கூறியது உண்மையே யென்றான். ஆமத்ஷாவுக்கோ அவ்வளவு போதும்; அவனுக்குக் காதல் மூண்டது. தலைமயக்குற்றது. வேறொன்றில் நினைவொழிந்தது. அப்போதே சென்று பர்வத சிங்கைக்கண்டு தன் எண்ணத்தைச் சொல்ல ஓர் ஆளை அனுப்பினான். மணப்பெண்ணுக்கு வேண்டிய மணிமாலைகளையும், ஆடையணிகளையும் அனுப்பினான். அரசகுடும்பத்தாரில் அநேகர் ஆமத்ஷாவிற்கு அஞ்சி, தம் அருஞ்செல்விகளை அவன் மனைவியராக்கினும், பர்வத சிங்கோ அவ்வாறு செய்பவனல்லன். அவன் உத்தமகுலத்தில் பிறந்தவன். நல்லகுடியில்வந்தவன். உலகமுழுமையும் தனக்குக் கிடைப்பதாயினும் தன் மகளை அன்னிய குலத்தினனுக்குக் கொடுத்துத் தனது வமிஸத்திற்கு மாறாப்பழிதேடான். ஆயினும், ஆமத்ஷா இஷ்டம்போ லாகட்டுமென்று அவன் பொய்கூறி, அனுப்பிவிட்டு அகோரமலைக்கோட்டைக்குப்போய்த் தன் மந்திரிகளோடு யோசித்து, சண்டைக்குத் தயார் செய்தான்.

ஆமத்ஷாவுக்கு எப்படியோ இச்சங்கதி தெரிந்தது. உடனே அவன் பத்தாயிரம் போர்வீரரைக் கூட்டி, பட்டத்து யானைமீதேறி வந்தான். 'லாலா'வை அழைத்துப்போக மற்றொரு யானை அவன்பின் வந்தது. அவன் அகோரையணுகி கோட்டை வாயிலிற்போய் உள்ளேசெல்ல அனுமதிகேட்டான். அக்கேள்விக்கு விடையாக, ஓர் அம்பு வந்து ஆமத்ஷாவின் முடியில் தாக்கிற்று. அவ்வம்பில் ஒரு சுருளோலை யிருக்கவும், அவ்வோலையை எடுத்துப் பிரித்துப் பார்க்க அதில்:—

மதிகேடா,

இவ்வம்பால் இப்போது உன் தலைமீதுள்ள முடியை எய்தவர், உன் தலையிலுள்ள மூளையைச் சிதறுவிக்கக்கூடும். எச்சரிக்கை.

இங்ஙனம்

லாலா

என்றெழுதியிருந்தது. உடனே மணமகளுக்கென்று அனுப்பிய உடைமைகள் அவன் ஏறிவந்த யானைக்காலில் விழுந்தன. இனி சண்டைக்குக் கேட்பானேன்?

11

இருதிறத்தாருக்கும் சண்டை தொடங்கிற்று. இரணபேரிகை முழங்கிற்று. மூவாயிரம் ராஜபுத்திரர் ஆயுதபாணிகளாய் நின்றனர். துருக்கியர் பத்தாயிரவரும் அணியணியாய்க் கோட்டைமதிலைச் சமீபிக்கவே ராஜபுத்திரர் அவர்களிற் பலரை அம்புகள் எய்தும் கற்கள்வீசியும் மாய்த்தனர். சில சமயங்களில் ஏணிகள் வைத்து மதில் ஏறும்வரை காத்திருந்து, அப்பால் நீண்ட தடிகளால் அவர்களைத் தரையில் வீழ்த்தினர்.

இவ்வாறு துருக்கர் எதிரிகளை எதிர்ப்பதும் மதில்களி லேறுவதும் மாளாக்காரியம் எனக்கண்டு கோட்டையைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டனர். எவ்வளவுகாலம் எதிரிகள்கோட்டைக்குள் இருப்பார்கள்? எத்தனை நாள் அவர்களுக்கு உள்ளே உணவுப் பொருள்கள் கிடைக்கும்?

ஒரு சாமான் வாங்க நினைத்துப் பணத்துடன் புறப்பட, அப்பொழுது நினையாத செலவு ஒன்று எதிர்ப்பட்டு அப்பணம் அதற்கே சரியாகிவிட, மறுபடியும் பெட்டியைத் திறக்க நேர்கிறது.

மூன்று மாதங்கள் ஆயின. உணவுப்பொருள்கள் ஒழிந்தன. சத்துருக்கள் கோட்டையைச் சூழ்ந்தனராதலால் வெளியினின்றும் துணைவருவதற்கில்லை. உணவுப் பொருள்கள் பெறுவதற்குமில்லை. இப்போதாவது பர்வதசிங்கு தன் மகளைக் கொடுக்கச் சம்மதிப்பானாயின் சண்டையை நிறுத்தலாம். ஆயினும் அவருக்கு அவ்வாறுசெய்ய மனமில்லை. சமாதானம் செய்ய வேறு வழியுமில்லை.

ராஜபுத்திரர் எதிரிகளுக்குக் கீழ்ப்படிவதிலும் சண்டையில் இறப்பதே சரியெனத் தேர்ந்தார்கள். ஆனால், தாம் சண்டையில் இறப்பாராயின், தம் மனைவி மக்கள் சத்துருக்களுக்கு வசப்படுவாரென்னும் எண்ணம் உண்டாகி, அவர்கள் மனங் கவல, பெண்கள் எல்லோரும்கூடித் தங்களுக்கு உண்டாகிய துன்பத்தை யெண்ணிப் பெரிதும் துக்கித்தார்கள். பர்வதசிங்கின் தேவியோ,—"என் அருமைத் தோழிகாள்! நம் ஆருயிர்க் காதலர் சண்டையிட்டு வானுலகு செல்வாராயின், நாம் மண்ணுலகிலிருந்து மானம் அழிவதோ? அவர்களைப் பிரியாது என்றும் கூடியிருந்து இன்புறும் வழி தேடுவதோ? நீங்கள் வீணே உள்ளம்நொந்து உருகுவதால் ஏதும் பயனில்லை"—என்று சொல்வித் தீ மூட்டச்செய்து அத்தீயில் விழுந்தாள். உடனே அவளுடைய அருமைத் தோழிமார் அனைவரும் தீயில் குதித்தனர். அப்பால் அக்கோட்டைக்குள்ளிருந்த ராஜஸ்திரீக ளெல்லோரும் ஒருவர்பின்னொருவராக விழுந்து உயிர் துறந்தார்கள். எத்தனைகோரம்!

மறுநாள் ராஜபுத்திரர் காலையிலெழுந்து தம் கடன்களை முடித்து, கடவுளைவேண்டித் தலையில் துளசியணிந்து இடையில் மஞ்சளாடையுடுத்து, சண்டைக்கு ஆயத்தமானார்கள். பர்வதசிங்கும் அவர் குமாரன் இராம்சிங்கும் சேனைகளைக் கூட்டி, கோட்டைக் கதவைத்தாண்டிச்சென்றார்கள். அவர்கள் தலைமீது பொன்னாலான பூச்சக்கிரக் குடையும், ஆதித்தன் அமைந்த அழகிய கொற்றக் கொடியும் தவிர வேறில்லை. சண்டையில் சாவது நிச்சயமாதலால் தம்மை அலங்கரித்துக்கொண்டு ஆகும் பயன் என்ன? என்பது அவர்களின் எண்ணம். சத்துருக்களின் படைகள் ஓர் மணற்குன்றின் மறைவி லிருந்தன. ராஜபுத்திரர் எளிதில் இம்மணற்குன்றை வாரியிறைத்து உள் நுழைந்து, ஆமத்ஷா இருக்குமிடம் தேடிப்போனார்கள். ஆமத்ஷா இவர்கள் வருவதறிந்து தன் யானை மீதேறினான். அவனது சேனாவீரர்கள் அவனை வளைந்து காக்க, ராஜபுத்திரர் அவர்களைத் துரத்தலாயினர்.

ஆமத்ஷாவோ, தன் படைவீரருக்குக் குறியாலும், குரலாலும் தைரியம் கூறிடினும், தானும் அவர்களும் தவறாது அம்புகள் எய்திடினும், கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தன் சேனைகள் சிதற, தான் தனியனானான். அவன் உடல்காப்பாளர் ரஜபுத்திரரை எதிர்த்து ஒவ்வொருவராக மடிந்தனர். அவர்கள் மடிந்தபின் மற்றொரு படை வந்து கூடிற்று.

(தொடரும்.)

ப. சி. கோவிந்தசாமி ராஜா.

அவர்கள் கேட்டதும் கடன்தர, அதற்குச் சற்று முன்னே நாம் ஓரிடத்தில் பணம் வாங்கி வைத்திருந்ததால்தான் உடனே கொடுக்க முடிந்தது. இல்லாவிடிலோ, நம்மிடம் பணம் இல்லையென்றால் அதை அவர்கள் நம்பாமல்—அவ்வளவு அவசரத்துக்கும் இல்லையென்று சொல்லிவிட்டானே—யென்று வீண் மனஸ்தாபப்பட நேர்ந்திருக்கும். இப்படித் தந்தும் பிறகு வருவதில்லை,





இன்று கூடிய நமது கடையில் பிளாச் சொலைச் செட்டியார் குலமகளுக்கும் விலைமகளுக்குமுள்ள பேதத்தை விளக்கப் புகுந்தார். "வெகு நாளாகப் பிரிந்திருந்த எனது நண்பனைப் பார்க்கக் கும்பகோணத்திற்குச் சென்றேன். அன்றிரவு அவன் ஒரு அவசர வேலையென்று சொல்லித் தஞ்சாவூருக்குச் சென்றுவிட்டு மறுதினம் காலையில் வந்து சேர்ந்தான். இவ்விதமே அடிக்கடி தஞ்சை போய்த் திரும்புவதாயிருந்தான். அந்தரங்கமாய்ச் சிலரை விசாரித்ததில் தஞ்சையில் ஒரு தாசியின் வலையில் சிக்குண்டு இருப்பதாகத் தெரிந்து வருந்தினேன். பிறகு என் இருப்பிடமான மதுரை போய்ச் சேர்ந்த பிறகு எனது நண்பனுக்கு அவனது காரியம் சரியில்லையென்று வரைந்தேன். அதற்கு அவன் 'த - நண்பரை ஒரு சமயம் வெளியாக்குகிறேன்' என்று சுருக்கமாய் விடை பகர்ந்தான். பிறகு அவனை செங்கற்பட்டிற்கு வேலையாக மாற்றிவிட்டனர். ஆறு மாதத்திற்குப் பிறகு நான் செங்கற்பட்டிற்குச் சென்று என் நண்பனைக் கண்டு விசாரித்தேன். தஞ்சாவூரிலுள்ள தாயி என்ற தாசி குலஸ்திரீக்குச் சமானவளென்றும், வெகு பிரியமாய் நடந்துகொள்ளும் உத்தமி என்றும், நீங்களே போய்ப் பார்த்தால் யாவும் தெரியுமென்றும் கூறினான். அவன் மனத்தை மாற்றுவதற்கு அது சமயமல்லவென்று மௌனமாயிருந்துவிட்டு, நான் புறப்படும் சமயம் தஞ்சை தாசியின் விலாஸம் பெற்றுக்கொண்டு பிரயாணமானேன்.

***

தஞ்சை வந்தேன். அங்கே அறிமுகமான ஒரு புரோகித சாஸ்திரி, அவரை விசாரிக்கவும், எனக்குத் தெரியாத தாசிகளுண்டா என்று பிரதாபமாய்ச் சொல்லிக்கொண்டார். அவர் துணையோடு நண்பனது தாசியின் வீட்டைக் கிட்டினேன். மாலை மயங்கும் வேளை. நான் உட்சென்றதும் ஒரு சுந்தரி எதிர்வந்து வணங்கினாள். நானும் இரு கை யெடுத்து வணங்கினேன். புரோகித சாஸ்திரிக்குக் கோபம் வந்துவிட்டது. 'வணங்குவதா?—ஆசீர்வதித்து அனுப்புமையா' என்றார். நானோ தாசி வீட்டையே அறியாதவன்; எனக்கு இந்த விவரம் முன்பே தெரிந்துகொள்ள முடியவில்லை. பிறகு உள்ளே அழைக்கப்பட்டு சயன அறையின் வாயிற்படி யருகில் ஒரு உயர்ந்த பாயில் குந்தினோம். என்னை வணங்கிய பெண் நூறாண்டு என்னுடன் பழகியவள்போல் சரசம் செய்து வெகு மதுரமாய்ப் பேசிக் கொஞ்சி, விசிறியால் விசிறி, தாம்பூலத் தட்டை என்னருகே வைத்து, பாக்கை யெடுத்து என் கையில் தாலானாள். நான் அதற்கு முன்னரே தட்டிலிருந்த பாக்கை யெடுத்துப்

பெண்கள் படித்து என்ன செய்கிறது என்ற கேள்வியைக் கேட்போர் மல்லிகை புஷ்பம் மலர்ந்து என்ன செய்கிறது என்பதற்குப் பதில் சொல்லட்டும்.

போட்டுக்கொண்டு விட்டேன். தாம்பூலம் அவள் தருவதற்கு முன் நான் எடுத்துக்கொண்டேன். அதன் பின் தாயி வந்து குலுங்கிக்கொண்டு உட்கார்ந்தாள். இரவு பத்து மணி வரை என்னென்னவோ கதைகள் எல்லாம் பேசினோம். என் நண்பனைப்பற்றியும் அநேக சங்கதிகள் வந்தது. பிறகு புறப்படுவதற்கு எழுந்திருக்க, தாயி "இரவு இருந்து போங்கள், சாஸ்திரியார் போய் வரட்டும்" என்றாள். 'ஆம் அதுவே சரி' என்றார் சாஸ்திரி. அதற்கு நான் மறுத்து நாளை வருவதாய்க் கூறி எழுந்தேன். அந்த சமயம் ஒரு கடிதத்தை அவளிடம் தந்தேன். அதைக் கச்சணிந்த மார்பகத்திற்குள் சொருகிக் கொண்டாள். நானும் விடை பெற்றுப் புரோகிதருடன் திரும்பினேன். ஆகா! மிக்க உபசாரங்கள்! வெகு வெகு மரியாதைகள்!

***

நான் வந்தபிறகு அவள் என் கடிதத்தைப்பார்த்துத் திடுக்கிட்டாளாம்! அது ஒரு கரன்சி நோட்டாக இருக்குமென்று நம்பினாளாம். அல்லது ஒரு காதற் கடிதமாக இருக்குமென்று நினைத்தாளாம். அதில் பின் வருமாறு இருந்தது. "சகோதரியே! என்றைக்குமே நான் உன் ஸகோதரன். என்னைப் பேதமாக எண்ணவேண்டாம். என் நண்பன் மோகித்த கந்தர்வமாது எத்தகைய ரூபவதி, குணவதி என்று கண்டுசெல்லவே இங்கு நான்வந்தது. வேறு ஆபாஸ சிந்தனைகள் இல்லை. நீயும் கொள்ளாதே"—என்று இருக்கவே, இப்படியும் ஒருவன் உண்டா என்று திகைப்புற்றனாளாம்.

***

மறுநாட் காலையில் அத்தாசி வீட்டிற்குச் சென்றேன். நேற்று நடந்த மரியாதைகள் எதுவும் காணவில்லை. வாவென்பாருமில்லை. வரிசையிடுவாருமில்லை. வெகு நேரத்திற்குப் பிறகு தாசி உள்ளிருந்து வந்து என்னை வாருங்கள் என்று சொல்லிவிட்டு தன் வேலையாய்ச் சென்றுவிட்டாள். பிறகு மறுதினமும் சென்றேன். வெளியே நின்றிருந்த தாசி உள்ளே போங்கள் என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டாள். மூன்றுநாள் சென்ற போது உள்ளிருந்துகொண்டேதான் இல்லை யென்று சொல்லிவிட்டாள். நானும் விடாமல் சமயற்கட்டிற்குள் சென்று அவளிடம் பிரயாணம் சொல்லிக்கொண்டு திரும்புகையில் தாசியின் தாய் எதிர்பட்டு, "உங்கள் நண்பர் எப்போதும் என் மகளை வைத்து ஆதரிப்பதாய் எண்ணமா?—அல்லது இடையில் மற்றவரைப்போல் விட்டு விடுவதாக எண்ணமா?"—செலவுக்குப் பணம் அனுப்புவதே யில்லை. இப்படிச் செய்யலாமா என்று கேட்டாள். எல்லா சங்கதிகளும் அவருக்கு எழுதுகிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். நிகழ்ந்தவற்றை என் நண்பனுக்குத் தெரிவித்து குலமகளுக்கு நிகராக ஒரு பரத்தையைச் சொல்வது சரியல்லவென்றும் குறிப்பிட்டேன். எனக்காக உபசரிக்காவிட்டாலும் இன்னாருடைய நண்பன் என்றாவது உபசரிக்க வேண்டாமா? இதே நிலையில் உனக்கு ஒரு மனைவியிருந்து அங்கு நான் சென்றிருந்தால் எனக்கு எவ்வளவு கண்யமான மரியாதைகள் நடக்கும் என்றும் குறிப்பிட்டேன். என்னால் வரும்படி உண்டென்று எண்ணி முதல் நாள் அவ்வளவு உபசாரணைகள் நடந்தன. பிறகோ

தன் மனைவி தாய் வீட்டிற்குப் போயிருக்கையில், தனிமையில் எங்கும் கணவன் தன் பிரபஞ்ச ஆசைகள் யாவும் எவள் முகத்தில் பூத்துக் காய்க்கின்றன என்பதைத் தன் நெஞ்சைத் தட்டிக் கொஞ்சம் கேட்டுக்கொள்ளட்டும்.

நான் மயங்காத பக்கா ஆசாமி என்று அறியவே ஒதுங்கிவிட்டனர். உள்ள ஆஸ்தி யெல்லாம் கொடுத்துத் தெரிய வேண்டிய இந்தப் பெரிய அநுபவத்தை ஒருகாசு செலவுமின்றித் தெரிந்து கொண்டதாயும் எழுதினேன்.

***

இடையே நான்கு வருஷங்கள் சென்றன. என் நண்பன் கல்கத்தாவில் மூன்று வருஷம் இருந்துவிட்டு என் இல்லத்திற்கு வந்தான். வந்தவன் மறுபடியும் அத்தாசியைப்பார்க்க வேண்டுமென்றான். இதுவே கடைசி தடவை என்றான். அவனுடன் கூட நானும் தஞ்சாவூருக்குச் சென்று இரவு பதினொரு மணிக்கு அவள் இருந்த வேறொரு தெருவைக் கண்டு பிடித்துக் கதவைத் தட்டினோம். உள்ளே அவளுடன் உறங்கிய வக்கீல் குமாஸ்தா மிக்க கோபத்துடன், "இவன் யாரடி, எந்தத் தடியன் மடையன் கதவைத் தட்டுகிறது" என்றான். தாசி வெளியில் வந்து கதவைத் திறக்கவும் எனது நண்பனைக் கண்டு முகம் சுளித்துவிட்டு வாருங்கள் என்றாள். உள்ளே போனோம். நீங்கள் இருவரும் நன்றாகப் பேசிக்கொள்ளுங்கள் என்று நான் தூங்கிவிட்டேன். தாசி என் நண்பனுடன் கொஞ்சம் பேசிவிட்டு உள்ளுக்குச் சென்று வக்கீல் குமாஸ்தாவுடன் நித்திரை செய்தாள். நண்பன் என்னுடன் படுத்திருந்து காலையில் எழுந்து, போய் வருவதாகத் தாசியிடம் கூற, அவளும் 'சரி' என்றாள். அதன்பின் தூங்கு மூஞ்சியான என்னை எழுப்பிக்கொண்டு என் நண்பன் வெளியில் வந்து தான் மிகவும் அவமானப்பட்டுவிட்டதாகக் கூறி கொண்டான். தாசி ஆசை தீர்ந்ததா? இந்த நாயையா குல ஸ்திரீக்குச் சமமாகச் சொன்னாய்? என்று வினவினேன்.

***

இரண்டு வருஷங்கள் சென்றன. என் நண்பனுக்கு விவாகமாகி ஒரு வருஷம் ஆனது. விவாகத்திற்கு நானும் போய் வந்தேன். ஒருதரம் எனது நண்பனைக் காண்பதற்காக அவன் இருந்த விழுப்புரத்திற்குச் சென்றேன். வீட்டில் நண்பரது மனைவிமட்டும் இருந்தது. நண்பன் ஊர் சென்றிருப்பதாய் அறிந்ததும், சரி, நான் போய் வருகிறேன் என்றேன். நண்பர் இல்லாவிட்டாலென்ன இருந்து நாளைக்குப் போகலாமென்று நண்பரின் மனைவி கூற, அதற்கு இசைந்து வெளியில் சென்றுவிட்டு இரவு பத்து மணிக்கு வீட்டிற்கு வந்தேன். புசிப்பும் ஆனது. எனக்குத் தந்த படுக்கையை எடுத்து வந்து வெளித் திண்ணையில் போட்டுப் படுத்துக்கொண்டேன். ஒரு விளக்கும், நான்கு புஸ்தகங்களும், மை, எழுதுகோல், நெருப்புப் பெட்டி இவைகளும் கொண்டுவந்து வைக்க, இவைகள் எதற்காக அம்மா என்றேன். நீங்கள் இரவில் கண் விழித்து நெடுநேரம் எழுதுவீர்களாம், அதற்காக இவைகள் என்று அந்த அம்மணி கூற, நான் அதற்கு, இவற்றை எப்படிக் கேட்பதென்று நாணத்துடன் இருந்தேன். நீங்களே கொண்டுவந்து வைத்தது மகா உபகாரம் என்று உரைத்து நீங்கள் சயனித்துக்கொள்ளச் செல்லுங்கள் என்றேன். அந்த அம்மணியும் உட்சென்றாள்.

***

இப்போதைய இத்தனை தேச முயற்சிகளையும் பெண்மக்களே தொடங்கியிருப்பின், நமக்கு சுயாட்சிவந்து எத்தனையோ நாளாகியிருக்குமே. பெண்களின் துணையற்ற ஒண்டிக்கையான ஆண்ஸமூகம் ஒரு துரும்பைக்கூடத் தூக்க முடியாது. பெண்களின் தூண்டுகையிலே ஒரு தனி காந்த சக்தி உண்டு.

மறுநாட் காலையில் என்னை என் நண்பன் வந்து எழுப்பவே, ஆச்சரியத்துடன் 'எப்பொழுது வந்தாய்' என்றேன். இப்போது தான், உன்னைத் திண்ணையில் காணவும் மிக்க ஆநந்தமாயிற்று. உபசாரணைகள் சரியாகச் செய்தாளா என்ருன். அதற்கு நான் ஆகா! இதோ பார் விளக்கு, நெருப்புப் பெட்டி, பேனு, மைக்கூடு, புஸ்தகங்கள், எழுதக் கடிதாசி எவ்வளவு மரியாதைகள் நடந்திருக்கிறது பார்த்தாயா? இது குலமகளின் மரியாதை; அங்கே தஞ்சையில் நான் போய் அவமானப்பட்ட கதை விலை மகளின் மரியாதை—இப்போது இரண்டுக்குமுள்ள தாரதம்மியம் தெரிகிறதா என்றேன். நண்பன் புன்சிரிப்புடன் இன்னும் அந்தப் பழைய கதையை விடமாட்டாய் போலிருக்கிறதே என்ருன். அதற்குள் கதவைத் திறந்து கொண்டு என் நண்பரின் மனைவி வெளியில் வந்து எங்கள் இருவரையும் கண்டு எங்களுக்குள் நடந்த சம்பாஷணைகளைக் கேட்டுப் புன்னகை மிகுந்தாள். அதன் பின் நண்பனோடு ஒரு வாரம் இருந்து குலாவிவிட்டுப் புறப்படலானேன்" என்று தமது கதையைக் கொட்டினுர். இதற்குள் நெடுநேரமாய் விட்டதால் கடையையும் இத்துடன் முடிவு செய்துவிட்டோம்.

பொன்வண்டு செட்டியார்.

உல்லாஸ குணங்கள் ஜீவ வளர்ச்சிக்குப் பெரிய தாது. விசாரப்படுபவனை உல்லாஸ குணங்கள் விடுதலை செய்கின்றன. உல்லாஸம் விளைக்க மக்கள் முதற் கருவி; மனைவி பின் கருவி; மித்திரர்கள் துணைக் கருவி; அழகிய காட்சிகள் அதற்கடுத்த கருவி. கவலையால் மெலியும் தேகம் சீர்பட உல்லாஸ அவிழ்தம் அடிக்கடி தேவை. வீட்டுத் தலைவனை உல்லாஸப் படுத்தாது, ஐயோ! அவனை உயிருடன் கொல்லுகிறார்களே!

பிணியால் மெலியும் அறிவு.

இக்காலத்தில் படித்தவர்களின் அறிவெல்லாம் வறுமைப் பிணியின் வாய்ப்பட்டுப் பல கடன்களுக்கு உட்பட்டு அலறுவதனுல், உண்மையில் அது உறுதி, திடம் பெற்று ஓங்கவும், உல்லாசமாய்க் கலாசாகரத்தில் நீந்தி மகிழ்வுற்று உயரவும், நாட்டிற்கு உழைக்கும் ஆண்மை மிகுத்திடவும் கூடுமானதா யிருக்கவில்லை. பிறருக்கு உழைத்தால் அங்கு அது விர்த்தியாகிறது. அந்த உழைப்பைத் தன் சொந்தத்திற்கே கொண்டு பாடுபட்டால் சொந்த வேலையில் அந்த விர்த்தி ஏற்படுவதில்லை. இதுவும் ஒரு சோதனை! இதனுலும் அறிவு தனது திடம் குன்றி மெலிந்து சுருங்கி ஒடுங்கி உலர்ந்து வாடுகின்றது.



பகல்வேஷ தர்பார் !

நான் கல்கத்தாவுக்கல்லவா போயிருந்தேன். (ஆஹா ! அப்படியா ?) நேற்றையதினம் பட்டணம் மெயில் வண்டியிலிருந்து 'புல்' (full) சார்ஜ் கொடுத்து காலை 6-மணிக்கு இங்கு வந்துவிட்டேன். டில்லியில் கவர்னர்ஜென ரல் அவர்களுடைய கவுன்ஸிலுக்கு ஒரு காரியமாகப் போயிருந்தேன். அப்படி ஒன்றுமில்லை! நம்முடைய அப்பனுக்கும் துரைக்கும் இருந்த ஒரு விஸ்வாசத்தி னாலே நம்மைப் பார்க்கவேண்டுமென்று 'டெல்லகிராப்' (தந்தி) கொடுத்தார். அதுவுமல்லாமல் நமக்கு சில அப்பீல் கேஸ்களும் இருந்தன. எல்லாம் நாம் போனதினமே அனுகூலமாய்விட்டது. நம்மை லண்டனுக்கு ஒரு பிரயாணம் வந்துபோகும்படி இன்னொருதுரை ரொம்பதூரம் கட்டாயப்படுத்தினர். நமக்கு இங்கே முக்கியமான அலுவல்கள் இருக்கிறதென்று கேட்டுக்கொண்டு வந்துவிட்டேன். வருகிறமார்க்கம் பட்டணத்தில் சில சிநேகிதர்கள் தங்கிப் போகும்படி பலவந்தப்படுத்தினர்கள். அதில் ஒரு வாரமாய்விட்டது. அங்கே யும் அநேகருக்குக் கவர்னர் ஆபீஸில் சிபாரிசு வேலைசெய்துவந்தோம். திரு வாங்கூர் கொச்சி சமஸ்தானங்களில் தற்காலம் உயர்பதவியில் இருப்பவர்கள் எல்லாம் நம்மால் சிபார்சு செய்யப்பட்டவர்கள்தான். நமக்கிருக்கிறது ஆயிரம் அலுவல்கள் ! எங்கே தீருகிறது ? வருகிறவர்களுக்கெல்லாம் சிபார்சுசெய்யவே சரியாய் இருக்கிறது ! நம்ம லேவாதேவி விஷயத்தைப் பார்க்கப் பத்து குமாஸ் தாக்களும் அறுபது பியூன்களும் இருந்தும் வேலை யொழிகிறதில்லை. * *

தீர்ப்பு :—அன்பர்காள் ! இப்படிப் பேசும் ஆடம்பரதாரிகளின் வார்த் தைகளிலே மயங்கிவிடாதீர்கள். இவர்களின் வீட்டிலே அன்றைக்குக் கஞ்சிக் குக்கூட வழியிருக்காது.

*
* *

ஸம்சார மூட்டை :—

அவர் :—எது தனியே புறப்பட்டுவிட்டீர்கள் ! மூட்டை முடிச்சுகள் ஒன் றும் காணோமே !

இவர் :—ஸம்சாரமூட்டைதான் தலைமேலும் நெஞ்சினுள்ளும் பலமா யிருக்கிறதே ! இனி வேறுமூட்டை எதுக்கு ?

*
* *

பெரிய இடத்து சங்கதி :—

ராமன் :—பெரிய இடமென்று போனீர்களே, எவ்வளவு வாரிக்கொண்டு வந்தீர்கள் ?

எல்லாம் தெரிந்த புத்திசாலி என்போனே கொலைப்பாதகமும் மோசடி யும் கற்பழித்தலுமான சேற்றுப் பாதையில் காலை வைத்துவிடுகிறான். அவ் வளவுக்குத் துணிய புத்தி யுக்திகளின் தைரியம் வெறும் மூடர்களுக்கு இல்லை.

வித்வான் :—எங்கும் மோட்டார்கள் நின்றுகொண்டிருக்கவும், சில மோட்டார்கள் வரவும், சில போகவும் இதையே கண்காட்சியாகக் கண்டேன். ஸன்மானக் காட்சி காணப் பாக்கியம் செய்யவில்லை. "தமிழ் வித்வானு"—என்று பிரபு இறுதி இறுதி என்று பல்லிளித்தார். விழுந்துவிட்டதுபோக எத்தனைப் பற்கள் அவருக்கு இருக்கிறதென்று எண்ணிக்கொண்டு வெறுமனே திரும்பினேன்.

***

முகத்தில் எழுதியிருக்கிறது :—

பிரயாணி:—எல்லோரும்போல்தான் நானும் சட்டை போட்டுக்கொண்டிருக்கிறேன். இத்தனை பெயரிருக்க என்னிடம் மட்டும் டிக்கெட் இல்லையென்று எப்படித்தெரிந்து கேட்டீர்கள்?

டிககேட் பரிசோதகர்:—உன் முகமும், கண்களும் நீ டிக்கெட் இல்லாத பேர்வழி யென்பதை எழுதிக்காட்டிவிட்டதையா.

T. S. குழந்தைவேல் முதலியார்.

சிந்தையின் திறம்.

எவனெவன் எந்தெந்த சிந்தையில் தன் மனத்தைப் பதியவைத்துக்கொண்டுள்ளானோ அதற்கேற்பவே அவன் செயலும் வார்த்தைகளும் புத்திப்போக்கும் இருக்கும். அவன் பேசுவதும், அவனுடன் பிறர் பேசுவதும் அதைத் தழுவியேதான். கல்விமானுடன் வித்யா ஸம்பாஷணை. தாசிலோலனுடன் அதற்கேற்ற சம்பாஷணை. நகைகள் செய்வோனுடன் அதைத் தழுவிய வார்த்தைகள். காய்கறி விற்பவளுடன் அதற்குத் தகுந்த பேச்சுகள். பத்திராதிபரோடு பத்திரிகை ஸம்பந்தமான வார்த்தைகள். மாப்பிள்ளையோடும் மணப்பெண்ணோடும் அதற்குத்தகுந்த பேச்சுகள்!

கோயிலுள்ள ஊரில் குடியிருந்தால் கோயில் சாக்கை வைத்து வருபவர்களுக்கெல்லாம் வீட்டில் உப்புமா காப்பி கொடுக்கவேண்டி வருமாம். இன்னும் குந்திக்கொண்டால் சாப்பாடு சப்ளை ஆகவேண்டுமாம். மூக்குப்பொடி கூட வாங்கித்தரவேணுமாம். கோயில் இல்லா ஊரில் இக்கஷ்டம் இல்லையாம்.

பெண் வீட்டில் இருக்கும்போது வீடு நிறைந்து நிற்கிறது. பெண் இல்லாத காலையிலோ ஆட்டம் முடிந்து கூட்டம் கலைந்து காலியாய்விட்ட நாடக மேடைபோன்றும் வீரிச்சென்று வீடு நம் கண்முன்பு காண்கிறது.

ரோம் தேசத்து ராஜரிஷி.

—அவரது உபதேச வாக்கியங்கள்—

(458-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவரது தியானங்கள் அடங்கிய புஸ்தகத்தைப்பற்றிச் சிறிது உரைப்போம். இந்தப் புஸ்தகத்தை அவர் நாடோறும் தமது அரசாட்சியின் ஆயாசம் தீரும்பொருட்டு எழுதிவந்தார். நாடகங்கள், யுத்தங்கள், சோம்பல் முதலிய இவைகள் நன்னடக்கைகளுக்கு சாதனமான தத்துவங்களை உள் மனதிலிருந்து அழித்துவிடும் என்று நினைத்து தமது மனதிற்பட்ட தத்துவங்களைப் பிரதிதினமும் வரைந்துவருவதானார். அது ஒரு அரிய நூலாகும். அதனின்றும் சிலவற்றை —இங்கு தருகிறோம்.

1. தன் ஆத்மாவினிடத்தில் எவன் ஸந்தோஷப்படுகிறானோ அவனுக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை.

2. மரணமும், ஆயுளும், கீர்த்தியும், அபகீர்த்தியும், சுகமும், துக்கமும் நல்லோருக்கும் நேரிடும். அவர் போலக் கெட்டவர்களுக்கும் நேரிடும். அவை ஒருவனை நல்லவனாயாவது கெட்டவனாயாவது செய்யா. ஆகையால் இவை நல்லவையுமல்ல, கெட்டவையுமல்ல. சுகத்தையும், துக்கத்தையும், லாப நஷ்டத்தையும், ஜயா ஜயத்தையும் ஒன்றாய் நினைத்து யுத்தம் செய்.

3. உலகவாழ்க்கையெல்லாம் புகைக்குச் சமானம். கோவிலில் கடவுள் ஸந்நிதியில் வைத்திருக்கும் சாம்பிராணியில் சில பொடிகள் முந்தி விழும். சில பிந்தி அக்கினியில் விழும். முன்னோ பின்னோ இதைவிட வித்தியாசம் ஒன்றும் அறியோம். இன்றைக்கு உன்னைப் புகழுவோர் நாளைக்கு நிந்திப்பர்.

4. இறந்தபிறகு கீர்த்தியென்பது வீண் வார்த்தை. எத்தனை அயோக்கியர்களின் பேர் நிலை நிற்கிறது?—நல்லோர் பெயர் எத்தனையோ மறந்துவிடவில்லையா? நீ எல்லோரையும் மறந்துவிடுவாய். உன்னையும் எல்லோரும் மறந்துவிடுவார்கள். ஆகையால் பழுத்த கிச்சிலி தன்னைப்பெற்ற மரத்தை வந்தனம்செய்து தன்னைவளர்த்த பிரகிருதியை வாழ்த்தி மரத்திலிருந்து விழுவதுபோல உன் சிறிது காலத்தைத் திருப்தியோடும் கழிக்கவேண்டும்.

5. எனக்கு ஒரு கவலைமாத்திரம் உண்டு. அனுசிதமான காரியம் செய்துவிடுவேனோ என்பதேயாம். ஆட்டக்காரர் வேஷத்தைக் கலைத்துவிடு என்றால் கலைத்துவிடக் கடவோம். ஆடும்படி கட்டளையிட்டால் ஆடுவோம். ஆட்டக்காரர் நம்மை ஆட்டிவைப்பதிலும் கலைப்பதிலும் நமக்கு அந்த விசாரம் வேண்டாம். ஆட்டிவைப்பவர் இறைவன்.

6. துக்கமும் துரதிர்ஷ்டமும், குரூபமும் கடவுளால் ஏற்பட்டவை

பெண்ணினம் இன்றி ஆண் இனம் வாழமுடியாது. வாழவும் தெரியாது. வாழ்ந்ததும் இல்லை. வாழ்வு யாவும் பெண்ணால்தான். இது உண்மை.

யல்ல. கடவுளுக்கு ஆதீனமில்லாத மற்றக் காரணங்களால் ஏற்படுகின்றன. உலகத்திலே அவைகள் முற்றும் உபயோகமற்றவைகளல்ல. அனுபவிப்போர்களின் மனோ தைரியத்தையும், பொறுமையையும் அநுஸரித்து, படும் துயரமானது கொடுமையாகவும் இலகுவாகவும் இருக்கும். துயரத்தின் சுரூபமே மாறி சுகமாகவும் விளங்கலாம்.

7. உலகத்தில் தாழ்ந்த வஸ்துக்களை உயர்ந்த வஸ்துக்களின் மேன்மையின்பொருட்டு சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு மேலானவைகள்கூட ஒன்றுக்கொன்று பொருந்தும்படி இணைக்கப்பட்டிருக்கின்றன.

8. ஒன்றும் ஆத்மாவைத் தொடாது. சுகதுக்கம் முதலிய விகாரங்கள் மனதில் உதிக்கும் அபிப்பிராயத்தால் உண்டாகின்றன. ஜகத் யாவும் நிமிஷத்துக்கு ஒருதரம் மாறுகின்றது. நம்முடைய நினைப்பே நமது இருப்பும் பிழைப்புமாம்.

9. பித்தமுள்ளவனுக்குத் தேனும் கசக்கும். வெறிபிடித்த நாய் கடித்தால், கடிபட்டவனுக்கு ஜலத்தைக் கண்டால் பயம். துரபிப்பிராயம் கொண்டவனுக்கு பித்தத்தையும் நாய்க்கடியையும் போல எதுவும் மார்பைப் பிளக்குந்தான்.

10. ஆயாஸகரமாயும் அனுசிதமாயும் இருக்கும் அபிப்பிராயத்தை மனத்தைவிட்டு ஒழித்து ஸ்வஸ்தமாயிருப்பது எவ்வளவு சுலபமான காரியம்?

11. மரகதத்தையும், தங்கத்தையும், தந்தத்தையும், பட்டையும், வீணையையும், சிறு கத்தியையும், புஷ்பத்தையும், செடியையும் ஒருவர் புகழாவிட்டாலும் அதன் மகிமை சிறிதேனும் குன்றுமா?

12. ஓ பிரபஞ்சமே! உனக்கு எது ஒவ்வியிருக்கிறதோ அது எனக்கும் அனுகூலம்தான். உனக்கு சகாயமானால் எனக்கும் சகாயம்தான். ஓ பிரகிருதியே! எல்லாம் உன்னிடத்தில் உண்டாகி, உன்னிடத்திலிருந்து, உன்னிடத்திலேயே சேருகின்றன. பிரபஞ்சமெல்லாம் கடவுளின் நகரமன்றோ?

நோக நோகப் பேசுபவர்.

நோக நோகச் செய்வோன் நோவும் நோயில் நொடியில் நொக்கிப் போவான். நொந்து பட்டவரின் நோவு அவனை வெந்திட வைக்கும். நோகின்றவர்களின் நெஞ்சு வேகுந்தன்மைக்கேற்ப நோக வைத்தவனின் இன்பங்களும் கொஞ்சங் கொஞ்சமாகத் தொடர்ந்து சாகும். எவரையும் நோகாத நோன்பு நோற்பவர் ஒருவர் உளரேல் அவர் பொருட்டே எல்லார்க்கும் பெய்யும் மழையென்போம்.

ஒருவனை நீ இழிவுபடுத்தவும் கேவலமாகப் பேசவும் எந்த வழியும் கிடைக்கும். ஆனால் அதை நீ பின்பற்றிச் சென்று மூர்க்கனாகாதே.



பெரியாரின் மொழிகள்



(494-ம் பக்கத் தொடர்ச்சி.)

335. Howe'er it be, it seems to me, Tis only noble to be good.
TENNYSON.

எது எந்தமாதிரியா யிருந்தாலும் நன்ருயிருப்பதுதான் பெருந்தன்மை யானது என்று எனக்குத் தோன்றுகிறது. டென்னிஸன்.

336. Happy the man who early leaves the wide chasm that lies between his wishes and his powers. GOCTHE.

எவனொருவன் தன் ஆசைக்கும் சக்திக்கும் மத்தியிலுள்ள அகாதமான அகன்ற ஆழத்தை சீக்கிரம் கடக்கிருனே அவன்தான் சந்தோஷமானவன். கத்தே.

337. Go forth to meet the shadowy Future without fear, And with a manly heart.
LONGFELLOW.

துக்ககரமான வருங்காலத்தைப் பயமின்றி ஆண்மைத்தனத்தோடும் எதிர்க்கப் போ. லாங்பெல்லோ.

338. Came the Spring with all its sigendour, All its birds and all its blossoms. All its flowers and leaves and grasses.
LONGFELLOW.

வசந்தகாலம் அதனுடைய முழு மேன்மையோடும், எல்லாப் பறவைகளோடும், புஷ்பங்களோடும், இலைகளோடும், புற்களோடும் வந்தது.
லாங்பெல்லோ

339. Go forth under the open sky, And list to nature's teachings. BRYANT,

துறந்த வெளியில் போ, இயற்கையின் கற்பனைகளுக்குச் செவிகொடு.
ப்ராயண்ட்.

340. Men must work, and women must weep, Though storms be sudden and waters deep, And the harbour bar be moaning, CHAR, KINGSLEY.

புயற்காற்றுகள் எவ்வளவு திடீரென்று வருவதாயிருப்பினும், சமுத்திரங்கள் எவ்வளவு ஆழமாயிருப்பினும், துறைமுகம் வருத்தத்துடன் சப்தித்துக் கொண்டிருப்பினும் மனிதர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டும். சார்லஸ் கிங்ஸ்லி.

341. When the bare and wintry woods we see, What then so cheerful as the holly tree.
ROBERT SOUTHEY.

மாரிகாலத்தில் ஒன்றும் இல்லாமல் மொட்டையான மரங்களை நாம் பார்க்கும்போது எப்போதும் பசுமையான சிந்தூர மரத்தைப்போல் சந்தோஷமுள்ளது எது? ராபர்ட் ஸதே.

342. A fault which humbles a man is of more use to him than a good action which puffs him up with pride,
THOMAS WILSON.

ஒரு மனிதனைத் தாழ்த்துகிற ஒரு குற்றமானது, அவனைக் கர்விஷ்டனாகச் செய்கிற ஒரு நல்ல காரியத்தை விட அவனுக்கு அதிக உபயோகமானது. தாமஸ் வில்ஸன்.


P. E. பாஷ்யம் நாயுடு.

சாஸ்திர நுட்பங்கள்.

(495-ம் பக்கத் தொடர்ச்சி.)

131. விறகைச் சூளையாக அடுக்கிக் காற்றுப் புகாதபடி மண்ணால் மூடி எரித்து, இப்படியே அதுமுழுதும் எரிந்து போகாதபடி தடுப்பதால் பெரும் பாலும் செய்கரி உண்டுபண்ணுவார்கள். 10-ம் படத்தில் செய்கரிச் சூளை யும் அதைச்செய்யும் மாதிரியும் விளங்கும். சூளை முப்பது அடி அல்லது அதற்குமேற்பட்ட அகல முள்ளதானால் அது ஒரு மாதத் துக்குள்ளே எரிந்து முடியாது. அது எவ்வளவு பதமையாய் எரி கிறதோ அவ்வளவு அதிகமாய்க் கரி உண்டாகும். விறகு நன் றாய்க் கருகியிருக்க காற்றுப்புகா தபடி முழுதும் தடுக்கப்படும்.

10



இத்தோடு தகனம் ஒழியும். எரிந்த கரி விறகின் மாதிரியாகவே இருக்கும். ஆகிலும் சிறுத்துப்போம். கரியின் மொத்தம் பெரும்பாலும் விறகின் முக்கால் வாசிக்கு அதிகப்படாது. அதின் நிறை விறகின் நிறைக்குக் கால் வாசிக்கு மேற் படாது. வெடிமருந்துக்கு வழங்குகிறது போன்ற உத்தமமான கரி விறகை இரும்புக்குழாய்க்குள்ளே போட்டு அடைத்துக் கருக்குவதால் செய்யப்படும்.

132. அடுக்களை முதலிய இடங்களில் காணும் ஒட்டடை விறகை எரிக்கும்பொழுது அதிலிருந்து பிறக்கும் வாயுவிலே உள்ள எரியாமற்போன பகுதியாகும். இது மாவான கரி. தார், குங்கிலியம் இவை போன்றவைகளை எரிக்கும்பொழுது உண்டாகும் ஒட்டடையே விளக்குக் கரி எனப்படும். இதை அச்சடிக்கிற மைக்கும், பூச்சு மைக்கும் அதிகமாய் வழங்குவார்கள்.

133. எலும்பு, யானைத்தந்த சீவல்கள் முதலிய பிராணி பதார்த்தங் களைக் கருக்குவதால் உண்டாகும் கரி எணக்கரி எனப்படும்.

134. கரி என்பது கறுப்பான, நொறுங்கத்தக்க, கரையாத, மணம் ருசியற்ற பதார்த்தமேயாம். சூடேறாதிருக்கில் கரி எக்காலத்துக்கும் மாறாது. ஏறக்குறைய ஈராயிரம் வருஷங்களுக்குமுன்னே ஏர்குலானம் என்ற பட்டி னத்திலே கருக்கப்பட்ட கோதுமை மணிகள் வடிவங்கெடாமல் இருந்தன. நிலத்திலே கிண்டி நடுகிற மரத்தூண்களின் அடியைக் கருக்கினால் அவை வெகுநாளைக்கு உக்காமலிருக்கும். இதற்காகவே தண்ணீர்விட்டு வைக்கிற மரத்தொட்டி பீப்பா முதலியவற்றின் உட்பக்கத்தைக் கருக்குவதும் வழக்கம்.


"காலத்தை அநுஸரித்துச் சாந்தப்படு" என்கிறார் மூன்றாவது மனிதர்.— "அதற்காக மானங்கெடப் பேசுவதையும், நடத்துவதையும், சகித்துப்பொறுத் துக்கொள்ள வேண்டுமோ?—எதுவரையில்தான் பொறுக்கிறது?—அந்த நாற் றச்சோறு வேண்டாம்—அவனிடம் வேலையும் வேண்டாம்"—என்கிறான் இவன்.

135. புதுக்கச் சுட்ட கரி சில வாயுக்களையும் நீராவிகளையும் அதிக அளவாக உறிஞ்சி தன்னிலுள்ள கண்ணறைகளில் அடக்கிவைக்கும் தன்மையுடையது.

136. மாவாக்கின கரி நாற்றமான வாயுக்களையும், மிகுதியான பிராணி தாவர பதார்த்தங்களினது நிறப்பகுதிகளையும் உறிஞ்சும். இறைச்சி அழுகும் பொழுது கரித்தூளால் மூடினால் அதின் நாற்றமெல்லாம் கெடும். அது இன்னும் அழுகிக்கொண்டேயிருந்தாலும் நாற்றம் வீசாது.

137. அழுகல் தண்ணீரைக் கரித்தூளுக்கூடாக வடித்தால் மணங்கெட்டு அது சுத்தமாகும். சீனியைச் சுத்தமாக்குகிறவர்கள் கருஞ்சீனியைக் கரைத்து எணக்கரிக்கூடே செல்லவிட்டு வடித்து அதை வெள்ளையாக்குவார்கள். ஏல் போட்டர் என்ற வெறி பானங்கள் இப்படி வடிப்பதால் நிறமற்றுப் போவது மாத்திரமல்ல, அவைகளின் கசப்பும் கெடும். அலின், மாலியம், ஸ்திரிக்னி முதலிய தாவர நஞ்சுகளை உட்கொண்டவர்களுக்குக் கரியை மாவாக்கித் தண்ணீரில் போட்டுக் குடிக்கக் கொடுப்பதே உத்தமமானமாற்று. கரியானது நஞ்சை உறிஞ்சி அதின் வீற்றைக் கெடுக்கும். போட்டர், வைன், மைகலந்த தண்ணீர் இவைகளை 11-ம் படத்தில் காண்கிற வண்ணமாய் கரியடங்கியுள்ள பாத்திரத்துக்குள் விட்டு வடிப்பதால் கரியானது நிறத்தைக் கெடுப்பதைக் காட்டலாம். இப்படி வடித்த நீரின் மணம், உருசி, நிறம் அற்றுப்போம்.

11



138. இப்படி கரியைப்போட்டு வடிப்பதால் கரியின் நாற்றமும் உறிஞ்சும் தன்மையும் அற்றுப்போம். ஆயினும் மறுபடியும் அந்தக் கரியைச் சுட்டுவிட்டால், அதற்குப் புதுக் கரியின் குணங்கள் எல்லாம் உண்டாகிவிடும்.

139. நச்சு வாயுக்களையும், நாற்றங்களையும் சுவாசியாமல் தடுப்பதற்காக கரிக்குரிய இத்தன்மையைப் பிடித்து சுவசனி (Respirator) என்ற ஓர் கருவியைச் செய்திருக்கிறார்கள். அது நுண்ணிய கம்பி நெசவால் குடைவாகச் செய்து கரிப்பொடியால் நிரப்பி மூக்கையும் வாயையும் மூடி நிற்கத்தக்கதாய் 12-ம் படத்திற் காண்பதுபோல் முகத்தில் கட்டப்படும். சுவாசிக்கும் காற்றெல்லாம் இதற்கூடே செல்ல, அதிலுள்ள நச்சு வாயுவெல்லாம் நீங்கும். நாற்றம் வீசும் நோயறை, பிரேத சோதனை, கப்பலின் கீழறை, சாக்கடை முதலிய இடங்களில் புழங்குகிறவர்களுக்கு இது மெத்த நயமான கருவியாகும். (தொடரும்.)



12

உடம்புக்கு வியாதிவந்தால் வேலைக்குப்போய்க் கஷ்டப்படாமல் வீட்டிலேயே படுத்துக்கொண்டிருக்கலாமென்று நினைத்தது ஒருகாலம். வியாதி வந்து படுத்துக்கொண்டால் குடும்பம் தவித்துப்போமேயென்று எண்ணுவது ஒருகாலம்.

சென்றுபோன நாட்கள்

ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதி.

(461-ம் பக்கத் தொடர்ச்சி.)

"கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற வாக்கியம் பாரதியாருக்குப் பொருந்தும். புதுச்சேரிக்குப் பாரதியார் வெறுமனே வந்துவிடவில்லை. "இந்தியா" பத்திரிகையின் விலாஸங்கள் கணக்கு புஸ்தகங்கள் யாவற்றுடனும் வந்து குதித்தார். புதுச்சேரியிலும் தமிழன்பர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். சென்னையில் பயந்து நின்ற ஒரு தன்மை புதுச்சேரியில் அவரை விட்டு நீங்கிவிட்டதுபோலுங் காண்கின்றது. "இந்தியா" பத்திரிகையைப் புதுச்சேரியிலிருந்தும் தொடங்கி விட்டார். அங்கும் தமது பெயரை ஆசிரியராகக் காண்பித்துக் கொள்ளவில்லை. சென்னையில் ஸ்ரீநிவாசன் என்பவரைத் தெரிந்தெடுத்ததுபோல் புதுச்சேரியிலும் ஒருவரைத் தெரிந்தெடுத்து அமைத்துவிட்டார். "இந்தியா" பத்திரிகை சென்னையில் நடை பெற்றதைவிட இன்னும் 'கார' மாகவும், வியாபகமாகவும் நடைபெறலானது. இந்த சமயம் பாரதியார் "**விஜயா**" என்று ஒரு தினசரித் தமிழ்ப் பத்திரிகையையும் தொடங்கிவிட்டார். அதுவும் பிரபலப் பட்டுவிட்டது. காலந் தவறாமல் வெளிவந்தவாறு இருந்தது. "விஜயா"வில் பிரதி தடவையும் சித்திரப்படங்கள் பதிப்பிக்கப்படலாயின. அந்தப் படங்களையும், அதிலுள்ள வியாசங்கள் பெரும்பான்மையையும் அப்படியே எடுத்து "இந்தியா" பத்திரிகையில் வெளியிட்டு, "இந்தியா" வின் உருவையும் இரட்டிப்பாக்கிவிட்டார். சென்னை "இந்தியா" பத்திரிகையில் ஒரு தடவைக்கு ஒரு படமாய் வரப்போக, புதுச்சேரி "இந்தியா" விலோ பக்கங்கள் முற்றிலும் படங்களாகவே நிகழ்ந்தன. வாசக நடையும் உக்கிரகமானது. பாரதியாரின் "பால பாரதம்" என்ற ஆங்கில வாரப் பத்திரிகையும் புதுச்சேரியில் நடைபெற்று வந்தது. இத்துடன் "**கர்ம யோகி**" என்ற மாதப் பத்திரிகை யொன்றும் தாமே ஆசிரியர் என்று புலப்படுத்திக் கொண்டு புது முறையில் வெளியிடத் தொடங்கினர்.

***

சென்னையி லிருந்தகாலை பாரதியார் "வந்தே மாதரம்" என்ற கீதத்துக்குத் தமிழ் மொழிபெயர்ப்பாக "**இனிய நீர் பெருக்கினை, இன்கனி வளத்தினை**" என்று தமிழ் மொழிபெயர்ப்பை "இந்தியா" பத்திரிகையில் வெளியிட்டு, அதை "ஸ்வதேச கீதங்கள்" என்ற நூலிலும் சேர்த்தார். புதுச்சேரியில் "கர்ம யோகி"ப் பத்திரிகையைத் தொடங்கியதும், அதன் முதல் ஸஞ்சிகையில், முந்திய மொழிபெயர்ப்பு அத்தனை தெளிவும் சுலபமுமா யில்லையென்று "**நளீர்மணி**

---

(1) பல கறிவகைகளுடன் தடபுடல் செய்வது விருந்தினருக்கு——அல்லது வேற்று மனிதர்கட்கு. (2) உள்ளதை உதவாத காயுடன் உப்பைத் தொட்டுக்கொண்டு விழுங்குவது தனக்கு.

நீரும், நயம்படு கனிகளும், குளிர் பூந் தென்றலும்" என்று வேறொரு மொழி பெயர்ப்பினை இன்னும் சுவையமுதம் பெருகுமாறு வெளியிட்டார். இப் பாடலையும் வேறு சில கீதங்களையும் சேர்த்து "ஸ்வதேச கீதங்க"ளின் இரண்டாம் பாகமாக "ஜன்ம பூமி" என்ற பெயரால் வெளியிட்டார். அதன் பின்னர், இன்னும் அநேக புதிய பாடல்களுடன் "மாதா வாசகம்" என்று மற்றொரு நூலையும் வெளியிட்டார். இது தென்னாப்பிரிக்காவில் அச்சிடப்பட்டதாக ஞாபகம். ஆக மூன்று கீத நூல்கள் பிரகடனமாயின. அதன் பின்னர், "பாஞ்சாலி சபதம்" என்ற அரிய நூலினை முதற் பாகமாக வெளியிட்டார். அதிலுள்ள ரஸத்தை என்னென்று புகழ்வோம்! அதற்கு அதுவே நிகர். அதன் இரண்டாம் பாகம் பாரதியாரின் நாளில் வெளி வரவில்லை. பின் பாலகர்களுக்கென **முரசு, பாப்பா பாட்டு** என்று சிறு நூல்களைக் காலணு விலையில் வெளியிட்டார். அவை இரண்டும் இரு தங்க விக்கிரகங்கள் தான். அதற்கு அடுத்ததாகக் "கண்ணன்பாட்டு" என்ற அரிய பிரபந்தத்தை தமிழகத்திற்கு உதவினர். அதன் அற்புதத்தைப் பேச நமக்கு சக்தியில்லை. இத்துடன் "இந்தியா" பத்திரிகையில் அடிக்கடி புதிய பாடல்களின் அமுதம் வெளி வந்தவாறு இருந்தன. பாரதியாருக்கு இப்பொழுது சென்னையில் இருந்த செல்வாக்குப் புதுச்சேரியிலும் இன்னும் பிரபலமாகிவிட்டதென்றே சொல்லவேண்டும். இத்துடன் புதுச்சேரியில் "சூரியோதயம்" என்ற வாரப் பத்திரிகையும் புதுவிதமான அமைப்பில், ஆனல் மகா காரமாக வெளிவரத் தலைப்பட்டது. அதிலும் பாரதியார் ஆசிரியராகச் சம்பந்தப்பட்டிருந்தாரென்று தெரிகிறது. "இந்தியா" பத்திரிகையை வாரம் இருமுறை யாக்கவும் தீவிரமான ஏற்பாடுகள் நடந்து வந்தன.

***

இதுவரையில்தான் பாரதியாருக்குப் புதுச்சேரியில் சுக்கிர திசை! சென்னை யரசாங்கத்தார் "இந்தியா" பத்திரிகையையும் "சூரியோதயம்" என்ற பத்திரிகையையும் சக்கரவர்த்தியாரின் பெயரால் பறிமுதல் செய்துவிட்டதாக அரசாங்க கெஜட்டில் வெளியிட்டு விட்டனர். புதுச்சேரி பிரெஞ்சு இலாக்காவாயினும், அங்குள்ள தபாலாபீஸ் பிரிட்டிஷ் இலாக்காவுடன் சம்பந்தித்தே இருந்தது. "இந்தியா", "விஜயா", "சூரியோதயம்" பத்திரிகைகளைத் தபாலாபீஸில் கொண்டுபோய்க் கொட்டியதும், அவற்றை ஒருமிக்கக் கட்டி சென்னைத் துரைத்தனத்தாருக்கு அனுப்பிவிடப்பட்டதாகத் தெரிகிறது. பத்திரிகையின் சந்தாதாரருக்குக் கொடுபடவில்லை. இதைப் பிறகு பாரதியார் அறிந்து திகைத்தார். இந்தியா, சூரியோதயம், விஜயா இம்மூன்றும் திடீரென்று நின்றுபோக நேர்ந்துவிட்டன. தபால் மூலமாக அனுப்ப ஹேதுவில்லை. பாரதியாரின் பத்திரிகா முயற்சிகள் யாவும் அடியுடன் நின்று போயின. பத்திரிகைகளின் வருமானத்தால் ஜீவித்த பாரதியாரை வறுமை நோய் பிடித்தாட்டத் தொடங்கிற்று. பத்திரிகைகள் நின்றுபோனதுடன் புதுச்சேரியின் ஆரவார வாழ்க்கையும் பூர்த்தி பெற்றது.

(தொடரும்)

கெட்டவழியில் வெகு நுட்பமாக யோசித்துத் தந்திரம் கண்டுபிடிக்கும் கூரிய மூளை நூலாசிரியருக்கு மட்டும் நல்ல வழியிற் சென்று லோகோபகாரமான ஒரு அழகிய துப்பறியும் நாவலை எழுதவைக்கிறது.



1. உலகத்திலுள்ள எல்லா அணைகளிலும் மிகப் பெரியது எகிப்து தேசத்தில் அஸ்லிவான் என்னும் இடத்தில் இருக்கும் அணைதானாம். இருபதுகோடி பவுன் செலவழித்து ஒன்றரைமைல் நீளமுள்ள ஒரு பெரிய சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. இச் சுவரினால் இருநூறு சதுரமைல் விஸ்தீரணமுள்ளதாயும் பத்து கோடி லக்ஷம் கன அடி ஜலமும் உள்ள ஒரு பெரிய ஏரி உண்டாயிற்று. இந்த ஏரியிலிருந்து எகிப்து தேசத்திலுள்ள பாலைவனத்துக்கு ஸமானமாயுள்ளபூமியெல்லாம் ஒரே நஞ்சை நிலங்களாக மாறிற்றாம்.

2. அமெரிக்காவில் நியயார்க் பட்டணத்தில் பாம்புகள் விற்பனை செய்வதற்கென்றே ஒரு கடைவீதியுளதாம். அவ்விடத்தில் ஏழு அடியிலிருந்து எழுபத்தைந்து அடி நீளம்வரையிலுள்ள பாம்புகளை அடிக்கு இவ்வளவு விலையென்று நாம் கடையில் கயிறு வாங்குவதுமாதிரி வாங்கலாமாம். ஒவ்வொரு வருஷமும் பாம்புகளைப்பிடிப்பதற்காகவே ஆபிரிகா கண்டத்திற்கும், இந்தியாவிற்கும், ஸுமாத்ரா தீவிற்கும் தென் அமெரிக்காவிற்கும் வர்த்தகர்கள் செல்வார்களாம். வஸந்த காலத்தில் சாதாரணமாய் நாலாயிரம் பாம்புகள்வரையில் அக்கடைத்தெருவில் வாங்கமுடியுமாம். அவைகளை முக்கியமாய் சுற்றுப்பிரயாணம் செய்யும் ஸர்கஸ்கள்தான் வாங்குமாம். பைதன், போவா என்னும் மலைப்பாம்புகள் அறுநூறு ரூபாய் முதல் இரண்டாயிரம் ரூபாய் வரையில் விலை போனாலும் அவைகளை வளர்க்கிறதினால் அதிக செலவு கிடையாதாம். ஏனென்றால் இப்பெரிய பாம்புகள் இரண்டு வருஷங்களுக்கு ஒருதரம்தான் ஆகாரம் புசிக்குமாம்.

3. தேனீக்கள் பறக்கும்பொழுது அவைகளின் இறக்கைகள் ஒரு விநாடிக்கு நூற்றுத்தொண்ணூறு தடவை விகிதம் காற்றில் அடித்தாடுகின்றனவாம்.

4. பிரான்ஸ் தேசத்தில் பாரீஸ் நகரத்தில் ஸெயின் நதியில் லாக்ரெநவுலர் என்ற ஒரு சிறிய தீவு உளது. அங்கு வருஷா வருஷம் காதலர்கள் சந்தை ஒன்று கூடுமாம். கல்யாணமாகாத யௌவன ஸ்திரீ புருஷர்கள் அவ்விடம்சென்று அவர்கள் ஸௌகரியத்திற்காக ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற பந்தயங்கள் ஆடல் பாடல்கள் முதலியவைகளை அனுபவித்து ஒவ்வொருவருக்கும் ஸ்நேகம் உண்டாகி அதன்பலனாக பிறகு கல்யாணம் செய்துகொள்வார்களாம். வருஷா வருஷம் ஆயிரக்கணக்காய் கூட்டம் கூடுமாம்.

5. மானிடர்களில் பெரும்பான்மையோர் மாரிகாலத்தைவிட கோடைகாலத்தில்தான் கனம் ஜாஸ்தியாய் இருப்பார்களாம்.

6. சில புஷ்பங்களை தேச அடையாளங்களாக உபயோகப்படுத்திவருகிறார்கள். பிரான்ஸ் தேசத்திற்கு அல்

படித்தவர்கள் என்போரிற் சிலர் அவர்களின் படிப்பிலும் பத்து பங்கு காமப் படிப்பில் தேறிய பித்தர்களா யிருக்கிறார்கள். இவர்களாற் கேடுண்டோரும், கற்புகெட்டு நடுவீதியில் நின்றோரும் அநந்தம்.

விபுஷ்பமும, க்ரீஸ்தேசத்தில் நீலோத்பலமும், ஜர்லாந்தில் ஷாம்ராக் என்னும் புஷ்பமும், இங்கிலாந்தில் ரோஜாவும், எகிப்து தேசத்தில் பொற்றாமரையும், ஸ்காட்லாண்டிற்கு நெருஞ்சிலும், இந்தியாவிற்கு மல்லிகையும், ஸ்பெயின் தேசத்திற்கு மாதுளை புஷ்பமும் தேச புஷ்பங்களாம்.

7. சீனா தேசத்தில் அரிசியிலிருந்து சிவப்பு, மஞ்சள், வெள்ளை முதலிய வர்ணங்களையுடைய அநேக வகை சாராயங்கள் இறக்கப்படுகின்றனவாம். இவைகளில் அதி சிலாக்கியமானது "மண்டாரின்" என்னும் சாராயமாம். அது உடம்பிற்கு அதிக புஷ்டியைக் கொடுக்கிறதோடுகூட விலையும் மிக ஜாஸ்தியாம்.

8. பிஜீ தீவில் நரமாம்ஸ பக்ஷணம்செய்யும் ஒரு காட்டுஜாதிக்கு ஸதா ஆகாரத்தைப்பற்றியே சிந்தனையாம். அவர்களின் குலதெய்வமாகிய "மடவாலு"விற்கு எட்டு வயிறாம். எப்பொழுதும் ஆகாரமே நைவேத்யமாம்.

9. இவ்வுலகின் ஸமுத்திரக்கரையை அளந்துகொண்டே சென்றால் மொத்தம் லக்ஷத்து முப்பதினாயிரம் மைலாம்.

10. முன் ஒருகாலத்தில் சூரியன் ஆகாயத்திலிருந்து பூமியில் இறங்கி இரண்டு முட்டையிட்டுத் திரும்பிப் போய்விட்டாராம். அம்முட்டையிலிருந்துதான் ஜனங்கள் உண்டானார்கள் என்று "பெரு" தேசத்திய ஜனங்களின் கொள்கையாம்.

11. ஜலத்தின் வழியாய் 45200 அடிதூரம் கேட்கும் ஒரு மணியின் சப்தம் காற்றுவழியாய் 456-அடிதான் கேட்குமாம்.

12. சென்னையில் மோட்டார் வண்டிகளை வாடகைக்குக் கொடுக்கிறதுபோல் லண்டன் நகரில் ஆகாயவிமானங்களை ஒரு நிமிஷத்திற்கு ஒரு ஷில்லிங்கு விகிதம் வாடகைக்குக் கொடுக்க ஒரு பறக்கும் சங்கம் ஏற்பட்டிருக்கிறதாம்.

13. புதிதாக ஒரு நூதன கடியாரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதில் கிராமபோன் தகடுகளை வாசிக்கவைக்கவும் ஏற்பாடாயிருக்கிறது. நாம் படுத்துக்கொள்ளப் போகும் பொழுது நாம் எந்த மணிக்கு எழுந்திருக்க வேண்டுமோ அந்தமணிக்கு அலாரம் சாவிகொடுத்து வைத்து, நமக்குப் பிரியமான பாட்டுள்ள தகட்டையும் அதில்வைத்து சாவி கொடுத்துவிட்டால் குறித்த மணிக்கு அந்தப் பாட்டைப் பாடி நம்மை எழுப்பிவிடுமாம்.

S. A. ஸ்ரீநிவாஸ சர்மா.

> வீட்டுச் சண்டையில் நீ பொதுவில் இருந்து உள்ளே நடக்கும் கூச்சலைக் கேட்காதவன் போல் வேறு பல சங்கதிகளைப் பேசியபடி இரு. கூச்சலிலும் ஒரு கண் வை. புகார், கலக விவரம் யாவும் கேட்டுக்கொள். சிரிப்புடன் இருந்துவிடு. அடங்குகிற வழியில் அதது அடங்கிவிடும். அவரவர் குணத்தைமட்டும் தெரிந்துவை. ஒவ்வொரு கலகமும் சண்டையும் ஒவ்வொரு தனி மனிதர்களுடைய ரகசியகுணத்தை எடுத்து விளக்கிக்காட்டும்.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்பிரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

பலசரக்கோ பலசரக்கு !



அப்பாடா, போட்டேண்டா தொப்பாலென்று மூட்டையை ; மெத்த பளுவு ! மெத்த பளுவு ! ஊர் சுற்றிவந்ததில் உடம்பு உளைப் பெடுத்துக்கொண்டது; கால் ஓய்ந்து போனது ! ஆயாசம் மேலிட்டுக் கொண்டது ! விகடன் கொண்டுவந்த மூட்டையை அவிழ்த்துக்கொட்டு கிறேன். கிட்டிவந்து அண்ணாந்து பாருங்கள் ! இதோ பார் ஒரு சரக்கு ! என்ன வென்கிறீர் களோ ? அது புதுவருஷத்துச் சேதி ! வருஷந்தான் புதியதே தவிர, அதை ஆண்டனுபவிக்கும் உலகமும் மனிதர்களும் பழய கோயிற் பெருச்சாளிகள் தான் ! பித்தலாட்டத்தின் பிள்ளைகள்தான் ! மோசத்தின் மொக்குகள் தான். வேஷ்டி புதிதேயன்றி அதை உடுப்பவர்கள் புதியவர்களல்ல ! எவ்வளவுதான் பட்டுச் சரிகைச் சேலையைச் சுற்றிக்கொண்டாலும் உள்ளத்துக் கசுமாலம் போவதில்லை யப்பா ! சேலையின் பளபளப்புக்குத் தக்கபடி நல்ல குணத்தின் மினுமினுப்பைக் காணுமே ! இப்படியே ஐயாவின் தலைப்பாகையும் உடுப்பும் வெகு பசந்தாய்க் காட்டினாலும் உள்ளுக்குப் பக்கா சரியாகவே பழய எத்தனாகவே இருக்கிறார் ! இவர்களுக்கிடையே வருகிற வருஷமும் முடிந்துவிட்ட வருஷத்தின் குணங்களையே கொண்டு கடைசி தேதிக்கும் எட்டிப் போய்விடுகிறது. இதன் நடுவிலே புது வருஷக் கோலாகலம் சில மணி நேரத்துக்குத்தான் ! அப்போது செய்துகொள்ளுகிற புது வருஷ சபதங்களும் ஊக்கங்களும் அதிலும் குறைவான சிறிது பொழுதுக்குத் தான் ! அதற்கு அப்பாலே தேதி இரண்டு ! அதிலிருந்து எப்போதும் போல உண்டுடுத்து உறங்குஞ் சங்கதி தான் ! புதிய வருஷமும் பிறகு பழய வருஷமாய்த் தேயத் தொடங்கிவிடுகிறது ! ஒவ்வொருநாளின் உதய காலத்தையும், ஒவ்வொரு புது வருஷத்தையும் அதன்பயன் அறிந்து உபயோகப் படுத்திக் கொள்பவர்களுக்கே அது பிரயோஜனப் படுவதாகிறது.

***

இன்னொரு சரக்கைக் கேட்கிறீர்களா ? அது புது வருஷத்திற்கு ஒரு

நீ பிறருக்குப் புத்தி சொல்லும்போது நீ அவ்வாறு செய்கிறாயா—நடக்கிறாயா—என்று உன் நெஞ்சை நீயே கொஞ்சம் தடவிக் கேள்.

புதுக் கஷாயமாக ஒரு ஞானி ஒரு ஞானச்சுவடியிலே சொல்லியிருக்கிற சங்கதி! அந்த சரக்கை விகடன் என் நஞ்சான் குஞ்சான்களின் நலத்திற்காக இங்கே கொட்டுகிறேன். இந்தப் புதுவருஷத்திலே வருகிற பன்னிரண்டு உருண்டு திரண்ட மாதங்களை யெடுத்து, **மறதி** என்ற தண்ணீரிவிட்டு அதைச் சூழ்ந்திருக்கும் **கசப்பு, பொறாமை, கோபம்** என்ற அசடுகளை அலசிவிடவேணும். பின்னாலே அதை யொட்டியிருக்கும் **சோடுமை கடுமைகளை** நன்றாய்க் கழுவிவிட்டு, **தீர்மானம்** என்ற சூர்கத்தியால் அவைகளின்மேல் இருக்கும் **ஈனக்குணம், இழிவு** என்ற மாசு மறைகளை அறுத்தெரிய வேணும். அப்பாலே அந்த மாதங்களை 30-அல்லது 31-சமபாகங்களாகத் துண்டிட்டு, அதிலே ஒவ்வொரு நாளையும் பின்கண்டபடி சமைக்கவேணும். ஒவ்வொரு நாளிலும் 12-பாகம் **விசுவாசமும்**, 11-பாகம் **பொறுமையும்**, 10-பாகம் **தைரியமும்**, 9-பாகம் **வேலையும்**, 8-பாகம் **நம்பிக்கையும்**, 7-பாகம் **சாந்தமும்**, 6-பாகம் **ஈகையும்**, 5-பாகம் **ஞானக்குணமும்**, 4-பாகம் **இளைப்பாறலும்**, 3-பாகம் **தெய்வ ஸ்தோத்திரமும்**, 2-பாகம் **தியானமும்**, ஒரு பாகம் நல்ல **தீர்மானமும்** சேர்க்கவேணும். இதிலே 9-பாகம் **வேலை** யென்ற மருந்துச் சரக்கை வெகுபேர் மறந்துவிட்டுச் சோம்பலாகிறார்கள். அதிலே கஷாயத்தின் வாசனையும் ருசிகரமும் தப்பிப்போகுது! இதுமட்டுமல்ல, 3-பாகம் **தெய்வ ஸ்தோத்திரமான ஜெபம்** என்ற மருந்துச் சரக்கைச் சிலர் மறந்துவிடுகிறார்கள். இது புளிக் குழம்பிற்கு புளிசேர்க்க மறந்துவிட்ட தத்துவ சாஸ்திரியின் கதைபோலத்தான்! இப்படித் தாறுமாறு செய்யாமல் நல்லவிதமாய்ச் சமைக்கவேணும். இதோடுகூட ஒருகரண்டி **தமாஷும்** ஒருவாய் நிறைய **சிரிப்பும்**, ஒருபக்கா **விளையாட்டும்** கலக்கவேணும். இவைகளோடு தாராளமாக **அன்பைச் சேர்த்து பரிசுத்தத்தின்** அனலான அக்கினியில் அந்தக் கஷாயத்தைத் தயார்செய்யவும். **2-சிரிப்பும், 3-புன்னகையும், 2-3 எக்களிப்பும்** அதனுள் போடவும். இப்படிச் செய்த கஷாயத்தை ஒவ்வொருநாளும் உண்பீர்களானால் புதுவருஷம் உங்களுக்கு சுப வருஷமா யிருக்குமென்பதில் ஐயமில்லை. பிறகு உங்கள் பாடு!

***

வேறொரு சரக்கை அவிழ்க்கிறேன்—கேட்கிறீர்களா? அது **இந்திய தத்துவஞான மகாநாடு** சென்னையில் கூடின சங்கதிதான். இதிலே கொச்சியின் மாஜி மகாராஜா தமது ஞான கலைகளை வெகு நுட்பமும் தெளிவுமாய் விளக்கி, ஆத்மவித்தை இந்தியா ஒன்றில்தான் உள்ளதென்றும், பரஞானத்தைப் பெற்று ஜீவன் முக்தனாதலே மோக்ஷமென்றும், பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றிய அறிவே மானிடவாழ்க்கையை நடத்தி வைக்கத் தூண்டு கோலாகிறதென்றும் வெகு அழகாகப் பேசினார். இந்த ராஜா தமக்கு கல்லபலம் இருக்கையிலேயே மற்றவருக்குப் பட்டங்கட்டி தான் சிம்மாசனத்திலிருந்து விலகி ஹாயியாக வேதாந்த விசாரத்தில் இருப்பவர். இந்த மாதிரி அரசைவிட்டு விலகும் ஞானதத்துவகுணம் இந்தியா ஒன்றில்தான் காணலாம். இந்தியரின் அறிவும், இந்திய தத்துவ சாஸ்திரங்களும் இவ்வுலகத்து வாழ்க்கையை——

குடும்பத்தைக் கலகமின்றிக் கொண்டுபோக விரும்பினால், அதற்குத் தகுந்தான வேறுவித தொனியில் பேசச் சீக்கிரம் கற்றுக்கொள்ளவேண்டும்.

‘அது என்ன, அது என்ன’ வென்று
ரொடுக விசாரித்துக்கொண்டே போய்
கடைசி முடிவுப்பக்கத்துக்கு வந்து,
பிறவியின் விடுதலையான முக்தியிலே
தன் சித்தத்தை நாட்டி, அதைப்பெற
முயலுகிறது. இவ்விதமாக ஆராயுந்
தன்மை இந்தியாவில்தான் காணக்
கிடைக்குமே தவிர, வெள்ளைக்காரத்
துரைகளுக்கு இந்தப் புத்தியில்லை.
உடுக்க—உண்ண—சுகிக்க—குழந்
தைபெற—உல்லாசங் காண—பணத்
தைத் திரட்ட—குடிக்க—இதுகளுக்
குத்தான் பொழுதும் புத்தியும் சரி
யாய் விடுகிறதென்னும் இந்த மகாநாட்
டில் விளக்கிச்சொல்லி இந்திய தத்
துவஞானத்தை உயர்த்திக்காட்டினார்
கள். விகடனுக்கு இந்தக்கூட்டம் ஒரு
அருமையான பொழுது போக்காய்
இருந்தது. பாதகண்டமே ஞானத்
துக்கு இருப்பிடம். ஞானம் என்
பதை இங்கிருந்துதான் பிறதேசத்
தார்கள் கொஞ்சங் கொஞ்சமாய்க்
கைப்பற்றிச் சென்றார்கள். மகரிஷி
கள் அலைந்துதிரிந்த இடம் இந்தியா
தான். ஆத்மஞானம் இத்தேசத்தில்
தான் உண்டாயிற்று. கேவலம் ஒரு
பிச்சைக்காரன் வாயிலுங்கூட ஞானப்
பாட்டுகள் கேட்கக்கூடிய நாடு இந்தி
யாதான். ஏதடா விகடன் வேதாந்தத்
துறையிலே இறங்கி உளற ஆரம்பித்து
விட்டா னென்பீர்களோ! உள்ள
தைத்தான் விகடன் சொல்லுகிறேன்.

⁂

இன்னொரு தமாஷ் சரச்சை
விரிக்கட்டுமா? அது கல்கத்தாவிலே
கூடின ஆசார சீர்திருத்த மகாநாட்
டுச் சங்கதி. ‘சீர்திருத்தம்’ என்றால்,
சீராக இருப்பதைத் தப்பு வழியிலே
திருத்திக் கோணலாக்குவதென்றே
நமது வைதிகக் கிழங்கள் நினைக்கிறார்
கள். உண்மை அப்படியல்ல. சீராக
இருந்து பிசகியதைச் சீர்படுத்துவதே
அதன் நோக்கம். இந்த மகாநாட்டின்
தலைவர் ஸ்ரீமான் ஜயகர் ஒரு நல்ல
குத்து குத்திவிட்டார். அந்த கும்மா
கொழுக்கட்டை என்ன வென்பீர்
களோ? பூர்வம் ஹிந்துக்களாயிருந்து
பின்னாலே தாடிக்காரத் தொப்பி சாய
புக்களாகவும், கிறிஸ்துவச்சாமி மதத்
தினராகவும் மாறிவிட்டவர்களை ஓம்
நமோ நமோ மந்திரம்படித்து மறுபடி
யும் ஹிந்து மதத்துக்குள்ளே பிடித்
துச் சேர்த்துவிடுவது இப்போது
வழக்கமா யிருக்கிறது. அதேபோல்,
தீண்டப்படாத ஜாதி என்பவர்களுக்
கும் இந்த ஓம் நமோ மந்திரம் ஓதி
‘சுத்தி’ செய்து உயர்ந்த ஜாதியாக்கி
விட்டாலென்ன என்று இந்த ஐயா
துரை கேட்டார். இது பேஷான ஒரு
குத்தல் கேள்வி. நல்ல நல்ல ஞானக்
கேள்வி. எவளோ ஒருத்தி அமரிக்கா
நாட்டு வெள்ளச்சித் துரைசானி அம்
மாளை இந்தூர் ராஜாவுக்கு அவரது
‘விவாக’ ஆசைக்காக இந்திய க்ஷத்தி
ரிய ஜாதிப்பெண்ணாக்கி ஓம் நமோ
நாராயணா மந்திரம் சொல்லி உயர்த்தி
விட்ட ஸ்ரீ சங்கராச்சாரியார் இந்திய
ஜெயகர் அண்ணா சொல்லும் யோச
னையையும் கேட்கவேண்டியவர்தான்.
மொத்தத்துக்கு என் விகடஞானத்
திலே தெரிந்து கொண்டிருக்கும் சங்
கதியெல்லாம் ஞானத்திலே உயர்ந்து
ஞானிகளானோர் உயர்ந்த ஜாதி, அந்த
ஞானமற்ற தொப்பைகளும் குப்பை
களும் தாழ்ந்த ஜாதி என்பதுதான்.
தீட்டு என்பதெல்லாம் அசுத்தத்
திற்கு விலகுதலே. பாப்பாரச்சாமி
முழுகாமல் குளிக்காமல் இருந்தால்
ஸ்நானம்செய்த ஒருவன் பாப்பாரச்
சாமியைத் தொட்டால் தீட்டுதான்.
அவ்விடத்திலேயே பஞ்சமச்சாமி

அவமானமடைந்ததை யெண்ணி யெண்ணி வருத்தமடைவதிருக்கட்டும்.
இனி மீண்டும் அவர்களை சட்டைசெய்து அவமானமடையாதிருக்கப் பார்.

குளித்து முழுகி சுசிகரமாய் நின்று கொண்டிருந்தால் அந்தச் சாமியைத் தொட்டுக்கொள்வதிலே ஒரு தீட்டு மில்லை. ஒரு பாப்பாரச்சாமி ஒருவனைக் கொன்றுவிட்டால் அடே சண்டாளா என்று சொல்லாமல் இருப்பதில்லை. ஒரு பஞ்சமச்சாமி குளத்தில் விழுந்த ஒருவனைக் கரையேற்றிவிட்டால் அதற்கு உலகம் 'புண்ணியவான்' என்று போற்றும விருப்பதில்லை. ஆகவே நற்குண ஞானங்கள்கொண்ட வரே உயர்ந்த ஜாதி. நல்லவழி பிசகி நடப்பவர்கள் எவர்களோ அவர்களே தாழ்ந்த ஜாதி. இதிலே இன்னொரு சங்கதி; அந்தந்த ஜாதி அந்தந்த ஜாதி யானுக்கு உயர்ந்ததாகவே படும் என் பதுதான். அதை மற்ற கோவணாண்டி கள் தாழ்த்திச் சொல்லக்கூடாதென் பதே விகடனுடைய வாதம். அதது அதனதன் ஸ்தானத்தில் உயர்ந்ததே. தாழ்த்தி என்கிற சங்கதியேயில்லை. நற்குணம்—தீக்குணம் என்பதில் தான் உயர்த்தி தாழ்த்தியே தவிர, 'ஜாதி' என்பதிலில்லை என்பது விகட னுடைய ஞானம். ஒரு வண்ணாச் சாமி ஒரு பாப்பாத்தி ஆச்சியைக் கல் யாணம் கட்டிக்கொள்ள ஒப்புவானா? ஓ! அதுவேறு ஜாதி——அது வேண் டாமென்பான்! இப்படியாக அந்தந்த ஜாதி தன் நிலையில் உயர்ந்ததே. தாழ்ந் தது என்பதும், தீட்டு என்பதும் வெறும் பூச்சாண்டிச் சங்கதி என்று விகடனுக்குப் படுகிறது. தாழ்ந்தது என்பது குணத்திலே. தீட்டு என் பது சுத்தம் அசுத்தம் என்பதிலே. இதுதான் சுற்றிச் சுற்றிவந்து கடை சியில் காணும் அநுபவ உண்மை!

***

பின்னுமோர் சரக்கை விகடன் அவிழ்த்துக் கொட்டி என் தொன தொனப்புத் தோல் வாயை மூடிக் கொள்ளுகிறேன். ஒரு ஊர் என்றில் லாமல், ஒரு பதி என்றில்லாமல், ஒரு ஜாதி என்றில்லாமல், ஒரு ஜமாத் என்றில்லாமல், ஒரு குலம் என்றில் லாமல், ஒரு கோத்திரம் என்றில்லா மல், ஒரு மதம் என்றில்லாமல், ஒரு மார்க்கம் என்றில்லாமல், ஒரு பெரி யோர் என்றில்லாமல், ஒரு சிறியோர் என்றில்லாமல், ஒருஉயர்ந்தோரென்று இல்லாமல், ஒரு தாழ்ந்தோர் என்றில் லாமல், ஒரு மேலந்தஸ்து என்றில்லா மல், ஒரு கீழந்தஸ்து என்றில்லாமல், ஒரு படிப்பாளி யென்றில்லாமல், ஒரு பாஷைக்காரன் என்றில்லாமல், ஒரு பணக்காரன் என்றில்லாமல், ஒரு ஏழை யென்றில்லாமல் எல்லா மனித ருமே கூடிக்கொண்டு கல்கத்தாவிலே குந்திக் கும்மாளம் போட்டுக்கொண் டிருந்தார்களே! அது என்ன தெரி யுமா? அது தான் 43-வது வருஷக் காங்கிரஸ் அப்பா! மகா மகா பெரிய சபை அப்பா! இந்த மகா சபை இப் போது ஒரு துள்ளு துள்ளி எழும்பிக் குதித்திருக்கிறதய்யனே! அந்தக் காந்தி மகாத்மா தாத்தா இருக்கி றாரே, அவர் ஒரு காரியக்காரப் பேர் வழி. ஓடு மீனோடு ஒரு மீன் வருமள வும் வாடியிருக்கும் கொக்கைப்போல காலத்தை எதிர்பார்த்துக் காத்திருக் கிற பலே பேர்போன பக்கா ராஜ தந்திர நிபுணப்பூச்சாண்டி! அந்த சன்னியாசித் தாதா மறுபடியும் தனது பழய ஒத்துழையாமையைக் கிளப்பி இந்திய உலகத்தை ஒரு உருவாக்க இந்தக் காங்கிரஸிலே ஒரு புதிய உயிர்ச்சரக்கை நுழைத்து விட்டா ரப்பா! நேரு கமிட்டி யதாஸ்தின்படி குடியேற்ற நாட்டுச் சுயாட்சியை இந் தியாவுக்குத் தரவேண்டுமென்பது

நீ முறைப்பாய் இருப்பது சரிதான்; அதற்குத் தகுந்த சரக்கும் மதிப்பும் ஊவிலே பணமுடிப்பும், உன்னிடம் இருக்கிறதாவென்று முதலில் யோசி.

ஒரு கட்சி. ஓ! இது கூடாது; பூரண சுயாட்சியே வேண்டுமென்பது சென்னை ஐயங்கார் சீமானின் கட்சி. இரண்டையும் சமரஸப்படுத்த காந்தி தாதா ஒரு நல்ல யோசனை சொல்லி ராஜி செய்து வைத்தாரு. அதாவது **1929-ம் வருஷம் டிசம்பர் மாதம் கடைசி தேதிக்குள் குடியேற்ற நாட்டு ஆக்ஷிமுறையை இந்தியாவுக்கு வழங்கப் பிரிட்டிஷ் கவர்ன்மேண்டார் இஷ்டப்பட்டால், குடியேற்ற நாட்டு முறையைக் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளுகிறதென்றும், அப்படித் தரா விட்டால் ஒத்துழையாமையில் இறங்கி பூரண சுயேச்சையைப் பெறக் காங்கிரஸ் போராடுவதற்குக் கிளம்பி விடுமென்றும்,** இதைப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்து முடிவை எதிர்பார்ப்போமென்றும் காந்தி தாதா ராஜிசெய்து வைத்தார். அதேமாதிரி காங்கிரஸிலும் இந்த தீர்மானம் நிறைவேறி விட்டது. இதிலே காந்தி தாதா சேர்ந்திருப்பதால் வெறும் வாய்ச்சொல்லாகப் போகாது. காரியத்தில் காட்டும்படியாகிவிடும். 1929-ம் வருஷக் கடைசிக்குள்ளே பிரிட்டிஷ் அய்யா குடியேற்ற நாட்டு ஆக்ஷியைக் கொடுத்துவிடுமா என்பது விகடனுக்குப் பெரிய சந்தேகம் தான். பிரிட்டிஷோ மகா ராஜ தந்திர ஆசாமி யாச்சுதே! ஆனாலும், காங்கிரஸின் பெரிய பலத்தையும் சக்தியையும் அது கொஞ்சம் யோசிக்கவேண்டியே யிருக்கும். கவலைப்படவும் வைக்கும் தான். அது ஏதாவது வாழைப்பழம் இந்தியாவுக்குக் காட்டாவிட்டால் பழய ஒத்துழையாமை நிகழ்ச்சிகள் 1930-ம் வருஷத்திலே கும்மாளம் போடத் தொடங்கிவிடு மென்பதிலும் விகடன் சந்தேகப்படவில்லை. கவர்ன்மெண்டில் பலமெல்லாம் இந்தக் கும்மாளத்தை அடக்கி நசுக்க உபயோகிக்கப்படுமென்பதிலும் ஐயமில்லை. மகாத்மா காந்தி தாதா பெரிய கைக்கார மனுஷராய் இதில் சமயம் பார்த்து வந்து புகுந்துகொண்டதுதான் வெகு வியப்பான சங்கதி! இதை 43-ம் வருஷக் காங்கிரஸிலே ஒரு புதிய உயிர்ச்சரக்காய்,—தாதுபுஷ்டி லேகியத்திலே அபின், கஞ்சா என்ற உயிர்ச்சரக்கைச் சேர்ப்பது 'போல்,—இதைச் சேர்த்துவிட் டிருப்பதிலே, இது எவ்வளவு தூரத்துக்கு மயக்கத்தையும் தாது புஷ்டியையும், அதிலிருந்து சுயாட்சிப் பேறு ஆன புத்திரசந்தானங்களையும் கொடுக்கப்போகிறதோ என்று விகடன் 1930-ம் வருஷத்தின் துவக்கத்தை எதிர்பார்த்து நிற்கின்றேன். ஈசா! இது எப்படியாகுமோ! எவ்வாறெல்லாம் கிழியுமோ! ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

தன் குற்றம் மறைப்பு.

பிறரின் தீயசெயல்களை யெல்லாம் ஒருவன் விவரித்து நீதிகள் சொல்லுகிறான். ஆனால் தன் செயல்களால் கெட்டுண்டவர்களை மட்டும் முழுதும் மறைத்துவிடுகிறான். தன் தீய தன்மைக்குப் பதிலாகத் தன்னையொரு பரம யோக்கியன் போல் உயர்த்திப் பேசிக்கொள்ள அவன் அதிகமாய் முயல்கிறான். இது ஒரு தந்திர சூட்சி. இதில் மயங்காதே.

அகட விகடம்!

"குடியும் குடித்தனமுமாய் வாழு" என்ற வழக்கச் சொல்லுக்கு, குடித்தனத்திலே மதுப் பழக்கத்தைச் சேர்த்துக் கொள்ளுவதென்று அர்த்தமா என்று ஒரு விகடக் குஞ்சு கேட்கிறதாம்!

***

1929-ம் வருஷக் கடைசிக்குள் குடியேற்ற நாட்டு ஆட்சியைப் பிரிட்டிஷார் வழங்குவதைப் பற்றி ஒன்றும் சொல்லாவிட்டால் மகாத்மா முந்தியதுபோல் ஒத்துழையாமையைத் தொடங்குவதாகச் சொல்லுகிறாரே இது எங்கே பலிக்கப்போகிறதென்று சிலர் விகடனிடம் கூற, அவர்களைப் பார்த்து விகடன் நீங்கள் பழைய ஒத்துழையாமையின்போது உத்தியோகத்தை விட்டதுபோலவும், பட்டத்தை எறிந்தது போலவும், சிறைக்குப் போனது போலவும், இந்தப் புதிய ஒத்துழையாமையில் கஷ்டப்பட வேண்டியதில்லை; உங்களை யழைக்கவுமாட்டார்கள். நீங்கள் பழிக்காமல் இருந்தால் அதுவே போதுமென்று பதில்சொல்லி யனுப்பினானாம்!

***

ஒரு பெரிய சண்டைக்கும் கலகத்திற்கும் இப்போது பின்னாலிருந்து தட்டிக் கொடுப்பவர்களெல்லாம் நாளைக்கு அதனால் குடும்பம் கெட்டுப்போனால் எட்டிப் பார்ப்பார்களாவென்று ஒரு புது ஸம்சாரி விகடனைக் கேட்டதற்கு, இப்போது குதி, குதி, என்பவர்களெல்லாம் பிறகு உன்னோடே கூடக் குதிக்கமாட்டார்கள் உஷார் என்று பதில் சொன்னானாம்!

பொங்கல் பொங்கிற்று?

"பொங்கல் பொங்கிற்று?" என்று ஆநந்தமாய் ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டு குதூகலப்படும் நண்பர்கள் அந்த சமயம் "அமிர்த குணபோதினி" யின் அபிவிர்த்தியையும் சற்று மனதில் வைத்துக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். தாங்கள் சந்திக்கும் அன்பர்களிடம் (1) நீங்கள் எவ்வளவு புது சந்தாதார்களைச் சேர்த்து அனுப்பினீர்கள் என்றும், (2) உங்கள் வீட்டில் எவ்வளவு பேர் "அமிர்த குணபோதினி" யை வாசிக்கிறார்கள் என்றும், (3) உங்களுக்கு "அமிர்த குணபோதினி" வருகிறதா? என்றும், (4) இல்லையானால் இப்படி ஒரு உத்தம பத்திரிகையைத் தருவிக்காமலிருக்கலாமா வென்றும், (5) பொங்கற் புது நாளின் சுவையைப்போல் ஒவ்வொரு மாதத்திலும் "அமிர்த குணபோதினி" தபாலிலிருந்து வரும் நாளின் சுவையும் மிக்க ஆநந்தமாய் ருசிக்குமாதலின், இன்னொரு பொங்கல் வருமளவும் அதற்குப்பதிலாக இந்த அமிர்தமாகிய பொங்கலையுண்டுப் பெருமகிழ்வு கொள்ளலாமென்றும் எடுத்து விளக்கி, பந்து மித்திரர்களை "அமிர்த குணபோதினி"க்குச் சந்தாதாரர்களாய்ச் சேர்த்து எங்களுக்கு புதிய ஊக்கம் ஊட்டுமாறுவேண்டிக் கொள்ளுகிறோம். சுடர் விளக்காயினும் தூண்டுகோலின்துணையும் வேண்டுமன்றோ? ஆதலின், உங்களின் உதவி இது சமயம் அதிக அவசியம். உங்களின் கருணையை எதிர்பார்க்கிறோம்.

சென்றமாதம்

“தோன்றிற் புகழொடு தோன்றுக” என்றவாறு இப்போது பாரத ஜன மகா ஸபையாக விளங்கும் காங்கிரஸ் மகா சபை

43-வது வருஷக் காங்கிரஸ் மகா சபை.

சென்ற டிசம்பர் மாதம் 29-ம் தேதியன்று கல்கத்தாவில் கூடிற்று. உபசாரணைச் சபையின் தலைவரான ஸ்ரீமான் சென்குப்தா பிரிட்டிஷ் ஆட்சியின் காரணமாக இந்தியா அடைந்த நஷ்டம், கஷ்டம் பாடுகளை யெல்லாம் வெகு விரிவாகப் பேசினார். காங்கிரஸ் சபையிலன்றி வேறோரிடத்தில் இத்தனையும் பேசியிருந்தால் இதற்கு ராஜத்துவேசக்குற்றங்கூடக் கற்பிக்கப்படலாம். ஆனால் வார்த்தைகள் அத்தனையும் சரித்திர பூர்வச் சொற்களாயும் அசைக்க முடியாததாயுமிருந்தன. கடைசியில் அவர் கூறியதாவது:— “பகலெல்லாம் சுவாதீனத்தைப் பற்றியே யோசிக்கவேண்டும். இரவெல்லாம் அதைப்பற்றியே கனவு காண வேண்டும். இந்தியாவில் பெண்களும் பிள்ளைகளும் ஸமத்வம், ஸகோதரத்வம் என்று கூவிக்கொண்டு இந்தியாவின் விடுதலைக்காக முன் செல்ல வேண்டும்—” என்றார். அதன்பின் **பண்டித மோதிலால் நேரு** தமது அக்கிராஸனப் பிரஸங்கத்தில் இனிச் செய்யவேண்டியவற்றையே வற்புறுத்தி, குடியேற்ற நாட்டு ஆட்சி முறையையும் பிரிட்டிஷார் வலுவில் கொடுத்துவிட மாட்டார்களென்றும், அவர்களைக் கட்டாயப்படுத்தும்படியான நிலைமையைத் தேசத்தில் உண்டுபண்ண வேண்டுமென்றும், ஒற்றுமை அதற்கு மகா பிரதான்யமென்றும் வெகு தெளிவாக எடுத்துக்காட்டினார். அவரது பொன்னுரைகளிற் சில குறிப்புகளை இங்கு தருகிறோம். *** “விடுதலையின் நிமித்தம் இன்னொரு பெரிய போராட்டம் சம்பவிக்கப்போகிறது.” ** “எந்த லட்சியமாயிருந்தாலும் அதற்கேற்ப நடந்துகொள்ள ஆற்றல்வேண்டும். அர்த்தமில்லாத வெறும் பேச்சுப் பேசுவதால் ராஜீயத்துறையில் நாம் முன்னுக்கு வரமுடியாது.” ** “தற்கால நிலைமையில் ஒரு அம்ஸத்தை மிகைப்படுத்துவது எப்படிப் பிசகோ, அதுபோல் இன்னொரு அம்ஸத்துக்குரிய முக்கியத்தைக் கொடுக்க மறுப்பதும் பிசகுதான்.” ** ஒரு சாரார் நமது பலஹீனத்தைப் பெரிதாய் மதித்து நமக்குக் கொடுமை இழைப்போரது தயவையும் நல்லெண்ணத்தையும் பெற்றாலன்றிக் கதிமோக்ஷமில்லை யென்கிறார்கள். மற்றொரு சாராரோ நமது பலஹீனத்தையும் எதிர்ப்பக்கத்தின் பலத்தையும் யோசியாமல் ஆழந்தெரியாத கடலில் கூசாமல் இறங்கப்பார்க்கிறார்கள். இவ்விரு படுகுழியிலும் விழாமல் நடுநிலைமையில் நின்று தகுதியான ஒருவேலை முறையை வகுக்க

சென்றது பேசிப் பெருமை உயராது. இப்போது உள்ள கௌரவமும் வருமானமும் குறையாமல் பெருகுவதாயிருந்தால் அதுவே பெரிய லாபம்.

வேண்டும்'' ** ''நாம் மூன்று கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டும். (1) நமது தற்கால நிலைமை யென்ன? நமது போக்கென்ன? (2) நமது முடிவான உத்தேசம் எது? (3) எந்தவழியில் அந்த உத்தேசத்தை நிறைவேற்றிக்கொள்வது? போகும் வழியென்ன? ஆகியவைதான்.'' ** ''சொந்த நாட்டிலேயே நமக்கு அதிகாரமில்லை. நிர்வாகத்தில் திறமையாகக் கலக்க உரிமையில்லை.'' ** ''நமக்கு ஜவாப்தாரி ஆட்சி கொடுக்கிறோம் என்ற உறுதிமொழிகளையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு, இந்த சைமன் கமிஷன் நியமனத்தைச் செய்திருக்கிறார்கள்.'' ** ''மதக் கோட்பாடுகள் எவ்வளவு உயர்ந்தனவாக இருந்தாலும், தற்போது நமது தினசரி வாழ்க்கையில் அவை மத வெறியையும் சகிப்பற்ற தன்மையையும் குறுகிய நோக்கத்தையும் வளர்க்கக் கூடியனவாக இருக்கின்றன. அவைகளினால் சுயநலம் பெருகுகிறது. ஸமூகம் நல்ல நிலையடைவதற்கான வழிகள் ஏற்படாமலும் போகின்றன. மதத்தின்பேரால் குற்றங்கள் பலவும் இழைக்கப்படுகின்றன.'' ** ''கல்வியினாலாய பயனெல்லாம் அடுத்துள்ளவர்களோடு ஒத்துழைப்பதும், தான்பெற்ற இன்பம் பிறரும் பெற்றுய்யவேண்டுமென்பதுமேயாம், இதன் மூலம்தான் சுயநலப்பற்று ஒழியும்.'' ** ''ராஜீயவிஷயத்தில் மதக் கோட்பாடுகளைக் கலக்கவிடுவதால் இரண்டுக்கும் நன்மையில்லை. மதவிஷயங்களுக்கு அதனால் தாழ்வு ஏற்படுவதோடு, ராஜீய விஷயமும் பாழ்பட்டுப்போகிறது. ஆகவே, அவ்விரண்டையும் தனித்தனிப் பிரித்துவிடுவதே பரிகாரமாகும்.'' ** ''நமது ராஜீயவாழ்வில் மற்றொரு சாபம் தலைவர்களுக்கிடையே அபிப்பிராயபேதமே. இது முன்னேற்றத்தைத் தடுத்துப் போராட்டத்தை முதிரப் பண்ணுகிறது.'' ** ''இரண்டுவித கஷ்டங்களுக்கிடையே நாம் இப்போது உள்ளோம். ஒன்று அன்னிய ஆட்சியால் ஏற்பட்டது. மற்றொன்று நாமே தேடிக்கொண்டது.'' ** ''பூரண சுயேச்சைக் கிளர்ச்சி இருந்தால்தான் அதிகாரிகள் அதற்குச் சற்றுக் குறைவான ஒன்றைக் கொடுக்கவாவது மத்தியஸ்தம் பேச வருவார்கள். வெறும் வாய்ப்பேச்சுப் பேசிக்கொண்டிருந்தால் நாம் அந்த நிலையை அடைய முடியாது.'' ** ''காங்கிரஸ் வாதிகள் சம்பந்தப்பட்டவரையில் தீண்டாமையை அறவே ஒழித்துவிட வேண்டும்.'' ** ''யுவர்கள் தங்களுடைய மனோபாவத்தை விட்டுக் கொடுக்கவேண்டாம். ஆனால் அவர்கள் ஊழியம் செய்ய உத்தேசிக்கும் தாய் நாட்டின் நன்மையைக் குறித்துக் கட்சிகளை வளர்க்கவேண்டாம். இப்பொழுது இருந்துவரும் கக்ஷிகளே போதும்.'' ** ''நாம் தோளோடு தோள் நின்று ஒருமுகமாகச் செல்வோம். வெற்றி நிச்சயம். வந்தேமாதரம்!'' ** அடுத்த காங்கிரஸ் லாகூரில் கூடும். மற்றவைகளை 'விகடப் பிரதாப'னில் காண்க.

***

பனகால் ராஜாவின் அந்தியம்.

''உள்ளிருந்தாருக்குத் தெரியும் உள் வருத்தம்'' என்பதாய், ஒரு காரியத்திற்குத் தலைமையாக உள்ளுக்கிருந்து யாவும் சுமந்து பொறுப்பேற்று நடத்துபவர்க

பெண்கள் தம்மையொத்த பெண்களுடன் கூடிக் குலாவி நாணமற்று மனோகாமாய் ஒருங்கே துள்ளிக் குதித்து அனுபவிக்கும் பூரிப்பும், இன்பமும், ஆடவர்கள் தங்களையொத்த புருடக்கூட்டத்துள் ஒருபோதும் அனுபவிக்க இயலா.

ளுக்கே அதன் பிரயாசையும் பலனும் தெரியும். அப்படியான ஒரு பெரிய பலனையும் ஒரு புது அபிப்பிராயத்தையும் முதன் முதலாகப் பிராமணரல்லாதார் விஷயமாகக் கொண்டவர் டாக்டர்நாயராவர். அவரது கற்பனைசக்தியிலிருந்தே பிராமணரல்லாதாரின் கக்ஷி உருவாயிற்று. அதன் விருத்திகரமான தசையில் அவர் முடிந்துவிட, பிறகு அது ஸ்ரீமான் தியாகராயசெட்டியாரால் வளர்க்கப்பட்டது. அவருக்கும் டாக்டர் நாயருக்கும் பெரிய கைத்துணையாய் பனகால் ராஜா விளங்கிவந்தார். ஸ்ரீமான் செட்டியாரவர்களும் கடவுள் பதமடைந்துவிட்டனர். கடைசியில் எஞ்சிநின்ற பனகால் அரசரும் சென்றமாதத்தில் பரமனடி சேர்ந்துவிட்டார். ஏதோ ஒரு விஷசுரம்அடித்துத் திடீரெனப் போய்விட்டார். பிராமணரல்லாதார் கக்ஷிக்கு அவர் ஆதிமுதல் துணையாயிருந்ததன்றி, அதிலும் இந்த சமயம் அவரே பிரதான நாடியாகவும் இருந்துவந்தார். சென்னை அரசாக்ஷி ஸ்தானத்தைத் தம் இஷ்டப்படி செலுத்தும் ஒரு ராஜதந்திர நிபுணராயும் விளங்கினார் என்றும் சொல்லவேண்டும். ராஜாவுக்குரிய கம்பீர குணத்துடனும் விளங்கிய அவரது பிரிவுக்குப் பெரிதும் வருந்துகிறோம். பிராமணரல்லாதார் சார்பில் உள்ளிருந்து பாடுபட்ட இந்த மூன்றுவது உத்தமரும் போய்விட்டது பெரிய துர்ப்பாக்கியமே.

***

"இணங்கினால் தீத்தீப்பு, பிணங்கினால் கசப்பு" என்பதை டில்லியில் கூடிய முஸ்லிம் மகாநாட்டில் அக்கிராஸனம் வகித்த கனம் ஆகாகான் தமது பிரசங்கத்தில் நன்றாகக் காண்பித்து ஹிந்து முஸ்லிம் ஐக்கியத்தை வளர்க்கவேண்டுமென்று பேசினார். பசுபலி அவசியமில்லையென்றார். அதற்குப் பதிலாக வேறொன்றைப் பலி தந்து ஹிந்துக்களின் மனம் புண்படாதிருக்கச் செய்து ஒத்துவாழவேண்டுமென்றார். சில விஷயங்களில் அவர் பட்டுக்கொள்ளாமற் பேசியிருந்தபோதிலும், பசுபலி விஷயத்தை முற்றிலுமே வேண்டாமென்று அவர் வெகு தெளிவாய் எடுத்துரைத்திருப்பதை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

முஸ்லீம் மகாநாடு.

அவதூறு !

அவதூறின் முனையோ, வாளின் முனையைப் பார்க்கிலும் அதிக கூர்மையுள்ளது. அதினுடைய நாக்கோ பாம்புகள் எல்லாவற்றினுடைய விஷத்தைப் பார்க்கிலும், அதிக விஷமுடையது. அதினுடைய சுவாசமோ பெருங் காற்றைப்பார்க்கிலும் அதிக வேகத்துடன் போய் உலகத்திலுள்ளவர்களைப் பழி சொல்லுகிறது. இந்த விஷத்தன்மையான அவதூறு பெரிய உத்தியோகஸ்தர்களிடத்திலும், பெண்கள் சிமோட்டிகளிடத்திலும் எல்லா இரகசியமான இடங்களிலும் அதிகமாய் நுழைகிறது ! இதற்குத் தப்பினோர் மிகவும் அபூர்வம் !